
கல்கி
KALKI 3.12.89 ரூ. 2.50
சின்னத்திரையில்
சித்திரப்பாவை

இப்போது, விம்
ஏறக்குறைய பாதிவிலையிலே...



பேரச் சலுகை
அளிக்கும் (கேரிபேக்) தூக்குப் பை.



இப்போது ஏறக்குறைய பாதி விலையில் கிடைக்கிறது நீங்கள் விரும்பும் விம் ... பணமிச்சம் தரும் (கேரி பேக்) தூக்குப் பைகளிலே!

ஒப்பிட்டுப் பாருங்களேன்

பேக்	100 கிராம் விலை
500 கிராம் கேனிஸ்டர்	135 பைசா
2.5 கிலோ கேரிபேக் பை	75 பைசா

உபயோகிப்பிலேயோ மேலும் சிக்கனமாய் கிடைக்கிறது இதில் உங்களுக்கு ஒரு துளியளவு விம் உபயோகமோங்கும் நுரை கொழித்து பிசுக்குகளை விலக்கி வெளியேற்றுகிறது கறைகளுக்காக ... அதிகப் பாத்திரங்களைத் துலக்குகிறது ஒளிமினுக்க.

விரைந்தோடி இன்றே வாங்குவீர் புதிய விம் கேரிபேக் உங்கள் தேவைகளுக்கேற்ற அளவிலே (தேர்ந்தெடுக்க கிடைப்பவை 500 கிராம், 1 கிலோ, அல்லது 2.5 கிலோ பேக்குகள்)

ஒரு துளி விம் தரும் துலக்கம் அதிகப் பாத்திரங்கள் ஒளிமினுக்கும்

LINTAS VG 482 2213 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு



• ஆர். கே. ஜேக்கப்

ஒருமைப்பாடு சிதைய உழைக்கிறார்கள்!

அகமதாபாதின் ஓர் ஓரத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் சதாரா என்கிற குக்கிராமம் திடீரென்று கடந்த செப்டம்பர் 25 ஆம் தேதி விழித்துக் கொண்டது. என்.எஸ்.ஸின் தேசிய ஒற்றுமைக் கூட்டம் அங்கு நடைபெறுவதற்காகப் பரபரப்பான ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தியாவின் சகல திசைகளிலிருந்தும் கல்லூரி மாணவர்கள் பறந்து வந்தனர். ''கூட்டத்தின் நோக்கம் தேசிய ஒற்றுமையை வளர்ப்பது என்று சொல்லப்பட்டதால் மகிழ்ச்சி ததும்பும் இதயத்தோடு நாங்கள் சதாராவில் இறங்கினோம். ஆனால் துரதிரஷ்டவசமாக எல்லாமே புஸ்வாணமாயிற்று.....'' என்று வருத்தத்தோடு சொல்கிறார் மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்திலிருந்து என்.எஸ்.எஸ் ப்ரோக்ராம் ஆபீசராய் அனுப்பட்ட ஆர்.கே. ஜேக்கப்.

''நாங்கள் சகலரையும் மதிக்கும் மனசுடன் தான் அங்கு போனோம். மொழி கடந்து, மதம் கடந்து பழகவே விரும்பினோம். ஆனால் ஏமாற்றம் எங்களைச் சூழ்ந்தது. நிகழ்ச்சி நிரல் என அவர்கள் தந்த அட்டவணை இந்தியிலேயே இருந்தது. சகலமும் இந்தியிலேயே இருந்தன. இந்தியிலேயே நடைபெற்றன. கேரளாவிலிருந்து வந்த ஜெயசந்திரன் என்கிற புத்திசாலி மாணவர், இந்தி தெரியாத காரணத்தினால் ஒதுக்கப்பட்டு, அவர் அளவு புத்திசாலி இல்லாத ஓர் இந்தி மாணவி குழுத்தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மொழி கடந்து, நிஜமான திறமைகளை அங்கு யாரும் அங்கீகரிக்கவில்லை.

''கடந்த வருடம் கன்யாகுமாரி, விவேகானந்தா கேந்திராவில் நாங்கள் இதே கூட்டத்தை நடத்தின போது, நாங்கள் பேசின ஒவ்வொரு வார்த்தையையும் வந்திருப்பவர்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதில் அக்கறையாயிருந்தோம். ஆனால் சதாராவில் நடந்த எதுவும் எங்களுக்குப் புரியவில்லை. எங்களை மற்றவர்களோடு பிணைக்கவில்லை. இன்னொரு அவமானம் தந்த விஷயம் — இந்திக்காரர்கள் தந்த கலை நிகழ்ச்சிகளுக்குக் காலவரையின்றி அனுமதி அளித்தனர். தென்னிந்தியர்கள் தங்கள் நிகழ்ச்சிகளைத் தரும் போது, விளக்குகளும், மின்விசிறிகளும் அணைக்கப்பட்டன. பார்க்கவே பிடிக்காதது போல் எல்லோரும் எழுந்து வெளியே போனார்கள்.

''இதற்குக் காரணம் — அவர்களுள் இருந்த மொழி வெறி. அதனால் பலருக்கு ஆங்கிலமே தெரியாத நிலை. உதாரணம் சொல்கிறேன். சதாராவிலுள்ள போஸ்ட் — ஆபீஸிலிருந்து எங்கள் பல்கலைக்கழகத்துக்கு நாங்கள் வந்து சேர்ந்தது குறித்துத் தந்தி அடிக்க நான் சென்றேன். அங்கிருந்த போஸ்ட்—மாஸ்டர் தந்தி அடிக்க வேண்டாம் என்று வற்புறுத்தினார். நான் அடிக்க வேண்டும் என்று திரும்பத் திரும்பச் சொன்னேன். இறுதியில்தான் தெரிந்தது, அவர் ஆங்கிலம் வாசிக்கச் சிரமப்பட்டார் என்று!

''தேசிய ஒற்றுமை என்பது, காந்தியால், நேருவால், ராஜாஜியால் வளர்க்கப்பட்ட உன்னதமான ஒன்று. அது இன்றைய அரசியல்வாதிகளின் கைகளில் சிக்கி நசுங்கி, ஒரு மொழியின் ஆதிக்கத்தால் அழிந்து விடக் கூடாது என்றே பயப்படுகிறேன்'' — என்று வருத்தத்தோடு சொன்னார் ஆர்.கே. ஜேக்கப்.

சந்திப்பு: **தமயந்தி**



குடில்களில் வளரும் குபேரர்கள்...

* பள்ளியின் தோற்றம்

'ஜீவாசிரமம்' என்பது பள்ளியின் பெயர். சென்னை — பெங்களூர் பாதையில் குப்பம் ரயில் நிலையத்திலிருந்து சுமார் இருபத்தைந்து கி.மீ. தூரத்தில் இருக்கிறது. போகும் வழியெங்கும் பச்சைப் பசேல் மரங்களும் செடி, கொடிகளும் வயல் வெளிகளுமாகக் கண்களைக் குளிர்ச்சியால் குளிப்பாட்டுகின்றன.

இருபத்து மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள பள்ளியின் வகுப்பறைகள், தங்கும் விடுதிகள், நூலகம், தியான நிலையம் என்று அனைத்துமே குடில்களாகக் காட்சியளிக்கின்றன. ஒருவேளை, 'ஜீவாசிரமம்' என்பது ஆசிரமம்தானோ, பள்ளிக்கூடம் இல்லையோ என்கிற சந்தேகம் நமக்கு!

''இங்குள்ள மாணவர்கள் அதிகாலை நாலரை மணிக்கே எழுந்து விடுவார்கள். ஐந்து மணிக்கு யோகாசனம், தியான வகுப்புகள். பிறகு படிப்பு. அப்புறம் காலை உணவு. பின்னர் வழக்கமான வகுப்புகள் ஆரம்பமாகின்றன. பிற்பகல் உணவுக்குப் பின்னும் வகுப்புகள். மாலையில் விளையாட்டுக்கள்...' என்று பள்ளியைச் சுற்றிக் காண்பித்துக் கொண்டே வந்த இருபத்தாறு வயது இளைஞரும், பள்ளியின் செயலருமான நிர்மல் கூறியபோது நமது சந்தேகம் மேலும் வலுப்பட்டது!

இங்குள்ள மாணவர்கள் சென்ட்ரல் போர்டு பாடத் திட்டப்படிதான் புத்தகங்கள் படிக்கிறார்கள்....'' என்கிறார் டாக்டர் சங்கர், நமது சந்தேகத்தை உணர்ந்து கொண்டு பதிலளிப்பதைப் போல.

''சாதாரணமாகப் பள்ளிகள் என்று நமக்குப் பழக்கப்பட்டவை எல்லாமே ஒரே மாதிரியானவை. பத்து மாணவர்களில் ஒருவன் நன்றாகப் படித்து முன்னேறுவான். மற்றவர்கள் கடனே என்றுதான் படித்துத் தேர்ச்சி பெறுவார்கள். அப்படிப் படித்துத் தேறியவர்களும் சரி, தேறாதவர்களும் சரி, அனைவருமே ஜாதி, மதம், இனம் என்று நடைமுறை உலகில் உள்ள அனைத்து வட்டங்களிலும் சிக்கி உழல்பவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

''பள்ளிகள் என்பவை இந்த வட்டங்களையெல்லாம் கடக்க உதவு பவையாக இருக்க வேண்டும். அறிவைத் தரும் மையங்களாக இருக்க வேண்டும். அறிவு என்பது வெறும் புத்தகப் படிப்பு மட்டுமல்ல; வாழ்தல் என்ற கலையைக் கற்றுணர்வது; அது பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குவது. அதைத்தான் இந்த ஜீவாசிரமம் செய்து வருகிறது.

''சாதாரணமாக விதைக்கிற போது என்ன செய்கிறோம்? விதைகளை யாரும் தரிசு நிலத்தில் விதைத்து விட்டுப் பலனை எதிர்பார்ப்பதில்லை. விதைப்பதற்கு முன், நிலத்தைப் பண்படுத்தி, நீர்பாய்ச்சி உரமிடுகிறோம். அது போல்தான் கல்வி என்ற விதையைக் குழந்தைகளின் மனத்தில் விதைப்பதற்கு முன், அந்த மனத்தைப் பக்குவப்படுத்த வேண்டும். அதைத்தான் யோகாசனத்தின் மூலமும், தியானத்தின் மூலமும் செய்கிறோம்.

''கற்பதற்கான பக்குவத்திற்கு முதலில் மனத்தைக் கொண்டு வந்து விடுவதால், இதில் புத்திசாலி மாணவன், முட்டாள் மாணவன் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போகிறது. கற்பிக்கப்படும் பாடத்தைக் கிரகித்துக் கொள்ளும் ஆற்றலில் அனைவரும் சமநிலையிலேயே இருக்கிறார்கள்.


அனைத்து மாணவர்களின் தரமும் ஏறத்தாழ ஒரே மாதிரியாக இருக்கிறது. வேண்டுமானால் நீங்களே சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்....'' என்கிறார் டாக்டர் சங்கர்.


நாமும் சில மாணவர்களிடம் பேசிப் பார்க்கிறோம். மிகவும் பிற்பட்ட பகுதிகளிலிருந்து வந்திருக்கும் மாணவர்கள் பேசும் ஆங்கிலமும் விஷயமும் நம்மை அயர வைக்கின்றன. ஏறத்தாழ அனைவருமே எழுபத்தைந்து மார்க்குகளுக்கு மேல் வாங்கிக் கொண்டிருப்பவர்கள். குறைவான மார்க் என்ற பேச்சுக்கே இடமில்லை!

''யோகமும், தியானமும் எங்கள் கல்வியில் தெளிவைத் தந்திருக்கின்றன. எதையும் வெகு எளிதாகப் புரிந்து கொள்கிறோம். இங்குள்ள சூழ்நிலை ஜாதி, மத வேறுபாடுகளை அறவே மறக்கடித்து விடுகின்றன. தியானத்தின் போது இந்து மாணவன் சிலுவைக் குறியையும், முஸ்லிம் மாணவன் இந்துக் கடவுளையும், கிறிஸ்துவ மாணவன் பிறை நட்சத்திரத்தையும் பார்க்கும் பக்குவம் எங்களுக்கு வந்திருக்கிறது...'' என்கிறார்கள் அந்த மாணவர்கள்.

'குடில்களில் வளர்ந்தாலும் உண்மையான கல்விச் செல்வத்தைப் பெற்றுவிட்ட இந்த மாணவர்களைவிடப் பெரிய குபேரன் யார்?' என்ற எண்ணம் நமக்குள் எழுகிறது.

> ❝ அறிவு என்பது வாழ்தல் என்ற கலையைக் கற்றுணர்வது... ❞





* எல்லோரும் ஓர் நிறை...


''இந்த மாதிரியானதொரு பள்ளியை ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு எப்படி உண்டானது?'' — டாக்டர் சங்கரிடம் கேட்டோம்.

''எனது பெற்றோருக்கு ஜே. கிருஷ்ணமூர்த்தியிடம் மிகுந்த ஈடுபாடு. அதனால், நானும் சிறு வயது முதற்கொண்டே அவருடைய பேச்சுக்களைக் கேட்கும் வாய்ப்பையும் அவரோடு கலந்துரையாடும் வாய்ப்பையும் பெற்றேன். அவர் அடிக்கடி கூறிய, 'வெளியுலகின் நிர்ப்பந்தங்களைக் கடந்த சுய மலர்ச்சி'யையும் அது தருகிற விடுதலையுணர்வையும் சந்தோஷத்தையும் மெல்ல மெல்ல உணர ஆரம்பித்தேன்.

''இதெல்லாம் எனது பள்ளி மற்றும் கல்லூரிக் காலங்களில் தொடர்ந்து ஒரு புறம் வளர்ந்து கொண்டே வந்தது. கடைசியில் நான் ஜெர்மனியில் அணு விஞ்ஞானத் துறையில் ஆய்வு செய்தபோது ஒரு 'தேடுதல்'



* டாக்டர் சங்கர்



* விஜயகுமார்

என்னுள் கிளர்ந்தெழுந்தது. ஒருநாள், 'என் வாழ்க்கை இந்தியாவின் எதிர்காலத்துடன் சம்பந்தப்பட்டிருக்கிறது' என்ற எண்ணம் தோன்றி வலுப்பட்டது. வளமானதொரு எதிர் காலத்தை உதறித் தள்ளுகிறேன் என் பதை முழுமையாக உணர்ந்தே கடந்த 83ல் சென்னைக்குத் திரும்பினேன்.

''பெங்களூரிலுள்ள ஜே. கிருஷ்ணமூர்த்தி பள்ளியில் பிரின்ஸ்பலாகச் சேர்ந்தேன். அங்கு எனது பால்ய நண்பர் விஜயகுமார் நிர்வாகி. இருவருடைய லட்சியமாகவும் ஒரு பள்ளி ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று விரும்பினோம். டாக்டர் ராஜசேகர் ரெட்டி நிலமளிக்க பலரின் உதவியோடு 84ல் இப் பள்ளி ஆரம்பமானது...'' என்றார் டாக்டர் சங்கர்.

''எங்கள் பள்ளி புதிய நோக்கை உருவாக்கும்; மாணவர்களை முழு மனிதனாக்கும் கல்வியைத் தரும்....'' என்றார் அனைவராலும் 'பரமகுரு' என்றழைக்கப்படும் விஜய குமார்.

மூன்பு இப்பள்ளிக்கு அங்கீகாரம் கொடுக்க சென்ட்ரல் போர்டு எல்லா விதிகளையும் தயக்கத்தோடுதான் தளர்த்திய தாம். சமீபத்தில் இப்பள்ளிக்கு இன்ஸ்பெக்ஷன் வந்த போர்டின் செயலர், பள்ளியின் தேர்ச்சி நிலை கண்டு பிரமித்துப் போய்விட்டாராம். இதன் வெற்றியைக் கண்டு பிற பள்ளிகளிலும் யோகம், தியானம் ஆகிய பயிற்சி முறைகளைச் சேர்க்க முடியுமா என்றும் செயலர் யோசித்து வருகிறாராம்!

கல்வியுலகில் புறப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தப் புதிய ஊற்று எல்லா இடங்களிலும் பரவிப் பாய்ந்து வளப் படுத்துமானால் அதைவிடச் சந்தோஷம் வேறென்ன இருக்க முடியும்?

— சாருகேசி

படங்கள்: யோகா

''உங்க கட்சிக்கு மக்கள் ஆதரவு அதிகரிச்சிருக்குன்னு எப்படிச் சொல் றீங்க?''

''போன தேர்தலில் ஐம்பது பேரை நிறுத்தினோம். ஐம்பது பேருக்கும் டிபாசிட் போச்சு; இந்தத் தடவை இருபத் தைந்து பேரை நிறுத்தினோம் இருபத் தைந்து பேருக்குத்தான் டெபாசிட் போயிருக்கு!''

— எஸ். ப்ரியதர்ஷினி.





நிருபர்: உங்க ஐந்து ஆண்டு காலச் சாதனை என்ன?

அரசியல்வாதி: ஊழலை ஒழிக்க அடச்சீ! ஊழலை ஒழிக்க எவ்வளவு அரும்பாடுபட்டிருக்கோம்!

— பாபு.

○○ எந்தப் பழக்கமும் முதலில் சிலந்தி வலை போன்று இருக்கும்; அதுவே நாளடைவில் இரும்புச் சங்கிலி போல உறுதியானதாக மாறி விடும்.

— எட்வர்ட்ஸ்

தகவல்: எஸ். குருமூர்த்தி.



சித்திரப்பாவை

அகிலன் எழுதிய ஞானபீட விருது பெற்ற நாவலான 'சித்திரப்பாவை' தற்போது தொலைக்காட்சியில் விளம்பர தாரர் தொடராய் ஒளிபரப்பாகிறது. அதைப் பற்றிச் சில சுவாரஸ்யமான தகவல்கள்...

அகிலன் அமரராகு முன்னரே சித்திரப்பாவையை டீ.வி. தொடராகத் தயாரிக்க அனுமதி வேண்டி சில தயாரிப்பாளர்கள் தூர்தர்ஷனுடன் மோதி—மூக்குடைபட்டுத் திரும்பியிருக்கின்றனர். சென்னை டீ.வி. நிலையம் ஞானபீடப் பரிசு பெற்ற இந்த நாவலின் முடிவை மாற்றினால் அனுமதி தருவதாகக் கூறியது! அகிலனா சம்மதிப்பார்? இப்போது கூட இந்தத் தொடருக்கு அனுமதி பெற மத்திய அமைச்சர் வரை சென்று விளக்கவுரை நிகழ்த்த வேண்டியிருந்தது!



* இயக்குனர் செல்வா

இயக்குனர் செல்வாவைச் சந்தித்து, "இத் தொடரின் கதாநாயகியாக நடிக்க வைஷ்ணவியை எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்?" என்று கேட்டோம்.

"அவர் நடித்த 'தலைவனுக்கோர் தலைவி' படம் வெளிவந்திருந்த சமயம். ஆழ்ந்த யோசனையுடன் தெருவில் நடந்து கொண்டிருந்த போது, சுவரில் ஒட்டப்பட்டிருந்த போஸ்டரில் வைஷ்ணவியைப் பார்த்தேன். சோகம் இழைந்த ஆனந்தி கதாபாத்திரத்துக்கு வைஷ்ணவி பொருத்தமாய் இருப்பார் என அப்போது சட்டென்று தோன்றியது. தலைவனுக்கோர் தலைவி படத்தின் புகைப்பட ஆல்பத்தை வாங்கி வந்து பார்த்தோம். போஸ்டரைப் பார்த்த போது ஏற்பட்ட எண்ணம் மேலும் உறுதிப்பட்டது. வைஷ்ணவியைச் சந்தித்து விஷயத்தைச் சொன்னோம். அவரும் ஒப்புக் கொண்டார்.



"துணிச்சலான சாரதா பாத்திரத்துக்கு, ஏற்கெனவே பொது மக்களுக்கு அறிமுகமானவராகவும் அதே சமயம் சினிமா தொடர்பு இல்லாதவருமான ஒரு பெண்ணைத் தேடினோம். டீ.வி.யில் செய்தி வாசிக்கும் ஃபாத்திமா பொருத்தமாய் இருப்பார் என நினைத்து, அவரை அணுகிய போது, அவர் முதலில் தயங்கினாலும், பின்னர் ஒப்புக் கொண்டார். பிறகு மாணிக்கம் பாத்திரத்துக்குத் தயாரிப்பாளரான சம்பத்தையும், கதாநாயகனான அண்ணாமலை பாத்திரத்துக்கு ஓரளவு சினிமா மூலம் பிரபலமான ராகவேந்தரையும் பத்திரிகையாசிரியர் பாத்திரத்துக்கு நடிகர் நாசரையும் தேர்வு செய்தோம்."

செல்வாவுக்கு, இத் தொடரை இயக்கும்

வாய்ப்பு எப்படிக் கிடைத்தது?

''நான் படித்தது பச்சையப்பன் கல்லூரியில். அப்போதே சினிமாக் கனவுகள் கொண்ட நான், வகுப்பறையில் இருந்த நேரத்தை விட, கல்லூரி மரத்தடியில் நாவல்கள் படித்த நேரமே அதிகம். அப்போது என்னை மிகவும் கவர்ந்த நாவல் சித்திரப் பாவை. சித்திரப்பாவையைச் சினிமாவாக எடுத்தால், எப்படி திரைக்கதை அமைய வேண்டும் என்று நான் அப்போதே கற்பனை செய்து வைத்திருந்தேன். கல்லூரிப் படிப்பை முழுமையாய் முடிக்காமல், சினிமாத் துறைக்கே வந்தும் விட்டேன். சித்திரப்பாவைத் தொடரின் தயாரிப்பாளர் எனக்கு ஏற்கெனவே அறிமுகமானவர். எனது ஆர்வமும், திறமையும் அவர் அறிந்தவை. எனக்கு இவ்வாய்ப்பு கிடைத்த போது, மிகவும் சந்தோஷமாய் இருந்தது.''

சித்திரப்பாவை டீ.வி.யில் பதின்மூன்று வாரங்கள் வரும்படியாகச் சுமார் இரண்டு மாத காலத்தில் திரைக்கதை அமைக்கப்பட்டது. இதில் ஓவியர் கதாபாத்திரம் பிரதானம் என்பதால், பல ஓவியங்கள் தேவைப்பட்டன. தயாரிப்பாளரும், இயக்குனரும் நடிகர் சிவகுமாரை அணுகினார்கள். தாம் வரைந்த பல ஓவியங்களைத் தொடரில் பயன்படுத்திக் கொள்ளக் கொடுத்து உதவினார், சிவகுமார். ஓவியக் கல்லூரி முதல்வர் பாத்திரத்தில் சிவகுமாரையே நடிக்கச் சொல்லிக் கேட்ட போது சந்தோஷமாக ஒப்புக் கொண்டார்.

சித்திரப்பாவை, ஆனந்த விகடனில் வெளிவந்து வாசகர்களிடையே ஏற்கெனவே பிரபலமாகி விட்ட ஒரு நாவல். ஞானபீட விருது பெற்ற பெருமை அதற்கு உண்டு. எனவே டீ.வி.யில் தொடராக ஒளிபரப்பாகும் போது, லட்சக்கணக்கானவர்களை ஆர்வமுடன் பார்க்கத் தூண்டும் என்பது ப்ளஸ் பாயிண்ட். அதே சமயம் சிறு தவறு செய்தாலும், 'அகிலனின் அருமையான கதையைக் கெடுத்து விட்டார்கள்' என்று பழி சுமத்தப்படும் பயமும் தயாரிப்பாளருக்கு இருந்தது.

இது பற்றிக் கேட்ட போது, அகிலனின் மகன் கண்ணன் கூறினார்:

''அப்பா, ஆனந்த விகடனில் சித்திரப் பாவை நாவலை எழுதிய போது, நான் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தேன். கதை, ஓவியரைப் பிரதான பாத்திரமாய்க் கொண்டது என்பதால், அப்பா, அன்றைய ஓவியக் கல்லூரி முதல்வரான பணிக்கர், ஓவியர்கள் மணியம், கோபுலு போன்றவர்களுடன் நிறைய டிஸ்கஸ் பண்ணுவாராம். கதையின் அத்தியாயங்களைப் பத்திரிகை அலுவலகத்துக்கு அனுப்



* உணர்ச்சி வசப்பட்ட அகிலன்...

* ...உணர்ச்சிமயமாக எழுதிய கதை



சினிமா கொடுக்காத பாப்புலாரிட்டி!

''முதல் சினிமா வாய்ப்புக்குப் பின் சுமார் ஆறு மாதங்கள் சினிமா சான்ஸே இல்லாமல் இருந்தேன்'' என்று சினிமாத்தனம் இல்லாமல் பேசும் வைஷ்ணவி, சௌகார் ஜானகியின் பேத்தி. படித்தது குஜராத்தில். ''சினிமாவை விட, சித்திரப்பாவை தொடர் எனக்கு ஏராளமான பாபுலாரிடியைக் கொடுத்துள்ளது. எங்கே போனாலும் இப்போது மக்கள் என்னை அடையாளம் தெரிந்து கொள்கிறார்கள்'' என்றார்.

''எனக்குத் தமிழ் பேச வருமே தவிர, படிக்கும் திறமை மிகக் குறைவு. வேறு ஒருவரைப் படிக்கச் சொல்லிக் கேட்டேன். நாவலில் ஆனந்தி கேரக்டர் மிகவும் ஆழமானது என்பது புரிந்தது. அந்த அற்புதமான கேரக்டரில் எனக்கு நடிக்க வாய்ப்புக் கிடைத்தது பற்றிச் சந்தோஷப்பட்டேன். கேரக்டர் பற்றி என் பாட்டியிடம் நிறையப் பேசினேன்.

''முதல் எபிசோடு தயாராகி, பாட்டியுடன் உட்கார்ந்து பார்த்து விட்டுப் பாட்டி முகத்தை நோக்க, நெஞ்சு 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. 'நன்றாய் நடித்திருக்கிறாய்!' என்றார். அந்த இரு வார்த்தைகள் என் மீது பூ மழை பொழிவது போலிருந்தது!''

பும் முன்னரே வீட்டில் அனைவரும் படித்து விடுவார்களாம். கிளைமாக்ஸ் அத்தியாயம் எழுதிய தினம் நடந்த சம்பவம் எனக்கு இன்னும் நன்றாய் நினைவிருக்கிறது. பாதி அத்தியாயத்தை எழுதி வைத்து விட்டு, அப்பா வாக்கிங் போயிருந்தார். அதற்குள் எங்கள் நெருங்கிய உறவினரான கதிர்வேலு (பின்னர் எங்கள் வீட்டு மருமகன்) அப்பா வருவதற்குள் அதை வேகவேகமாய் படித்து விட்டு, அப்பா வீடு திரும்பியதும் 'மாமா! ஆனந்தியைச் சாகடிக்கப் போறீங்களா?' என்று கேட்டதுதான் தாமதம்; அப்பா உணர்ச்சிவசப்பட்டு, அவர் கன்னத்தில் பளார் என்று அறைந்து விட்டு அறைக்குள் சென்று, கதவைத் தாளிட்டுக் கொண்டு விட்டார்! அத்தியாயத்தை எழுதி முடித்த பின், அறையை விட்டு வெளியே வந்தவர், ''கதையை இப்போது யாரும் படிக்க வேண்டாம். பத்திரிகையிலேயே படித்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி விட்டார். இவ்வாறு அப்பா உணர்ச்சிவசப்பட்டு எழுதிய உணர்ச்சிமயமான கதையை டி.வி. தொடராகப் படமெடுப்பது பற்றி நான் முதலில் ரொம்பத் தயங்கினேன். இந்தத் தொடரைத் தயாரிக்கும் ஜாஸ் யூனிட்டைச் சேர்ந்த அனைவருமே இளைஞர்கள்; இலக்கிய ஆர்வமும், அப்பா மீது மிகுந்த மரியாதையும் கொண்டவர்கள் என்பது தெரிய வந்த போது அவர்கள் மீது எனக்கு நம்பிக்கை ஏற்பட்டது.''

இத் தொடருக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு எப்படி?

''எங்களுக்கு மிகவும் உற்சாகம் தரும்படி இருக்கிறது'' என்கிறார்கள் தயாரிப்பாளரும், இயக்குனரும். இதற்கு ஆதாரமாய் இவர்களுக்கு வரும் டெலிபோன் கால்களையும், கடிதங்களையும் சொல்லுகிறார்கள். ''எனக்கும் முழு திருப்தி'' என்கிறார் அகிலனின் மகன் கண்ணன்.

''நன்றாய்த்தான் இருக்கிறது; என்றாலும் இன்னும் சிறப்பாய் எடுத்திருக்கலாம். அதற்கு நிறைய ஸ்கோப் இருக்கிறது'' என்கிறார் கண்ணனின் மனைவி மீனா.

சில குறைகளை அகிலனின் தீவிரமான வாசகர்கள் கடிதம் மூலமாய்ச் சுட்டிக் காட்டியுள்ளனர். பரவலாய்ச் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறை, கதையில் சினிமாத்தனம் மேலோங்கியிருக்கிறது என்பதே. ''வண்ண விளக்கு செட்டில் வில்லன் ஆடும் நவீன பாணி நடனம் ஒரு வாரம் ஒளிபரப்பாயிற்று. அது கதைக்குப் பொருத்தமற்றது; சற்றும் அவசியமில்லாதது'' என்கிறார் ஓர் அகிலன் அபிமானி.

''ஒரு கதாபாத்திரம், 'எல்லாம் அவன் விதி! விதிப்படியே நடக்கும்' என்று வசனம் பேசுவதாய் வருகிறது. அகிலன், விதி மீது நம்பிக்கை இல்லாதவர். தலைவிதிப்படி நடக்கும் என்று தம் கதைகள் எதிலுமே அவர் எழுதியதில்லை'' என்று உறுதியாகச் சொல்கிறார் இன்னொரு அகிலன் அன்பர்.

''கதாநாயகி ஆனந்தி பாத்திரம் வெறும் சோகத்தை மட்டுமே தாங்கிய பெண்ணாய்ச் சித்திரிக்கப்படுவது தவறு. ஆனந்தி பலவிதக் குணாதிசயங்களைக் கொண்டவள்'' என்று குறிப்பிடுகிறவர்களும் இருக்கிறார்கள்.


தொடரில் வரும் பாடல் காட்சிகளை சிலர் ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கு, ''அதீத சோகத்தையோ, சந்தோஷத்தையோ எழுத்து போல அவ்வளவு சுலபமாய்த் திரையில் கொண்டு வருவது சாத்தியமில்லை. அதனைக் கொண்டு வரும் உத்திதான் பாடல்கள்'' என்று டைரக்டர் சமாதானம் சொல்லுகிறார்.

ஹீரோ அண்ணாமலை, ஓவியக் கல்லூரி முதல்வரைச் சந்திக்கும் காட்சி. முதல்வர், மிகவும் சாந்தமான மனிதர் என்றாலும் அண்ணாமலை, காத்திருக்கும் போது, அவர் மிகவும் கடுமையான மனிதராய் இருப்பாரோ எனக் கற்பனை செய்து பார்க்கிறான். ''இது போல் கற்பனை செய்து பார்ப்பதாய் அகிலன் எழுதவில்லையே'' என்று கேட்டதற்கு, ''ஏற்கெனவே மக்கள் அறிந்த கதை ஆதலால் டெலிவிஷன் தொடராகப் பார்க்கும் போது, சிறு சிறு சஸ்பென்ஸ் வைக்க வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்திருக்கிறோம்'' என்கிறார் இயக்குனர்.

சின்னக் குறைகள் சில இருந்தாலும் இந்தி டெலிவிஷன் தொடர்களுக்கு இணையாய்த் தமிழிலும் நல்ல தொடர்கள் வர முடியும் — மனம் வைத்தால் என்பதை நிரூபிக்கிறது சித்திரப்பாவை.

— எஸ். சந்திரமௌலி

அட்டை வண்ணப்படம்: எஸ். ரமேஷ்



ஆகட்டும் பார்க்கலாம்!
இந்த அக்கிரமத்தைக் கண்டிச்சுக் கேழுங்க!
ஜனாதிபதி
பணபலம், பலிக்கலேன்னா வன்முறை, மோசடிகள் மூலம் வெற்றி!
அமேதி
முதல்வர் பதவிக்கு ஆசை
வேட்டு வைக்கும் வேட்டு!
தேர்தல்
வேட்டு



கல்கி

1989 டிசம்பர் 3
மலர் 48 இதழ் 18
சுக்ல கார்த்திகை 18



தண்டனை தரத் தயங்காத மக்கள்!

தேர்தல் முடிவுகள் இன்னும் முழுவதுமாக வெளியாகவில்லை. ஆனால் இ. காங்கிரஸ் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெறாது என்ற அளவுக்கு நிச்சயமாகிவிட்டது. ஐந்தாண்டு கால ராஜீவ் ஆட்சியில் மக்கள் அதிருப்தி அடைந்து, அந்தக் கட்சிக்கும், அதன் தலைவருக்கும் பாடம் கற்பித்து விட்டனர். ராஜீவ் தமது ஆட்சியில் மக்களுக்குச் செய்த நன்மை என்பதாக ஒரு விஷயத்தைக் கூடக் கூறிக் கொள்ள முடியவில்லை. மாறாக போஃபர்ஸ் உள்ளிட்ட பல்வேறு லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களும், விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பல பிரச்னைகளும் மக்களிடையே கசப்புணர்வை வளர்த்தன. பஞ்சாப் பிரச்னை, ஜாதி — மதப் பூசல்கள் போன்றவையும் அதிருப்தியை அதிகரிக்கச் செய்தன. இத்தகைய திறமையற்ற நிர்வாகத்துக்கும், ஊழல் ஆட்சிக்கும் மறுவாய்ப்புத் தரக் கூடாது என்று தீர்மானித்து, உறுதியுடன் மக்கள் வோட்டு அளித்துள்ளனர்.

தென் மாநிலங்களில் காங்கிரஸுக்கு ஆதரவாக விழுந்திருக்கிற வோட்டுக்களும் மக்கள் தண்டிக்கத் தயங்கவில்லை என்பதையே உணர்த்துகின்றன. கர்நாடகாவில் ஜனதாக் கட்சிக்குள் நிலவிய உட்பூசல் மக்களுக்குப் பெரிய ஏமாற்றத்தை அளித்தது. ஜனதா தளம் உருவான போது, ஜனதா பிளவுக் கட்சியாக நீடித்தது. நிரூபிக்கப்படா விட்டாலும், ஜனதா ஆட்சி மீது பலவித ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு, களங்கம் ஏற்படுத்த முயற்சிகள் நடந்தன. இவை பெரிய பலவீனங்களாயின. ஆந்திராவில் முதல்வர் என். டி. ஆர். 'சினிமாவில் நடித்தபடியே ஆட்சி நடத்துவேன்' என்று செயல்பட்டது மாபெரும் தவறு என்பதை இப்போது உணர்ந்திருப்பார். அவரது குடும்பத்தினருக்கு அவர் வழங்கிய சில பல சலுகைகளும் அதிகார துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்களும், வழக்குகளும் அவரைக் கவிழ்த்து விட்டன. தமிழ்நாட்டில் தி. மு. க. அடைந்துள்ள படுதோல்வியைக் காங்கிரஸ் ஆதரவு வோட்டு என்று ஒரு நாளும் கருத முடியாது. அவை எம். ஜி. ஆர். — ஜெயலலிதா — இரட்டை இலை ஆதரவு வோட்டுக்களே. தவிர, தி. மு. க. செய்த சில தவறுகள், அவர்கள் மீது மக்கள் கோபம் கொள்ளச் செய்தன. இவற்றுள் முக்கியமானவை ஜெயலலிதாவின் ராஜினாமாக் கடிதத்தைப் போலீஸார் பறித்து அம்பலப்படுத்தியது, சட்டசபையில் ஜெயலலிதா அவமானப்படுத்தப் பட்டது, நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டின் போது தி. மு. க. ஆட்சி மத்திய அரசு மீது பழியைப் போட்டுத் தப்பிக்கப் பார்த்தது ஆகியன. இதனால் கருணாநிதி அரசு செய்துள்ள பல நல்ல காரியங்கள் அடிபட்டுப் போயின. மக்கள் இது நாடாளுமன்றத் தேர்தல் என்பதை உணர்ந்திருந்தாலும் தி. மு. க. எதிர்ப்பு வோட்டுப் போட்டு அவர்களை எச்சரிக்கத் தீர்மானித்தனர் என்றே கருத வேண்டியுள்ளது.

நாடாளுமன்றத்தில் காங்கிரஸுக்கு மெஜாரிடி பலம் கிடைக்காமல் போனாலும் அதிகபட்ச எம். பிக்களைக் கொண்ட கட்சி என்பதாகக் கணக்கிட்டு அதனை ஆட்சி அமைக்குமாறு கோரும் மாபெரும் தவறை ஜனாதிபதி செய்துவிட மாட்டார் என நம்புவோம். அப்படிச் செய்தால் காங்கிரஸ் உடனே தனது பலத்தைப் பெருக்கிக் கொள்ளப் பண பலத்தாலும் அதிகார பலத்தாலும் பல எம். பிக்களை இழுக்க முற்படும். இதனைத் தடுக்க உடனே பழைய நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்து, கட்சி மாறுவதைத் தடுக்கும் சட்டம், புதிய உறுப்பினர்களைப் பாதிக்கும் நிலைமையை உருவாக்க வேண்டும்.

பிரதான எதிர்க்கட்சியான ஜனதா தளம், தனது தோழமைக் கட்சிகளுடன் இணைந்து, பெரும்பான்மை பலத்துடன் நிலையான ஆட்சி வழங்குமாறு ஜனாதிபதி அழைக்க வேண்டும். தேர்தலுக்கு முன் காங்கிரஸ், தானே மீண்டும் ஆட்சி அமைக்கப் போவதாகவும் ஜனநாயக முன்னணி, கூட்டணி ஆட்சி அமைக்கப் போவதாகவுமே மக்களிடம் கூறி வந்துள்ளதைக் கவனத்தில் கொண்டு ஜனாதிபதி செயல்பட வேண்டும். கூட்டணி ஆட்சி என்பது ஜனநாயக உலகுக்குப் புதிதல்ல. பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி முதலிய பல நாடுகளில் இதேபோன்ற நிலை ஏற்பட்ட போது, அதாவது ஆளும் கட்சி மக்களின் ஆதரவை இழந்த போது, நேற்று வரை எதிர்க்கட்சியாக இருந்த கட்சிகளைக் கூட்டணி ஆட்சி அமைக்க அழைத்த முன்னுதாரணங்கள் உண்டு. காங்கிரஸ் மீண்டும் பதவிக்கு வந்துவிடக் கூடாது என்பதே பெரும்பான்மை மக்களின் தீர்ப்பு என்பதைக் கணப்போதும் மறவாமல் ஜனாதிபதி மதிநுட்பத்துடன் செயல்படட்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

கல்கி வழங்கிய தீபாவளி பரிசுகள்!



கல்கியின் தீபாவளி பரிசினைப் பெற்றவர்கள் பலர். கிடைத்த தொகைக்கு ஏற்ப தாங்கள் வாங்கிய பொருள்களைப் பற்றி எழுதி அனுப்பினார்கள். அவற்றுள் பிரசுரத்துக்கு ஏற்றவை தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கு இடம்பெறுகின்றன. இவர்கள் ஒவ்வொருவரும் பரிசுக்கு மேல் பரிசாக ரூ.25 பெறுகிறார்கள்!

●● தலை தீபாவளிக்குச் சேலம் சென்றிருந்தேன். மாமனார் வீட்டில் கல்கி இருந்தது. பிரித்தேன்! என்ன ஆச்சர்யம்! அதில் தீபாவளி பரிசு குறிப்பிடப்பட்டிருந்தது! "வீட்டில் வேறு யாருமே கவனிக்கவில்லை! நீங்கள்தான் முதலில் பார்த்தீர்கள்! அதனால் பரிசு உங்களுக்கே உரியது" என்றார்கள்! ரொம்ப நாளாக பாலமுரளியின் உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனைகள் காஸெட் வாங்க ஆசை. கை வராமல் தட்டிக் கொண்டே போனது. கல்கி அறிவிப்பும், பரிசும் அதனை வாங்கியே ஆக வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. சந்தோஷமாக வாங்கினேன். மனம் நிறையக் கேட்கிறேன். அப்போதெல்லாம் கல்கியையும் நினைக்கிறேன்!

சென்னை – 4. எஸ். சுகுமார்.

●● எனது தங்கையை டில்லியில் வேலை பார்க்கும் வரனுக்கு மணம் முடித்துத் தந்த பிறகு சில முறை டில்லி சென்று வந்ததில் சப்பாத்தி சப்ஜி பழகி விட்டது. இப்போது வீட்டில் வாரம் இரண்டு மூன்று நாள் சப்பாத்தி சப்ஜிதான். சாப்பிட எல்லாருக்கும் பிடிக்கும். ஆனால் செய்வது முழுதும் அம்மா. இடையில் அம்மாவுக்குச் சற்று உடல்நலம் குறையவே சப்பாத்தி செய்யச் சிரமப்பட்டாள். அப்போது டில்லியிலிருந்த என் தங்கை சப்பாத்தி தயாரிக்கும் மிஷின் வாங்கிக் கொள்ளுமாறு யோசனை கூறினாள். ஆனால் 'பார்க்கலாம், பார்க்கலாம்' என்று அதை வாங்காது ஒத்திப் போட்டது டன் சப்பாத்தி தயாரிப்பதையே நிறுத்தியுட விட்டோம். கல்கி, தீபாவளி சிறப்பிதழில் பரிசு கிடைத்ததும் முதல் காரியமாக... இப்போது சப்பாத்தி சப்ஜி சுவைக்கிறது. கல்கியும்தான்!

தஞ்சாவூர். ஆர். குருநாதன்.

●● நான் சிறு வயது முதலே ஆசைப்பட்டு கனாக்கண்டு வந்த பொருள் ஒரு இன்ஜினீரிங் ஸீட்! இப்போதெல்லாம் அதை லட்ச ரூபாய் வரை கொடுத்து வாங்குகிறார்கள். ஆனால் எனக்குத் தகுதி அடிப்படையிலேயே ரூர்கி பல்கலைக் கழகத்தில் இடம் கிடைத்தது. ஆனால் அதிர்ச்சி என்னவெனில் ஆகஸ்டு 23 ஆம் தேதி சேரச் சொல்லி 21 ஆம் தேதி சென்னைக்குக் கடிதம் வந்து சேர்ந்தது. அலறிப் புடைத்துக் கொண்டு, பெட்டி பிடித்து, டிக்கெட் எடுத்து, ரயிலேறியும் 25 ஆம் தேதிதான் ரூர்கியை அடைந்தோம். தபால் தாமதத்தை விளக்கிய போது நல்ல மனத்துடன் சேர்த்துக் கொண்டார்கள். தீபாவளி சமயம் ஒரு வாரம் லீவு கிடைத்து ஊருக்கு வந்தேன். கல்கி தந்த தீபாவளி பரிசு கண்டு மகிழ்ந்தேன். இந்தப் பணத்துக்கு எனக்கு மிகவும் தேவையான கல்லூரி பாடப்

புத்தகம் வாங்கிக் கொள்வேன். என்னை இன்ஜினீயர் ஆக்கியதில் கல்கிக்கும் பங்கு உண்டு என்று எண்ணி என்றும் மகிழ்வேன்!

ரூர்கி, டி. ச. சிவசங்கர்.

●● நீண்ட நாட்களாக என் சைக்கிளுக்கு ஒரு டைனமோ லைட் வாங்கி மாட்ட வேண்டும் என்று துடிப்பு. ஆனால் எங்கே முடிகிறது? இந்திய அரசு பட்ஜெட் போல் என் பட்ஜெட்டும் நிரந்தரமாகப் பற்றாக் குறைதான்! இரவு காவல் துறைக்குக் கண்ணாமூச்சி காட்டுவது பெரும்பாடு! ஒரு தடவை அபராதமும் கட்டியாயிற்று! ஆனால் நேற்று வரை பிரச்னை தீரவில்லை. இன்று? இதோ, கல்கி, தீபாவளி பரிசு காரணமாக என் சைக்கிளில் டைனமோ லைட் ஒளி சிந்துகிறது; எனக்குப் பாதுகாப்புத் தருகிறது; என் உள்ளத்துக்கு நிம்மதி அளிக்கிறது. கல்கியை மனமார வாழ்த்துகிறேன்.

திருச்சி — 3. ராஜேந்தர் பிரியன்.

●● நமக்கெல்லாம் அடிக்கடி ஏற்படும் ஒரு தொல்லை மின்தடைதானே! அதுவும் மழைக் காலத்து இரவுகளில் திடுமென்று விளக்கு அணையும் போது எத்தனை கஷ்டமாக இருக்கிறது! தீப்பெட்டியைத் தடவித் துழாவி எடுத்து, இருட்டில் மெழுகுவர்த்தியோ, அரிக்கேன் லாந்தரோ ஏற்றுவது ஒரே அலுப்புத்தான். கல்கி தீபாவளி பரிசு கிடைத்ததோ இல்லையோ, ரொம்ப நாளாக ஒத்திப் போட்டு வந்த ஒரு காரியத்தை உடனே செய்தேன். ஆம், ஒரு பாட்டரி ஸெல் டார்ச் லைட் வாங்கினேன். அடடா! எத்தனை சௌகரியமாக இருக்கிறது! பட்டவனுக்குத்தான் தெரியும் இதன் அருமை!

கும்பகோணம், பி. பி. வெங்கடாஜலபதி.

●● சேற்றுப்புண் வந்ததால் கால் மெட்டியை வெட்டி எடுத்து விட்டேன். மறுபடி வேறு வாங்க வசதிப்படவில்லை. இப்போது கல்கி தீபாவளி பரிசு கிடைத்ததும் முதல் காரியமாக மெட்டி வாங்கி அணிந்து கொண்டேன். இப்போது மங்கல





ஒலி நான் நடக்கும் போது வீட்டில் எழுகிறது. மெட்டி ஒலிக்கக் கல்கி உதவியது. நன்றி.

சென்னை, பிரேமலதா.

●● அமரர் கல்கி எழுதிய சிவகாமியின் சபதம் புத்தகம் வாங்க வேண்டும் என்று நெடுநாள் ஆசை. விலையோ 110 ரூபாய்! இந்த ஆண்டு தீபாவளி பட்டாசு வாங்குவதில்லை என்று தீர்மானித்து ஐம்பது ரூபாய் மிச்சம் பிடித்தேன். கல்கி ஒரு தீபாவளி பரிசை வழங்கியது. இரண்டையும் சேர்த்ததும், புத்தகம் இப்போது என் வீட்டு அலமாரியை அலங்கரிக்கிறது! தொட்டுத் தொட்டுப் பார்க்கிறேன், படித்துப் படித்து மகிழ்கிறேன்! வாழ்நாளெல்லாம் எனக்கு இன்பம் தரக்கூடிய பரிசாக வழங்கி விட்டீர்கள்!

கோயமுத்தூர், என். இலங்கைப்பாண்டியன்.

●● அப்பா சலவைக்குப் போய் வந்த சட்டை அணிந்து கல்யாணத்துக்குப் புறப்பட்டார். ''கிழிந்திருக்கிறது; வேறு சட்டை போட்டுக் கொள்ளுங்கள்'' என்றேன். இன்னொன்றை எடுத்தார். அதுவும் தையல் விட்டுப் போயிருந்தது. துவைத்த சட்டை ஒன்றை எடுத்துக் கொண்டு இஸ்திரி போட்டு வர ஓட்டமாக ஓடினேன். அந்த அதிகாலையில் லாண்டரி எதுவும் திறந்திருக்கவில்லை. நடமாடும் இஸ்திரி நிலையம் எதுவும் கண்ணுக்குப் புலப்படவும் இல்லை. கடைசியில் அப்பா கசங்கிய சட்டை அணிந்துதான் கல்யாணத்துக்குப் போனார். கல்கி வழங்கிய தீபாவளி பரிசு கிடைத்ததும் முதல் காரியமாக மின்சார இஸ்திரிப் பெட்டி வாங்கினேன்.

தஞ்சாவூர், கே. உமாராணி.

●● இங்கு கொசுத் தொல்லை மிக அதிகம். அக்கம் பக்கம் ஏழெட்டு எருமை மாடுகள் வளர்க்கப்படுவதால் கொசுப் பண்ணையே வியாபித்துள்ளது. பம்பாயிலிருக்கும் சகோதரியைக் காணச் சென்ற போது அங்கு எலெக்ட்ரானிக் கொசு விரட்டியைப் பார்த்து, அதன் திறமையை



வியந்து, என் கணவரை அது போல் ஒன்று வாங்குமாறு நச்சரித்தேன். சிக்கனவாதியான அவர், தட்டிக் கழித்து வந்தார். கல்கியில் தீபாவளி பரிசைப் பார்த்ததும், ''நீங்கள்தான் வாங்கித் தரவில்லை; கடவுளாகப் பார்த்துக் கல்கி மூலமாக என் ஆசையைத் தீர்த்து வைத்து விட்டார்'' என்று கூறிக் கொண்டே கடைக்கு விரைந்தேன். இன்று நான் நிம்மதியாகத் தூங்கக் கல்கியே காரணம்!

புதுக்கோட்டை, கே. அன்னபூரணி.

●● இப்போது நான் உண்ணும் பகல் உணவில் சூடும், ருசியும் உணர்கிறேன் என்றால் அதற்கு கல்கி வழங்கிய தீபாவளி பரிசுதான் காரணம்! மதுரை அரசு அலுவலகத்தில் பணிபுரியும் நான், தினம் விருதுநகரிலிருந்து ரயிலில் சென்று வருகிறேன். காலையில் வீட்டில் தயாரித்த உணவை எடுத்துப் போய் மதியம் சாப்பிடும் போது ஆறி அவலாகப் போயிருக்கும். '''ஹாட்பேக் – லஞ்ச் பாக்ஸ்' வாங்குங்கள்'' என்று என் மனைவி கூறி வந்தாள். அதற்காகச் சிறிது சிறிதாக சேமித்து வந்த போது, தீபாவளி சமயம் விருந்தினர் வந்து விட, சேமிப்பு கரைந்தது! ஆனால் என்ன அதிர்ஷ்டம்! கல்கி வழங்கிய தீபாவளி பரிசு கிடைத்தது. உடனே வாங்கி விட்டேன், லஞ்ச் பாக்ஸ்! என் மனைவிக்கு என்னை விடச் சந்தோஷம்! தான் சமைக்கும் உணவைக் கணவர் ருசித்துச் சாப்பிட முடிகிறதே என்றுதான்!

விருதுநகர், ஆர். ராஜாமணி.

●● அஞ்சல் வழிக் கல்வி கற்கிறேன். வீட்டில் ஒரே அறை. விளக்குப் போட்டுப் படித்தால் மற்றவர் தூக்கம் கெடும். எனவே தெரு விளக்கில் படித்து வந்தேன். ஒரு நாள் என்னை நாய்கள் துரத்தி வந்தன. இன்னொரு தினம் நாய் குரைக்கும் சத்தம் கேட்டுச் சில வீட்டுக்காரர்கள் திருடனோ என்று கம்பு, கழியுடன் வந்து விட்டனர்! இப்போது இந்தத் தொல்லைகள் ஏதுமில்லை! கல்கி தந்த தீபாவளி பரிசில் ஒரு டேபிள் லேம்ப் வாங்கி விட்டேன்! வீட்டுக்குள்ளேயே அமர்ந்து, யாருக்கும் தொந்தரவு இன்றி, நிம்மதியாகப் படிக்கிறேன். எனக்கு நிம்மதி தந்த கல்கிக்கு நன்றி.

விக்கிரமசிங்கபுரம், என். ஸ்டாலின்.

●● என் பாட்டி வெற்றிலை பாக்கு இடிக்க இரும்பு உரல் வேண்டும் என்று ரொம்ப நாளாகக் கேட்டு வந்தாள். அதற்காகப் பணம் சேமிப்பதாகக் கூறி, கடைசியில் மிக்ஸி வாங்கி விட்டோம்! பாட்டி ஒரே 'உர்ர்'! அதிர்ஷ்டவசமாகக் கல்கி தீபாவளி பரிசு வந்தது! அது பாட்டியை சமாதானப் படுத்தவே கிடைத்தது போல் தோன்றியது. அன்று மாலையே இரும்பு உரல் – உலக்கையுடன் வீடு திரும்பினேன். ''ணங் ணங்'' கென்று பாட்டி உரலில் வெற்றிலைப் பாக்கு இடிக்கிறாள். பொக்கைப் பல் தெரியச் சிரிக்கிறாள். கிழவியின் ஆனந்தம், எங்களுடைய மகிழ்ச்சி.

புதுச்சேரி, மு. வெற்றிவேலன்.

●● என் தங்கை, ''பரீட்சைக்குப் படிக்க வேணும், அலாரம் கடிகாரம் வாங்கிக் கொடு'' என்றாள். ''பூங்காச் சங்கு ஒலிக்கிறதே, போதாதா?'' என்று சிடுசிடுத்தேன். தங்கை சாதம் போடும் போது குறைவாக வைத்தாள். ''இது போதுமா? இன்னும் கொஞ்சம் போடு'' என்றேன். ''ஒரு தடவை மணி தெரிந்தால் போதுமா? மறுமுறை அறிய அவசியமில்லையா?'' என்று திருப்பிக் கேட்டாள். எனக்கு வருத்தமாகப் போய் விட்டது – தங்கைக்குக் கடிகாரம் வாங்கித் தர முடியவில்லையே என்றுதான். ஆனால் அந்த வருத்தத்தை இருந்த இடம் தெரியாமல் விரட்டி விட்டது கல்கி தீபாவளி சிறப்பிதழ்! ஆம், அது தீபாவளி பரிசாக நூறு ரூபாய் கொண்டு வந்து தந்ததே! தங்கையின் ஏக்கத்தையும் தீர்த்து வைத்து விட்டதே!

சென்னிமலை, கே. ஜி. வேலுசாமி.

அடுத்த இதழில்

பாக் அணியின் வளர்ச்சியும் இந்திய அணியின் வீழ்ச்சியும் — ஓர் அலசல்





''உங்க வீட்ல, கணக்கு வழக்கெல்லாம் நீங்களா, மனைவியா?''

''கணக்கு நான்; வழக்கு அவ!''

— சீர்காழி ஸ்ரீராம்.



''சார்! என்னுடைய தொடர் கதைக்கு அடுத்த வாரம் முன்கதைச் சுருக்கம் போடுங்க!''

''ஏன்?''

''இதுவரை எழுதியது மறந்து போச்சு!''


— ஞா. ஞானமுத்து.

''காலையில் ஆறு மணிக்கு எழுந்து, பார்க்கைச் சுற்றி வேர்க்க விறுவிறுக்க ஓடி வந்து, குளிர்ந்த தண்ணீரிலே குளிக்கறதே, அலாதிதான் போங்க!''

''ரொம்ப நல்ல காரியம்; எத்தனை நாளா இப்படிச் செய்துக்கிட்டு வர்றீங்க?''

''நாளைக்குத்தான் ஆரம்பிக்கலாம்னு இருக்கேன்!''

— விஸ்டம் — சக்திக்கொடி.





டைரக்டர்: ''எந்தப் படத்துலயும் நம்ம க்ளைமேக்ஸ் மாதிரி எடுக்கவே முடியாது!''

தயாரிப்பாளர்: ''அப்படி என்ன திட்டம் போட்டிருக்கீங்க?''

டைரக்டர்: ''ஜெட் விமானத்துல போற வில்லனைக் குதிரையில் போய் நம்ம ஹீரோ எட்டிப் பிடிச்சுச் சண்டை போடற மாதிரி!''

— உசிலை. எம். அழகரசன்.

போஃபர்ஸ்



போஃபர்ஸ் ஒரு பீரங்கி தயாரிக்கும் நிறுவனம் — தெரியும்.

போஃபர்ஸ் என்றாலே லஞ்ச ஊழலுக்கு மறுபெயர் என்பதாகி விட்டது — தெரியும்.

தெரியுமோ? BOFORS என்பது Beginning Of Fall Of Rajiv Sarkar என்ற வார்த்தைகளின் முதல் எழுத்துக்களின் தொகுப்பும் கூட!

— ஸண்டே —ராகவ்.



திராவிடன்

எந்தக் கொலைகாரன் கட்சியில்தான் நியாயம் இல்லை? கேட்டுப் பாருங்கள். மனசைப் பிழிகிற மாதிரி சொல்லி, 'ஆமாம்' போட வைப்பார். அதற்காக அப்படிப்பட்ட சமூகவிரோதியை நல்லதொரு காரெக்டர் ரோலில் உட்கார வைத்து, அவன் மேல் அனுதாபம் கொள்ளச் செய்வது தர்ம மாகுமா? அடிப்படைப் பிரச்னையை ஒதுக்கி விட்டுக் கதைக்கு வரலாம்.

தஞ்சைப் பக்கத்துத் தர்மவான். பக்த சிரோமணியான பண்ணையாரின் இளிச்ச வாய்த்தனத்தைச் சாதகமாக்கிக் கொண்டு அவரை அண்டியிருந்தவர்கள் அவர் சொத்தையும், அரண்மனை போன்ற வீட்டையும் அபகரித்துக் கொண்டதோடு தட்டிக் கேட்க முனைந்த அவரது ஒரே பட்டதாரிப் பிள்ளையையும் கோவில் நகை திருட்டுப் பழி போட்டுக் குடும்பத்துக்கு வேண்டாதவராக்குகிறார்களாம். அப்புறம்?

சத்யராஜ் பம்பாய் புகுந்ததும் கடத்தல் கரீம் பாயின் பிரதம கையாள் ஆவதும் அனாயாசமாய்க் கோடிகள் புரட்டுவதும் திரும்பி வந்து உள்ளூர் மோசக்காரர்களைப் பழிவாங்கி, தாம் நிரபராதி என்று காட்டுவதும்தான் மெயின் லைனில் ஓடுகிற வேக ரயில்.

அப்பாவியான, அடக்கமான சத்யராஜும் சிறுமை கண்டு சீறிப் பாயும் சத்யராஜும் இரு துருவங்கள் என்றால் பிந்தியதில் தூள். தங்கைகளுக்குப் பாசமிக்க அண்ணனாய், தாய்க்குச் செல்ல மகனாய், தந்தைக்கு அடக்கமான பிள்ளையாய்த் தொட்டு வித்தியாசம் காட்டியிருக்கிறார்.

சத்யராஜின் அப்பா சோமயாஜுலுவுக்கு நிழலாக இருக்கும் மனைவி ஸ்ரீவித்யா. தீர விசாரிக்காமல்கூடத் தன் பிள்ளையைத் திருடன் என்று கடுமையாய்க் கண்டித்து, 'என் பெண்களை எந்த ஏழைக்காவது கட்டிக் கொடுத்திடுவேன். நீ வீட்டிலே இருந்தால் திருடன் வீடுன்னு ஒருத்தனும் வரமாட்டான். எங்கேயாவது கண்காணாமல் போய்த் தொலைடா,' என்று அப்படியொரு ரௌத்ரம் காட்டித் தந்தை விரட்ட, சத்யராஜ் ஆதரவு தேடித் தாயை நெருங்க, அவர், 'நிழலாலே பேச முடியாதுப்பா,' என்று கண்ணீரை விழுங்குவது உருக்கம்.

ஜெய்சங்கருக்கு பாய் வேஷம் என்ன இத்தனை பாந்தமாய் இருக்கிறது! கெடுபிடிமிக்கடை பாயை எப்படி மசிய வைப்பது என்கிற டெக்னிக்கை எஸ். எஸ். சந்திரன் அவருக்கே உரிய கொனஷ்டையில் சொல்லிக் கொடுக்க, அதன்படி ஜெய்யின் டீ வண்டிக்குப் பின்னாலேயே போய்க் கொஞ்சம் கொஞ்சமாய் அவரின் பூரண அனுதாபத்துக்கு ஆளாகி அவர் மனசிலும் குடிசையிலும் சத்யராஜ் இடம் பிடிப்பது ஒருபுறமிருக்கட்டும். ஜெய்சங்கர் அவரிடம் கொட்டும் அனுதாபம், தேறுதல் சொல்லும் பாணி மனசைத் தடவுகிறது.

ஜெய்யின் மகள் மோனிஷாவின் கனிவான பார்வையும் பரிவு தடவிய பேச்சும் இதம். அந்தப் பொடிசுக்கும், கடத்தல் மன்னன் கரீமின் மகனுக்கும் காதல்.

மானாவாரியாய்க் கவர்ச்சி காட்டிக் கொண்டு வரும் இந்தி நடிகை, சற்று கு டு ம் ப ப் பா ங் கு காட்டும்போது தேவலாம் சொல்ல வை க் கி றா ர்.

துபாய்க்குப் பயணப்பட்ட எதிரி கோஷ்டியை மடக்க எக்கச்சக்கமான டாக்ஸிகளை ஊடாட விட்டு நெருக்கி, கட்பனியனும் கண்டாமுண்டா உடம்புமாய் சத்யராஜ் பைக்கில் புகுந்து, கார்களுக்கு மேலேயே நடந்து சென்று எதிரியைச் சுட்டுத் தள்ளிவிட்டு... அடேங்கப்பா, அந்த அசகாய சூரத்தனமான காட்சியைப் படம் பண்ணியிருக்கும் விதத்தைப் பாராட்டலாம்.

கண்ணும் மனமும் நிறைய வேண்டும் என்ற ஆசையும் அக்கறையும் அத்தனை பிரேம்களிலும் தெரிகின்றன. நிறைந்ததா என்பது வேறு விஷயம்.

— பி. எஸ். எஸ்.


ஏக், தோ, தீன், சார், பான்ச், சே, சாத், ஆட், நௌ, தஸ், க்யாரா, பாராவற், தேராவற்...
யாரைப் பாரு, இந்த சினிமாப் பாட்டுதான் மச்சி...
அட நீ ஒண்ணு, அவ ஒவ்வொரு கொசுவா அடிச்சிட்டு எண்ணறாப்பா!
கொசுக்களின் ஆட்டத்தை அடக்க...
டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்
இந்த கொசுக்களை விரட்ட ஏதாச்சும் வழி பண்ணுங்க... இல்ல நடக்கறதே வேற!
வீட்டில் சமரசம் நிலவச் செய்திட கொளுத்துவீர்...
டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்

இரண்டாவது சூரியன்

18

வாரன் ரோட்டில் திரும்பின உடனே பலகை தெரிந்தது. 'பரத் வீடியோ' என்று எழுதப்பட்டிருந்தது. ஆட்டோவை அவசரமாய் நிற்கச் சொன்னாள். இறங்கிக் காசு கொடுத்து விட்டு தெருவில் இறங்கிக் கடை நோக்கி வந்தாள்.

வனிதா இங்கே இருக்குமா? இருக்காது. பள்ளிக்கூடத்தில் இருக்கும். பழைய கட்டடம். மஞ்சள் நிறம். வாசலில் பூந் தொட்டிகள் இருந்தன. சுவர் முழுவதும் மர அலமாரி. அலமாரி முழுவதும் வீடியோ கேஸட்டுகள். நேர் சுவரில் ஒரு சிவப்பு ரேஸ் கார் படம். நாலு முழ நீளம். 'ஒரு வேளை இந்தக் கார் வாங்குவது வாழ்க்கை லட்சியம் போலும். இல்லை வெறுமனே 'ஹா' என்று பார்க்கிற அழகுக்காகவும் இருக்கலாம். சிலருக்குக் குண்டூசியிலிருந்து கார் வரை ஒரு அன்னிய மோகம் இருக்கும். அப்படியும் வைத்திருக்கலாம்.

''என்னங்க?'' யாரோ பையன் கேட்டான்.

''பரத் இல்லையா?''

''இல்லீங்க. வீட்டுக்குப் போயிட்டாரு.''

''அடடே ஆட்டோவை அனுப்பி விட்டோமே. வீடு எங்க தம்பி?''

''பின்னாடிதான். என்ன கேஸெட் வேணும் சொல்லுங்க?''

''கேஸெட் வேண்டாம். பரத்தைப் பார்க்கணும். பானுமதி டீச்சர்ன்னு சொல்லு. ஹாஸ்பிட்டல் மேட்டராப் பார்க்க வந்திருக்காங்கன்னு சொல்லு.''

''தற்கொலை கேஸா. அதுக்குதான் வீட்டுக்கு போன் பண்ணப் போனாரு. உங்க பேர் என்னங்க?''

''மறுபடி சொன்னாள். பையன் வெளியேறினான். 'பாக்தாத் திருடன், பார்த்தால் பசிதீரும், பாவ மன்னிப்பு, பாலும் பழமும். வரிசையாய்ப் படித்தாள். வாக்கியம் போல் இருந்தது. தலையை உலுக்கிக் கொண்டாள்.

நீல ஜீன்ஸூம் சிவப்புச் சட்டையுமாய் ஒரு பெண் படியேறிற்று. பதினெட்டு இருபது வயது. பிடுங்கின முள்ளங்கி மாதிரி இருந்தது. கன்னத்தில் ஒரு பளபளப்பு. முன் கைகளில் பூனை முடி. வெட்டி விடப்பட்ட தலை, அட்டகாசமாய் அலைந்தது.

''ஐ வான்ட் டு ரிட்டர்ன் திஸ். நீங்க வாங்கிக்கறீங்களா?'' நாலு கேஸட் காட்டியது.

எப்படி வாங்க முடியும்.

''நானும் அவருக்காகக் காத்திருக்கிறேன்.''

''ஓ.. பரத்...'' சிலிர்த்துக் கொண்டது. அலமாரிகளை நோட்டமிட்டது. அரைக்கால் சட்டையும் டீ ஷர்ட்டுமாய் பரத் உள்ளே நுழைந்தான். ''வாங்க'' என்று தலையசைத்தான்.

''யெஸ் பேபி, ஐ யம் அட் யுவர் ச் வீஸ். ஒரு தூள் கேஸட் தரட்டுமா? காட்ஸ் மஸ்ட் பி க்ரேஸி. பார்ட் டூ.''

''ஐயோ பார்த்துட்டேன்.''

''சத்தியமா நீ பார்த்திருக்க முடியாது. ஜஸ்ட் அரைவ்ட் ஃப்ரம் பாம்பே. இது பார்ட் டூ. லீவ் இட். ஸ்டீவ் மக்வீன் படம்? ராபார்ட் ஷா...? வுடு. நெயின் மேன் அகாடமி அவார்ட் படம்? கொஞ்சம் ஸ்லோ பட் கிளாஸிக். என்ன வேணும் சொல்லு.''

அது ஏதோ கேட்க, இவன் ஏதோ சொல்ல ஒன்றுமே புரியவில்லை.

''காலி பண்ணு. எனக்கு வேற வேலை இருக்கு.''

''மாட்டேன்'' இடுப்பில் கையூன்றிக் கண்சிமிட்டினாள்.

''ப்ளீஸ் யார். சம்படி டையிங். ஐ ஹாவ் டு கோ.'' அடித்துக் கை கூப்பினான். தளுக்கிக் குலுக்கிப் பெண் உதடு சுழித்து விட்டு நடந்தது.

''சொல்லுங்க டீச்சர்.''

''மாத்திடலாம்.'' பானுமதி நிமிர்ந்து பேசினாள்.

''குட்.'' யோசித்தான். யாரோ ஒரு பெரியவர் படியேற முகம் மலர்ந்தான்.

''சார் நூறாயுசு உங்களுக்கு. எப்படிடா புடிக்கறதுன்னு நினைச்சுக்கிட்டே இருக்கேன்...''

வழுக்கைத் தலை. மூக்குக் கண்ணாடி. முகம் முழுவதும் மூன்று நாள் வெள்ளை ரோமம். நீலச் சட்டை. கொஞ்சம் மங்கலான வேட்டி. தோளில் பை.

''நான் ஒரு தப்பும் பண்ணலையேப்பா...'' அவன் அவசரம் கண்டு பின் வாங்கினார்.

''ஒரு லேடி தற்கொலை அடெம்ப்ட் பண்ணிட்டாங்க சார். ராயப்பேட்டைல அட்மிட் ஆயிருக்காங்க. நாகேஸ்வரராவ் பார்க்கிட்ட இருக்கே அந்த நர்ஸிங்ஹோம்ல சேர்க்கணும்.''

''அப்போ நீ தப்புப் பண்ணிட்டே!'' சிரித்தார்.

''கடவுளே. என் ஸிஸ்டர் டாட்டரோட டீச்சர் சார்.''

''ஐ ஸீ...''

''நம்ம டைரக்டர்கிட்ட ஒரு வார்த்தை நர்ஸிங் ஹோமுக்குப் போன் பண்ணச் சொல்லணும்.''

பாலகுமாரன்

''செய்துடலாம். பேஷண்ட் பேர் என்ன?''

''சாவித்திரி!'' — பானுமதி எழுந்து நின்று சொன்னாள். பள்ளிக்கூடப் பெயரைச் சொன்னாள்.

''**ப**த்து நிமிடத்தில் பாண்டும் சட்டையுமாய் மோட்டார் சைக்கிள் உதைத்தான். பானுமதி பின்னே ஏறிக் கொள்ள, ராயப்பேட்டை பறந்தான்.

நாலைந்து இடங்களில் சாவித்திரி அப்பா கையெழுத்திட நாற்பது முறை ஆஸ்பத்திரியின் படிகளில் ஏறி இறங்க, பழுப்பு நிறத் துண்டுக் காகிதத்தில் டிஸ்சார்ஜ் என்று எழுதிக் கொடுத்தார்கள். பேப்பர் வந்ததும்தான் தாமதம். துடைத்த ஆயா, தொட்ட ஆயா, பார்த்த ஆயா, பார்க்காத ஆயா எல்லோரும் வந்தார்கள். வீல்சேரை மூன்று பேர் தள்ளினார்கள்.

ஆட்டோ வேண்டாமென்று டாக்ஸி பிடித்தார்கள். உள்ளே சாவித்திரியைப் படுக்க வைத்தார்கள். சகலரையும் பரத் காசால் அடித்தான்.

பெரிய கும்பலே புறப்பட்டது.

''நான் உங்களோட வந்துடட்டுமா சார்?'' யாரோ கேட்டார்கள்.

''இல்லை. டீச்சர் வராங்க என் கூட.... பரத் பதில் சொன்னான்.''

பானுமதி ஏறிக் கொள்ள டாக்ஸியைப் பின்தொடர்ந்தான்.

நர்ஸிங்ஹோமில் பல கேள்வி கேட்டார்கள். எழுதித் தரச் சொன்னார்கள். போலீஸ் ரிப்போட் வற்புறுத்தினார்கள். இறங்கும் முன் ஒருமுறை வண்டியிலேயே சாவித்திரியைப் பரிசோதித்தார்கள்.

தலைமை டாக்டருக்குப் போன் வந்தது போலும்! அவரே வெளியே வந்தார்.

''டைரக்டர் போன் பண்ணாரு. நீங்கதானே பரத்? உங்க பேஷண்டா? உள்ள கொண்டாங்க.''

சுத்தமான அறையில் மெத்து மெத்தென்ற கட்டிலில் சாவித்திரியை இறக்கிய போது, பானுமதியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''உங்களுக்கு என்னால ரொம்ப கஷ்டப் டீச்சர். எப்படி நன்றி சொல்றதுன்னே...'' அழுதாள்.

''ச்சீ அசடு. நன்றி இவருக்குத்தான் சொல்லணும். நம்ம ஸ்டூடண்ட்டோட அங்கிள். பரத்னு பேரு.''

சாவித்திரி வலிமை சேர்த்து அவனைப் பார்த்துக் கைகுவித்தாள். அவன் முகம் திருப்பிக் கொண்டான்.

''ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்...'' உறவுக் கூட்டம் தலைக்குத் தலை பாராட்ட. வெளியே ஓடி வந்தார்கள்.

''டைரக்டர் போன் வரலையேன்னு அப்ஸெட் ஆயிட்டேன். நல்லவேளை பண்ணாரு.''

''யாரு டைரக்டர்?''

பெயர் சொன்னான்.

அவள் திகைத்தாள்.

'அவரா அவரா?'

''நம்ம கடைக்கு வந்தாரே, அவர்தான் டைரக்டர் அஸிஸ்டெண்ட். வலது கை.''

''எப்படித் தெரியும்?''

''கஸ்டமர்ஸ்.''

''ஏதோ சாராய வியாபாரம்னீங்க உங்களுக்கு.''

''போச்சுடா. எங்கப்பாவுக்கு ஸ்பிரிட் வியாபாரம். இருபது வருஷம் முன்ன. இப்பச் செய்தாக் கம்பி எண்ண வேண்டியதுதான். நான் வீடியோ கடைக்காரன் டீச்சர்.''

''லாபம் வருதா?''

''நஷ்டம் இல்லை. அந்த வீடு எங்களது. பழைய கட்டடம். நாலு கடை. மூணு குடித்தனம். வாடகை வருது.''

''உங்களுக்குக் கல்யாணம் ஆகலையா?''

''எதுக்கு டீச்சர் கல்யாணம்? செய்தவங்க எல்லாம் கண்ணெதிர்க்கக் கஷ்டப்படறாங்க.''

''நல்லபடியாவும்...''

''கொஞ்சம். ரொம்பக் கொஞ்சம். எனக்குக் கல்யாணத்துல நம்பிக்கை இல்லை டீச்சர்.''

''எதுல நம்பிக்கை இருக்கு?''

''வாழ்க்கைல. யாருக்கும் தொந்தரவு பண்ணாம, யாரும் நம்மைத் தொந்தரவு தராத வாழ்க்கைல.''

''ஹவ்லாங்?''

''சாகற மட்டும்.''

''இப்படிச் சொல்ற நிறையப் பேரு...''

''மாட்டிக்குவாங்க.. தெரியும். நாளைக் கதை நாளைக்கு. இன்னிக்கு இதான் பாலிஸி.''

''அப்ப மாறலாம்...''

''நிச்சயமா மாறலாம். நேத்துக் கதை



பழக. நாளைக் கதை தெரியாது. இன்னிய கதையைப் பார்ப்போமே!''

''இப்படி தானா வந்து உதவி செய்யற புத்தி எப்படி வந்தது? நீங்க இல்லேன்னா சாவித்திரியை மாத்தியே இருக்க முடியாது.''

''எனக்குச் செய்திருக்காங்களே... ஆக்ஸிடென்ட்ல கால் உடைஞ்சு, நாப்பது நாள் கிடந்த போது, பல பேர் செய்தாங்களே. எங்க வீட்டுப் பொண்ணு மக்குன்னு தெரிஞ்சு நீங்க ட்யூஷன் ஒத்துக்கலை? காசு வேண்டாம்ன்னு சொல்லலை? பதிலுக்கு என் உதவி.''

''அப்போ மனுஷாளை வெறுத்து மேரேஜ் வேண்டாம்ன்னு சொல்லலை.''

''மனுஷாளை எப்படிங்க வெறுக்க முடியும்? நாம அவங்க நடுவுலதானே இருந்தாகணும்! உதவி செய்யறியா, கிட்ட வா. தொந்தரவா விலகிப் போ. இதான் நல்லது. நீ என்ன செய்தாலும் பொறுத்துக்கணும்ங்கற போது, உறவு வெறுப்பாயிடுது. வாழ்க்கை பண்டமாற்றுங்க. அதுல, கட்டாயம் கிடையாது.''

''அற்புதம். என்ன வயசு?''

''முப்பது. வயசுக்கும் அறிவுக்கும் என்ன சம்பந்தம்? அனுபவம், அனுபவ அறிவு முக்கியம்.''

''நெறைய அனுபவமா முப்பது வயசுக்குள்ள?''

''ஒரு நாள் உட்கார்ந்து சொல்றேன். ஒன்று பரத் மேல வெறுப்பு வந்துடும். இல்லை...''

''இல்லை?''

''ப்ரண்ட்ஷிப் வந்துரும்.''

''இப்படி ஓடி ஓடி உதவி செய்தா, நட்பு எப்படி வராத போகும்?''

''அப்படி இல்லீங்க. என்னை வீட்டு வாசப்படி ஏத்தாத சினேகிதங்களும் உண்டு.''

''ஏன்?''

''சில்மிஷம் பிடிச்சவன்னு ஒரு எண்ணம். வாசலோட வைச்சுத் திருப்பிடுவான்.''

''அப்படி என்ன செய்திருக்கீங்க?''

''செய்தது சொல்லணும்னா பன்னிரெண்டு வயசுலேர்ந்து ஆரம்பிக்கணும்.''

''அப்பா கடைல சாராயம் வித்தது தானே?''



''அது மட்டுமில்லை. அப்பாவுக்குத் தெரியாம ஸ்பிரிட் ஒதுக்கி, நானாக் கரைச்சு, நானா பாட்டில்ல ரொப்பி நானே எடுத்துக்கிட்டுப் போய் விப்பேன். எதுக்கு? பாக்கெட் மணி. சினிமாப் போறதுக்கு. நாப்பது ரூபா, அம்பது ரூபா நிக்கும் ஒரு நாளைக்கு. தின்ன முடியாம தின்னுவேன். ரேஸ் சைக்கிள்ள பள்ளிக்கூடம் போவேன். முக்கா சவரன் மோதிரம் வாங்கிப் போட்டுக் கிட்டேன். வாத்தியாருக்கு அஞ்சு, பத்துக் கடன் கொடுப்பேன். பெரிய செட்டு என் கூட. பதினாறு வயசுல சுத்தமாக் கெட்டுப் போய்ட்டேங்க. தமிழ் நாட்ல பதினாறு வயசுல ப்ராஸ்டியூட் வீட்டுக்குப் போனது நானாத்தான் இருக்கும். உடம்புக்கு 'வந் துடுச்சு. டாக்டர்கிட்டக் காட்டினேன். அந்த ஆள் நேரே வீட்ல வந்து சொல்லிட்டான். புரட்டிப் புரட்டி அடிச்சாங்க, வீட்ல. தலைக்குத் தலை அடி. தாங்க முடியலை. ஓடிட்டேன்.

''பாம்பே போறோம்னு நினைச்சு, வைசாக் ட்ரெய்ன்ல ஏறிட்டேன். திமிரு. பர்ஸ்ட் க்ளாஸ் டிக்கெட் வாங்கினேன். ராஜமுந்திரிக்குப் போனேன். காசு தீர்ந்து போச்சு. ஒரு பட்டறைல கூலி வேலை. மூங்கில் கட்டி இரண்டு டப்பா தொங்க விட்டுக் கோதாவரிலேர்ந்து பட்டறைக்குத் தண்ணி எடுத்துட்டு வரணும். ஒரு நாளைக் குச் சோறு போட்டு நாலணா. ரயில்வே லைன்ல அடுப்புக் கரி பொறுக்கி அதைப் பட்டறைல கொடுத்தாக் கூட காசு. அங்க தமிழாள் ஒருத்தர் பிடிச்சுக்கிட்டாரு. தினத்தந்தில போட்டோ வந்திருக்கின்னு காட்டினாரு. என் போட்டோ போட்டு 'எங்கிருந்தாலும் உடனே வா'ன்னு விளம்பரம். அங்கேயே தலைல அடிச்சு லெட்டர் எழுதச் சொன்னாரு. இரண்டே நாள்ல வந்து கூட்டிக்கிட்டுப் போய்ட்டார் எங்கண்ணன்.

''நீ படிக்க வேணாம். என்ன வேணாச் செய்யலாம்னு சொல்லிட்டாங்க, வீட்ல. நாலு வருஷம் குதிரை மாதிரி தின்னுட்டு தின்னுட்டு ஊர் சுத்தினேன். எங்க ஸிஸ் டர்க்கு கல்யாணம் நடந்தது. எங்கப்பா வியாபாரம் நின்னுது. என் ஸிஸ்டர் பட்ட கஷ்டம் அவங்க வாங்கின அடி உதை கண்ணால பார்த்தேன்.

''நான் என்னைப் புரிஞ்சுக்கிட்டது கோதாவரிக் கரைல. நான் மத்தவாளைப் புரிஞ்சுக்கிட்டது எங்க வீட்டு வாசப்படிலே.

''காசு சம்பாதிக்க மறுபடி அலைஞ்சேன். என் கூட ஒட்டினவனையெல்லாம் துரத்தி னேன். சூதாட்ட கிளப், லாண்ட்ரி, டீ ஷாப், இன்டீரியர் டெகரேஷன், ஹோல் சேல்ல மேட்ச் பாக்ஸ் பட்டாசு... என்ன செய்யலை? வீட்டு மேல இருந்த கடன் ஒழிச்சு என் பேருக்கு மாத்தி... இந்தக் கடையோட செட்டில் ஆக முப்பது வயசு ஆயிருச்சுங்க.

''அக்கா இப்ப விடோ. அவங்களுக்கு ஒரு மக்குப் பொண்ணு. நான், என் தம்பி. வாழ்க்கையை ஒரு ரவுண்ட் பார்த்துட்டேன் மச்சர். என் அனுபவம்தான், நான் பட்ட கஷ்டம்தான் உதவின்னு கேட்டா ஓடத் தோணுது. நான் பிஞ்சுலியே பழுத்தவன். வாலிபத்திலேயே வயசானவன். ஐ மீன் மென்டலி. ஆக்ஸிடென்ட்ல கால் உடைஞ்சு கிடந்த போது, ஆஸ்பத்திரிலேயே வலி போகக் குடிச்சேன். கெட்ட சரக்கு. வாமிட் ஆயிருச்சு. பக்கத்து பெட்ல இருந்தவரு டைய வொய்ஃப் ஐயரம்மா இரண்டு கைல ஏந்தினாங்க. வாமிட் பண்ணப் பண்ணத் துடைச்சாங்க.

''நான் முதல் முதல் லைஃப்புல மனசு நொந்து அழுதது இப்பத்தான். இன்னி வரை அதை மறக்க முடியாது. அந்தக் கடை திறந்து வச்சது அந்த அம்மாதான். இப்ப நல்லா இருக்கேன். நாலு பேருக்கு உதவி செய்யறேன்.

''எத்தினி பொம்பளை எங்களைத் திட்டி யிருப்பா! 'ஐயோ அவரு சாராயம் கொடுத்து, எம் புருஷனைக் கெடுக்கிறார்'னு. அதான் இப்படி ஒரு பொண்ணு. என்ன செய்ய? அக்ஸெப்ட் இட். நான் அதைத் திட்டறதில்லை. பயமுறுத்தறதில்லை. அந்தப் பொண்ணை என் குழந்தையா...

''என்னடா, முப்பது வயசு ஆளுக்கு பதினேழு வயசுல ஒரு மகளான்னு தோணும்! இங்க வயசு இல்லை. மனசு.

''அதே மாதிரி ஒரு பதினேழு வயசுப் பொண்கிட்ட பேபி பேபின்னு பேசறது ஆடறது எப்படி?''

''கேட்பீங்கன்னு தெரியும். கடையாண்ட வந்த பொண்ணுதானே. பரத் ஒருத்தருக்கு பாய் ப்ரண்டா, சரி பாய் ப்ரண்ட். வேலைக் காரனா சரி வேலைக்காரன். வீடியோ ஆளா சரி வீடியோ ஆள். நீங்க என்னை ட்ரீட் பண்ற விதம்தான் நான் உங்களை ட்ரீட் பண்ற விதம்.''

''உங்களுக்குன்னு ஒரு ஈடுபாடு?''

''இதுவரை வரலை.

யாரோ வெளியே வந்தார்கள்.

''சார் இங்க இருக்கேளா. இந்த மருந்து வேணுமாம். இங்க இல்லையாம். மோட்டார் சைக்கிள் எடுக்கறேளா, ஒரு நடை மவுண்ட் ரோட் போய்ட்டு வந்துடலாம்.''

''சரிங்க.''

''நோ'' பானுமதி இடையே புகுந்தாள்.

''அவருக்கு வேற வேலை இருக்கு. ஆட்டோ புடிச்சு மவுண்ட் ரோட் போங்க. நாம கிளம்பலாம் பரத்.''

''எங்க?''

''அவர் ஜாப் ஈஸ் ஓவர். லெட் தெம் டேக் கேர். விட்டா கொத்தமல்லி, கருவேப் பிலை வாங்கிட்டு வரச் சொல்வாங்க... வாங்க போலாம்.''

''அவர் வர்றேங்கறாரே.''

''வர மாட்டார்.''

முதன் முறையாய் பரத் அவளை உற்றுப் பார்த்தான்.

(தொடரும்)

இன்றுமுதல் ஆறே 6 வாரங்களில்

க்ளியர்•டோன்

க்ரீம் உமக்கு மெருகேற்றும் சிகப்பழகு•




மூன்றே நாட்களில் என்
சருமத்துக்கு அதிக மென்மை!

2ம் வாரம்



மாசுமறு எல்லாம் மறையுது.
அப்பாடா!

3ம் வாரம்



பாருங்க! இப்ப என்
முழங்கைகள் மழமழ.

4ம் வாரம்



"ஒளிர்கிதே உன்னோட
மேனியழகு" என்றாள் என் சிநேகிதி.

5ம் வாரம்



வெய்யிலிலே கூட என்
உடம்பு கறுக்கலே. பத்திரமா!

6ம் வாரம்



இப்போது நான் ஒரு
க்ளியர்•டோன் ரசிகை!

க்ளியர்•டோனில் உள்ள ஒப்பற்ற ஃபார்முலா உங்கள் சருமத்தை ஒளிநிறக்க வைக்கிறது சிகப்பழகு பொலிய. அதோடு மட்டுமல்ல. க்ளியர்•டோனில் உள்ள தனிச் சிறப்புப் பொருள் ஒன்று, அலங்கோல மாசுமறுக்களை அகற்றுகிறது. க்ரீமில் உள்ள மாயிஸ்ச்சரைஸர் தளதள ஈரவளப்பமூட்டி உங்கள் மேனியழகுக்கு கவனிக்கத்த மென்மை ஒளிமெருகூட்டுகிறது – விருக்கென ஆறே 6 வாரங்களில்!

விடாமல் அன்றாடம் இரு நடவைகள் க்ளியர்•டோன் இட்டு வந்தீராலும் அழகுவண்ண விளைவுகளை – வெய்யில், நிழல் எதனிலும் – நிலைநிறுத்திக் கொள்ள அதுவே உதவும்.



க்ளியர்•டோன்

லண்டன் • பாரிஸ் • நியூயார்க்

ஒரு கனவின் நிழல்

இரண்டு நாட்களாக வெயிலின் கடுமை அதிகமாக இருந்தது. வானம் நெருப்புப் பிழம்புகளாய் மூச்சுவிட்டது. காற்றுக் கூட, வெப்பத்தின் கடுமை தாங்காமல், மரங்களின் கிளைகளில் ஒளிந்து கொண்டது போலிருந்தது.

பறவைகள் கூட ஒடுங்கிப் போயிருந்தன. நான் ஜன்னல் வழியே பார்த்தபோது, கிராமத்துச் சாலையில் சைக்கிள் ஒன்று மெல்லப் போனது. சாலையின் வெப்பம் தாங்காமல், வண்டியின் டயர்கள் வேதனையோடு முனகின.

''நான் ரெடி... போகலாங்க... ஒரு நிமிஷம்... இன்னொரு தரம் சாமி கும்பிட்டுட்டு வந்துடறேன்...''

அந்த வெப்பமான சூழ்நிலையின் ஒரே குளிர்ச்சியான ஆறுதல் கல்பனாதான். எனக்கு அவளைப் பார்த்ததுமே ஒரு குளிர் இயக்கம் கதவு திறப்பது போலிருந்தது.

''நீங்க சாமி கும்பிடலே...?''

கல்பனா என்னைப் பார்த்து மெல்லச் சிரித்தாள். கண்களில் ஜனித்த புன்னகை உதடுகளுக்குப் பரவ, ''பரவாயில்லே... உங்களுக்கும் சேர்த்தே கும்பிட்டாச்சு...'' என்று என் கையைப் பற்றினாள். அவளுடைய நைலான் விரல்களின் ஸ்பரிசத்தில், எனக்குள் ஒரு குளிர் நீர்க் குழாய் திறந்தது.

நானும், கல்பனாவும் மாணிக்கத்தின் ஜட்காவில் ஏறிக் கொண்டோம்.

''இன்னிக்குக் கண்டிப்பா மழை பெய்யுங்க.''

''நெஜம்மாவா மாணிக்கம்?''

''கண்டிப்பா மழை பெய்யும் கல்பனாம்மா...''

அவனுடைய வார்த்தைகள் ஆசி போலவும், ஆறுதல் போலவும் இருந்தன.

''மழை வந்தா... எனக்கு ரொம்ப ஜாலி...'' கல்பனா தன் கைகளை என் முகத்திற்கு நேரே தட்டினாள். சிரித்தாள். என் கன்னத்தைத் தேய்த்து, ''ஷேவ் பண்ணலே?'' என்று விசாரித்தாள்.

ஜி. எச். எஸ். மணியன்

அநேக விஷயங்களில் கல்பனா இன்னும் ஒரு குழந்தைதான். தினம் தினம் உலகத்தைப் புதிய கண்களோடு பார்க்கும் குழந்தை. பட்டு இழைகளாய்க் கொட்டும் மழையில் நனைவது இவளுக்குப் பிடிக்கும். அவசரமாகப் போய்க் கொண்டிருக்கும் போது கூட, சாலையில் சுற்றித் திரியும் வண்ணத்துப் பூச்சிகளை ரசிக்கும் குழந்தை இவள். இன்னும் குழந்தைப் பேறு கிட்டாத குழந்தை.

சட்டென்று வெயிலின் கடுமை அதிகமானது. சூரியன் ஓர் ஆக்ரோஷத்தோடு காய்ந்தான். மாணிக்கம் அடிக்கடி தன் மேல் துண்டால் வியர்வைக் கிறல்களைத் துடைத்துக் கொண்டான். அவனுடைய குதிரை அடிக்கடி எங்களைத் திரும்பிப் பார்த்தது. அது இந்த வெயிலில் ஏன் இந்தச் சுமை என்று கேட்டதோ? போதாக் குறைக்கு, சரளைக் கற்களாய்ச் சாலை.

''மாணிக்கம், உன் குதிரைக்குப் புல் போட்டியா?''

''போடாம...? எனக்குச் சோறு போடற புள்ளைங்க அது. எனக்குக் குழந்தையே என் குதிரை தான்...'' என்ற மாணிக்கம், நன்றாக முன்புறம் குனிந்து, அந்த வெள்ளைக் குதிரையின் கழுத்தைத் தட்டிக் கொடுத்தான்.

''மாணிக்கத்துக்குக் கூட ஒரு குழந்தை இருக்கு... நமக்குத்தான்...''

நான் இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. கல்பனா தன் கரங்களில் முகம் புதைத்து மெல்ல விசும்ப ஆரம்பித்தாள்.

''காம் யுவர்ஸெல்ஃப், கல்பனா... குழந்தையைத் தேடிண்டுதானே நாம இப்போ போகிறோம்...?''

''அவங்க அந்தக் குழந்தையை நமக்குத் தருவாங்களா...?''

''கண்டிப்பா.... அதுவுமில்லாம அது ஒரு பெண் குழந்தை... யு லைக் கேர்ள்ஸ், டோண்ட் யூ?''

''எனக்கு உங்களை மாதிரியே ஒரு பெண் குழந்தை வேணும்... அதுவும் இந்த மாதிரி மூக்கோட...''


''கொழுப்பு உனக்கு... சரி, கொஞ்ச நேரம் தூங்கிக்கறேன்...''

நான் கல்பனாவின் தோளில் தலை சாய்த்துக் கொண்டேன். நாங்கள் கடக்க வேண்டிய தூரம் என்னவோ ஐந்து மைல்தான். ஆனால், நட்சத்திரத்தை நோக்கி நெடும் பயணம் செய்வது போலிருந்தது.

''முத்தலாபுரம் இதுதானுங்க, வாங்க... மொதல்லே நுங்கு சாப்பிடுவோம். அப்புறமாக் குழந்தையைப் பத்தி விசாரிக்கலாம்.''

மாணிக்கம் ஜட்காவை ஓர் ஆல மரத்தின் நிழலில் நிறுத்தினான்.

அந்த ஆல மரத்தின் நிழலில் சில குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. எந்த





டைப்பிஸ்ட்: "இன்னைக்கு ஆபிஸ்லே நான் தூங்கி விழிக்கச் சோம்பல் முறிக்கும் போது, மானேஜர் பார்த்துட்டார்!"

தோழி: "அச்சச்சோ! என்ன சொன்னார்?"

டைப்பிஸ்ட்: "என்ன மேடம், 'டூட்டி ஓவரா'னு கேட்டார்!"

— அ. தெய்வசிகாமணி.

விதக் களங்கமோ, உடையோ இல்லாத சில குழந்தைகள், குதிரை வண்டியைப் பார்த்தும் வாய் பிளந்து நின்றார்கள். கண்களில் ஆர்வமும், பயமும் கொப்புளிக்க ஒரு சிறுமி குதிரையைத் தொட்டுப் பார்த்தாள்.

"ச்சூ...! அப்படியே உன்னை ஒதைச்சிடும்..." நான் மிரட்டினேன்.

"பாவம்... அதை ஏங்க மிரட்டிண்டு?" கல்பனா என்னைக் கடிந்து கொண்டாள். இப்போது சில குழந்தைகள் தைரியமாகக் குதிரை வண்டிக்குள் ஏற ஆரம்பித்தார்கள்.

குழந்தைகள்! குழந்தைகள்!!

கடவுள் வானத்திலிருந்து தங்கத் துளிகளாய்ச் சிந்துகிறார். நானும், கல்பனாவும் எங்கள் கைகளை விரித்து, அந்தத் தங்கத் துளிகளை நோக்கி ஏந்துகிறோம். சில தங்கத் துளிகள் காற்றில் மெல்லக் கரைகின்றன. சில காற்றில் அலைக்கழிக்கப்பட்டுத் திரிகின்றன. சில மண்ணில் சிதறிக் கலைகின்றன...நானும், கல்பனாவும் கைகளை விரித்து ஏந்தியபடி நிற்கிறோம். பத்து வருடங்களாக... எங்கள் கரங்கள் வெறுமையாகவே இருக்கின்றன.

"சரிங்க... நீங்களும், அம்மாவும் மாரியம்மன் வீதிக்குப் போய் விசாரிங்க... சோணைமுத்து, ரிடையர்ட் கான்ஸ்டபிள் வீடுன்னா எவனும் காட்டிடுவான்... நான் என் சகலை ஒருத்தன் இந்த ஊர்லே இருக்கான்... அவனைப் பார்த்துட்டு வாரேன்..."

மாணிக்கம் மேல் துண்டைத் தலைப் பாகையாகக் கட்டிக் கொண்டான். என் அருகில் வந்து, "தம்பி... குழந்தையைப் பத்தித் துப்புரவா எல்லாம் விசாரிச்சுடுங்க.. ஊமையோ, ஊனமோ இல்லேன்னு நிச்சயமாத் தெரிஞ்சுக்கணும்... பத்துப் பேரு குழந்தையை விக்கத் தயாரா இருப்பான். இந்த ஊர்லே எத்தனை பெண் சிசுக்கள் போயிட்டுது தெரியுமா...? இதெல்லாம் கல்பனா அம்மாவுக்குத் தெரிய வேண்டாம்... அதுவே ஒரு குழந்தை... கலங்கிப் போயிடும்."

சோணைமுத்துவின் மனைவிதான் முதலில் எங்களை வரவேற்றாள். நல்ல கம்பீரமான உருவம் அவளுக்கு. கோவிலில் பார்க்கும் மகமாயி போல, மஞ்சள் குளித்த முகம். காதுமடல்களில் சிக்கலாய்க் குண்டலங்கள். அவற்றைப் பூட்டுவதே பெரிய அலுவலாய் இருக்கும்.

"டேய்... ரங்கசாமி... ஒரு பாய் போடுடா... பாவிப் பயலே... கிழிசலை ஏண்டா கொண்டுட்டு வர்றே?"

ரங்கசாமி சிறுவன். இடியொலி கேட்ட நாகம் போல் நடுங்கினான். எனக்கு ஒரு பொருத்தமில்லாத முக்காலியைப் போட்டு, அதில் உட்காரச் சொன்னான்.

"டேய்... ரங்கசாமி! புனிதவேலு வீட்டுக்குப் போயி, ரெண்டு எளநீ வெட்டிட்டு வா... அப்புறம்... ம்... தமயந்திப் பாப்பா எங்கே இருக்கா பாரு... கூட்டிட்டு வா..."

"உங்க வீட்டுக்காரர் இல்லேங்களா?" கல்பனா மண்டியிட்டு, அந்தக் கிழிசல் பாயில் அமர்ந்திருந்தாள். புடைவைத் தலைப்பைப் போர்த்தியிருந்தாள். சட்டென்று வீட்டிற்குள் இருள் கவிழ்ந்தது... மழை மேகங்களோ?

"மழை வந்தாத்தான் தம்பி... இல்லாட்டா நாங்க அத்தனை பேரும் ஊரை விட்டுட்டுப் போயிட வேண்டியதுதான்......"

ஒரு விசனத்தோடு அவள் சொன்னாள். வீட்டிற்குள் ஒரு மூலையில் யாரோ சிரமப்பட்டு இருமும் சப்தம் கேட்டது.

"ஏங்க... வரீங்களா?... நம்ம சேர்வை அய்யா சொன்ன தம்பி வந்திருக்காரு.... அவரோட சம்சாரமும் வந்திருக்கு...."

சோணைமுத்து, வீட்டின் சுவரை மெல்லப் பற்றியபடி, நாங்கள் இருக்கும் இடத்திற்கு வந்தார். இரும ஆரம்பித்தார். உடம்பும், நெஞ்சுக்கூடும் குலுங்கின. மண்ணில் புதைந்து, மீள வேதனைப்படும் கார் டயர் போல இருமினார்.


"தொண்டைலே புத்து நோய்ங்க தம்பி... அதான் நித்தமும் இரும்பல்... சம்பங்கி... அவங்க சாப்பிட ஏதாச்சும் கொடுத்தியா?"

"இருக்கட்டும்... மொதல்ல கொழந்தையை வரச் சொல்லுங்க...." கல்பனா சற்றே எரிச்சலான குரலில் சொன்னாள்.

"வாசல்லே விளையாடிக்கிட்டிருந்தா... பார்க்கலே? பட்டம் விடணும்னு, சோறு கூடச் சரியாச் சாப்பிடாம ஓடிட்டா... டேய்.. ரங்கசாமி..... தமயந்தி எங்கேடா?"

வாசலிலிருந்து குளிர் காற்று வீசியது. அந்தக் காற்று, கல்பனாவின் கூந்தலிலிருந்து வாசனையைச் சுமந்து வந்தது. கல்பனா, கொலுசுச் சப்தம் கேட்க, வாசல் பக்கம்

ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



உங்களுக்கும் உங்களது முன்னற்றத்திற்கும் இடையில் இப்பொழுது உள்ள தூரம் ஒரு போஸ்ட் கார்டு தான் என்று நாங்கள் கூறினால் அது சற்று மிகையாகத் தோன்றும். ஆனால் உண்மை அதுதான்.

நீங்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஆங்கில மொழியில் போதிய பயிற்சியின்மை ஒரு தடையாக இருந்திருந்தால்........

மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசும் போது அதை ஓரளவு புரிந்து கொண்டும், அதற்கு ஆங்கிலத்திலேயே பதிலளிக்க முடியவில்லையே என்ற குறை உங்களிடம் குடி கொண்டிருந்தால்,

பல புத்தகங்களைப் படித்தும் ஆங்கிலத்தில் பேச முடியவில்லையே என்ற சலிப்பு உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்,

நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை இப்பொழுது அடைய ஒரே ஒரு போஸ்ட்கார்டுபோதும்...ஆமாம்!

ஆங்கிலத்தில் இலக்கணப் பிழையின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுத வேண்டும், தயக்க மின்றி சரளமாகப் பேசவேண்டும் என்ற உங்களது விருப்பத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்று போற்றப்படும் விவேகானந்தா கல்வி நிலையத் திற்கு இன்றே அனுப்புங்கள்.

நீங்கள் மேற்கொள்ள வேண்டிய பயிற்சியைப் பற்றியும் மற்ற தகவல்களையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள்.

வீட்டிலிருந்த படியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இந்த எளிய பயிற்சி முறையை நீங்கள் மேற்கொள்ளலாம்.

"நேர்முகப்பயிற்சியும் உண்டு."

என்ன?.....எங்கே கிளம்பி விட்டீர்கள்? போஸ்ட் கார்டு வாங்கத்தானே?

உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி துவங்கிவிட்டது.

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி

விவேகானந்தா கல்வி நிலையம்
9, மேட்லி ரோடு,
தி. நகர், சென்னை - 17.

NAGA

திரும்பினாள். அவள் கண்கள் கொள்ளாமல் ரோஜாப் பூக்கள் மலர்ந்தன.

சிறுவன் ரங்கசாமியின் விரலைப் பற்றிய படி ஒரு சிறுமி, நடந்து வந்தாள். பச்சைக் கலரில் ஒரு பாவாடை. எலுமிச்சை மஞ்சளில் சட்டை. முகம் ஓர் ஒளிவட்டத்தில் மிதக்க, அந்தச் சிறுமி கல்பனாவைப் பார்த்தாள்.

''தமயந்திக் கண்ணு..... அம்மா, அப்பா எங்கேன்னு கேட்டியே.... இதோ வந்துட்டாங்க பாரு....''

''இது உங்க குழந்தை இல்லையா? சேர்வை உங்களோட மகள்னு சொன்னாரே....''

''எம் மூத்த மக, பொண்ணுங்க தமயந்தி... அவளும், அவ புருஷனும் இப்போ உயிரோட இல்லீங்க... ரெயில் விபத்துலே செத்துப் போயிட்டாங்க.... நாந்தான் தமயந்தியை எடுத்து வளர்த்து வரேன்.''

''தமயந்தியை எங்களுக்கு... அதாவது, எங்களுக்கே கொடுத்துட உங்களுக்கும், உங்க வீட்டுக்காரருக்கும் முழுச் சம்மதம் தானே...?''

''என்ன இப்படிக் கேட்கறீங்க.. இது கொழந்தை வியாபாரம் இல்லீங்க... எங்களாலே தமயந்தியை வளர்க்க முடியலே... எங்க நெலமை அப்படி தம்பி.... இவருக்கு வைத்தியம் பண்றதைக் கூட விட்டு ஆறு மாசமாச்சு... ஏதோ, உங்க ரெண்டு பேருக்கும் பத்து வருஷமாக் குழந்தையில்லே... நீங்க தமயந்தியை ஆசையா, ஆதரவா வளர்க்காமலா போயிடுவீங்க...? மனசுலே ஒரு வேதனைங்க... ஒரு சந்தோஷங்க... அந்தச் சந்தோஷத்தோட சொல்றேன்... தமயந்தி இனிமேல உங்க குழந்தைங்க...''

சோணைமுத்துவின் மனைவி, செம்பு நிறையத் தண்ணீர் குடித்தாள். குழந்தையைப் பிரியப் போகும் துக்கத்தை, இப்படி நீர் குடித்துக் கரைத்துக் கொண்டாளோ?

கல்பனா, தமயந்தியின் கரம் பற்றி இழுத்துத் தன் மடியில் அமர்த்திக் கொண்டாள். தமயந்தி எந்தவிதத் தயக்கமும் காட்டாமல் அமர்ந்தாள். கல்பனாவின் புடைவையிலுள்ள பூக்களையும், கொடிகளையும் ஆர்வம் கொப்புளிக்கும் கண்களோடு பார்த்தாள்.

கல்பனா தமயந்தியைத் தன் மார்போடு இறுக்கிக் கொண்டாள். தமயந்தியே... அந்த மூன்று வயதுச் சிறுமியே... அதே வடிவத்தில்... கல்பனாவின் கருவிலிருந்து ஜனித்தாளோ? தங்கத்துளி ஒன்று, காற்றிலேயே வளர்ந்து, பெரிதாகி எங்கள் கரங்களில் விழுந்ததோ?

இல்லை இது ஒரு கனவா? விலாசம் மாறி, யாருடைய கனவுக்குள்ளோ நான் பிரவேசித்து விட்டேனோ?

''தம்பி... தப்பா நினைச்சுக்காதீங்க... சேர்வை அய்யா பணம் விஷயமா எதுவும் சொன்னாரா?''

என் கனவுகளின் மீது யாரோ நடப்பது போல இருந்தது.

கடவுளின் பிரசாதம் விலை பேசப்படுகிறதோ?

''சேர்வை அய்யர், எங்களோட கஷ்டத்தைப் பத்திச் சொல்லியிருப்பாருங்க. இதோ பாருங்க. இவ என் ரெண்டாவது பொண்ணு... கல்யாணி... இங்கே வா...''

வீட்டின் உட்புற மறைவிலிருந்து ஒரு பெண் வெளிப்பட்டாள். பட்ட மரம் போல் உடம்பு. பென்சில் பென்சிலாய்க் கைகள். கூந்தல் கொட்டிப் போய், முகம் ஜீவன் சிதைந்து... கழுத்தில் நூல் சரடு.

''இவதாங்க எங்களுக்கு இப்போ பெரிய பாரம். கல்யாணம் கட்டிக் கொடுத்து மூணு வருஷம் ஆவுது. நெலத்தை வித்தோம். நகையை வித்தோம். இப்போ இவ புருஷனுக்குப் பம்ப் செட்டுப் போட பணம் வேண்டியிருக்குது... எதை விக்கறது? ஒங்களுக்கும் பத்து வருஷமாக் குழந்தை இல்லீங்களே...?''

நான் ஐயாயிரம் ரூபாய் கொடுத்தேன், பம்ப் செட் வாங்கிக் கொடுக்க. அவர்கள் தமயந்தியை எனக்குக் கொடுத்தார்கள்.

கல்பனா, தமயந்தியின் முகம் அலம்பித் தலைவாரிப் பொட்டிட்டாள். தன் கூந்தல் பூவை எடுத்துக் குழந்தைக்குச் சூட்டினாள். கையோடு கொண்டு வந்த, இங்க் நீலத்தில் ஆரஞ்சு பார்டர் போட்ட பட்டுப் பாவாடையை அதற்கு அணிவித்தாள்.

குழந்தையைத் தூக்கிக் கொண்டாள். ஒரு தெய்வத்தை அந்த வீட்டிலிருந்து எடுத்துச் செல்வது போலிருந்தது.

வானம் சிலேட்டுக் கலரில் இருந்தது. மாணிக்கம் குதிரையைப் பூட்டிவிட்டுத் தயாராக இருந்தான். முதலில் தமயந்தி ஏறினாள். கல்பனா ஏறியதும் மழைத்துளிகள் விழ ஆரம்பித்தன. மாணிக்கம் என்னைத் தனியாக அழைத்தான்.

''ஐயா... நல்லா விசாரிச்சீங்களா? நானும் ரெண்டு மூணு எடத்துலே துப்புரவா விசாரிச்சேன்...''

''இனிமே கொழந்தை எங்களோடது... மாணிக்கம்... இப்பவே பாரேன்... ஒட்டிக்கிச்சு...''

''இல்லீங்க... இந்தக் குழந்தையோட தாய், தகப்பன் இரண்டு பேருமே உயிரோடு இருக்காங்களாம். ஏதோ கொல்லம் பக்கத்துலே ஒரு சாயபு காண்ட்ராக்டர்... அவர்கிட்டே, ரெண்டு பேரும் கொத்தடிமைகளா இருக்கிறாங்களாம். அவங்க எங்கே திரும்பி வரப் போறாங்க...? ஆனா...!''

நான் கல்பனாவைப் பார்த்தேன். அவளும், தமயந்தியும் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மூக்கிலும், புறங்கையிலும் விழும் மழைத்துளிகளை ரசித்தார்கள். கல்பனாவின் மடியில் ஒரு தங்கத்துளி. பட்டுப் பாவாடையோடு ஒரு தங்கத்துளி.

கல்பனாவின் மடியிலிருப்பது ஒரு கனவின் நிழல் என்பது மட்டும் எனக்குப் புரிந்தது.

ஜட்கா புறப்பட்டது.



அத்தியாயம் 41

பாயுதே தீ!

இத்தனை நேரம் அசைவற்று உட்கார்ந்திருந்த சம்பு வரையர் இப்போது பாய்ந்து எழுந்து கந்தமாறனுடைய கையைப் பிடித்துக் கொண்டார்.

"அடே மூடா! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்?" என்றார்.

"தந்தையே! இந்தச் சினேகிதத் துரோகியைக் கொல்லுவதிலே என்ன தவறு?" என்றான் கந்தமறன்.

"என்ன தவறா? அதனால் நானும் நீயும் இந்தப் பழைமையான சம்புவரையர் குலமும் அழிந்து போவோம். இவனைக் கொன்று விட்டால் இளவரசரையும் இவனையும் சேர்த்துக் கொன்று விட்டதாக நம் பேரில் அல்லவா பழி சுமத்துவார்கள்? இது கூடவா உனக்குத் தெரியவில்லை?" என்றார் தந்தை.

"அவ்வாறு நம் பேரில் பழி சுமத்தக் கூடிய வல்லமையுடையவன் யார்? அவ்விதம் குற்றம் சுமத்திவிட்டு அவன் உயிருடன் பிழைத்திருப்பானா?" என்று கேட்டான் கந்தமாறன்.

"ஐயோ! அசட்டுப் பிள்ளையே! உன்னுடைய வீரத்தையும் துணிச்சலையும் இதிலேதானா காட்ட வேண்டும்? உன்னுடைய யோசனையை ஆரம்பத்திலிருந்து கேட்டதினாலேதான் இந்த விபரீதம் நம் வீட்டில் நடந்து விட்டது! பெரிய பழுவேட்டரையரையும் மற்றச் சிற்றரசர்களையும் நீதான் இந்த வீட்டுக்கு அழைத்தாய். மதுராந்தகத் தேவர் இரகசியமாக இங்கே வந்ததும் உன்னாலேதான். அது இந்த உன் அருமைச் சினேகிதன் மூலம் எல்லாருக்கும் தெரிந்து விட்டது. பிறகு ஆதித்த கரிகாலரைக் காஞ்சியிலிருந்து அழைத்து வந்தவனும் நீதான்! ஐயோ! அதன் விளைவு இப்படியாகும் என்று நான் நினைக்கவே இல்லையே! மலையமான் – நமது குலத்தின் பழமையான விரோதி—பெரியதொரு படையுடன் நெருங்கி வந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு என்ன சொல்லப் போகிறேன்?...... பழுவேட்டரையரும் இச் சமயம் பார்த்து ஊருக்குப் போய்விட்டார்!...." என்று கூறிச் சம்புவரையர் திரும்பவும் தலையிலே அடித்துக் கொண்டார்.

கந்தமாறன் கண்களில் நீர் ததும்ப "தந்தையே! தாங்கள் வீணாக வேதனைப் பட வேண்டாம். என்னால் நேர்ந்த விபரீதத்துக்கு நானே தண்டனை அனுபவிக்கிறேன். தாங்கள் என்ன கட்டளையிடுகிறீர்களோ, அவ்விதம் செய்யக் காத்திருக்கிறேன்!" என்றான்.

"முதலில் இந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு போய் அந்தப்புரத்தில் விட்டு விட்டுவா! இவள் ஏதாவது உளறினால் வாயிலே துணியை அடைத்துக் கையையும் காலையும் கட்டிப் போட்டு விட்டு வா! இல்லாவிட்டால் இரகசிய அறையில் போட்டுப் பூட்டி விட்டு வா!" என்றார் சம்புவரையர்.

மணிமேகலை தன் அருமைத் தந்தை அப்போது கொண்டிருந்த ரௌத்ராகாரத்தைப் பார்த்து விட்டு நடு நடுங்கினாள். வந்தியத்தேவனுக்கு இப்போது உடனே ஆபத்து ஒன்றுமில்லை என்பதையும் தெரிந்து கொண்டாள்.

"தந்தையே! மன்னிக்க வேண்டும். தங்கள் கட்டளைப்படி நடந்து கொள்வேன். கந்தமாறன் என்னைத் தொட வேண்டாம். நானே

அமரர் கல்கி

இதோ தாய்மார்கள் இருக்கும் அந்தப்புரத்துக்குப் போய் விடுகிறேன்!'' என்று சொல்லி விட்டு விடு விடு என்று அங்கிருந்து நடந்து சென்றாள். கந்தமாறனும் அவளைப் பின் தொடர்ந்து போனான்.

அவர்கள் சென்றவுடனே சம்புவரையர் தம்முடன் வந்திருந்த ஆட்களைப் பார்த்து, ''இவனை அந்தக் கட்டில் காலுடன் சேர்த்து இறுக்கிக் கட்டுங்கள்!'' என்று உத்தர விட்டார்.

அவ்விதமே ஆட்கள் வந்தியத்தேவனை நெருங்கி வந்த போது அவன் அமைதியாக இருந்தான். கட்டில் காலுடன் சேர்த்துக் கட்டிய போதும் அவன் எவ்விதத் தடங்கலும் செய்யவில்லை. கட்டி முடிந்தவுடனே அவன், ''ஐயா! சற்றே யோசித்துப் பாருங்கள்! கரிகாலருடைய அந்தரங்கத்துக்குரிய நண்பன் நான். அவரைக் கொல்லுவதினால் எனக்கு என்ன லாபம்? உண்மையில் அவரைக் கொன்ற பாதகர்கள் சுரங்கப் பாதை வழியாகத் தப்பித்துக் கொண்டு போய் விட்டார்கள். அவர்களைத் தொடர்ந்து போய்ப் பிடிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். அவர்களை நான் பார்த்திருக்கிறேன். என்னை அவிழ்த்து விட்டால், நானே தங்களுடன் வந்து அவர்களைப் பிடிப்பதற்கு உதவி செய்வேன்! கடவுள் அறியச் சத்தியமாகச் சொல்கிறேன். தங்களிடமிருந்து தப்பிச் செல்வதற்கு நான் பிரயத்தனம் செய்ய மாட்டேன்!'' என்றான்.

''அடே! நீ சொல்லுவது உண்மையானால், கரிகாலர் கொலை செய்யப்படும் போது நீ என்ன செய்து கொண்டிருந்தாய்? வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாயா?'' என்றார் சம்புவரையர்.

''ஐயா! பழுவூர் ராணியும் கரிகாலரும் பேசிக் கொண்டிருந்த போது திடீரென்று கொலைகாரர்கள் பிரவேசித்தார்கள். அவர்களைத் தடுக்க நான் யத்தனித்தபோது பயங்கரமான தோற்றமுடைய காளாமுகன் ஒருவன் என் கழுத்தைப் பிடித்து நெறித்தான். நான் நினைவிழந்து விட்டேன். மறுபடியும்நினைவுவந்தபோது ஆதித்தகரிகாலர் உயிரற்று விழுந்து கிடப்பதைக் கண்டேன்!'' என்றான் வந்தியத்தேவன்.

இச்சமயத்தில் அந்த மாளிகைச் சுவருக்கு அப்பால் பெரியதொரு கூச்சல் கேட்டது. ஆயிரக்கணக்கானவர்களின் கோபக் குரலிலிருந்து எழுந்த கோஷத்தைப் போல் தொனித்தது.

சம்புவரையர் அதைக் காது கொடுத்துக் கேட்டார். வந்தியத்தேவனைப் பார்த்து, ''சரி! சரி! நீ சொல்வது உண்மையாகவே இருந்தாலும் சற்று நேரம் நீ இங்கேயே இரு! உன்னுடைய அருமை நண்பராகிய இளவரசருக்குத் துணையாக இரு! அது என்ன கூச்சல் என்று பார்த்து விட்டுப் பிறகு வருகிறேன்! வந்து உன் கட்சியை முழுதும் தெரிந்து கொள்கிறேன்!'' என்றுகூறிவிட்டுச் சம்புவரையர் புறப்பட்டார். அவருடன் ஆட்களும் கிளம்பினார்கள். போகும்போது சம்புவரையரின் கட்டளைப்படி அந்த அறையின் கதவைச் சாத்தி வெளிப்புறத்தில் தாளிட்டு விட்டுச் சென்றார்கள்.

மறுபடியும் அந்த அறையில் இருள் சூழ்ந்தது. வந்தியத்தேவனுடைய உள்ளத்திலோ சொல்ல முடியாத வேதனை குடிகொண்டது! சில மாதங்களுக்கு முன்னர் அந்தக் கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்குத் தான் வந்ததிலிருந்து நடந்தவற்றையெல்லாம் நினைத்துப் பார்த்துக் கொண்டான். வானத்திலே அப்போது தான் பார்த்த தூமகேதுவையும் அதைப் பற்றி மக்கள் பேசிக் கொண்டதையும் ஞாபகப் படுத்திக் கொண்டான். வானத்தில் வால் நட்சத்திரம் காணப்பட்டமையால் சுந்தர சோழருடைய இறுதி நாள் நெருங்கி விட்டதாக எல்லாரும் நினைத்தார்கள். சுந்தரசோழர் நீண்ட நாட்களாக நோய்ப் பட்டுக் கிடந்தபடியால் அவ்வாறு மக்கள் எதிர்பார்த்தது இயற்கைதான். அதனாலேயே அவருக்கு அடுத்தாற்போல் பட்டத்துக்கு வரக்கூடியவர் யார் என்பது பற்றியும் ஜனங்கள் பேசினார்கள். இந்த மாளிகையிலேயே சிற்றரசர்கள் கூடி அதைப் பற்றிப் பேசினார்கள். ஆனால் எல்லாரும் எதிர்பார்த்தது ஒன்றும், நடந்தது ஒன்றுமாக முடிந்தது. வாலிப வயதினரும் வீராதி வீரருமான ஆதித்த கரிகாலர் மாண்டு போனார். உயிரற்ற அவரது உடல் இதோ இந்த அறையில் கிடக்கிறது. நோய்ப்பட்டுள்ள சுந்தர சோழர் இன்னும் உயிரோடு இருக்கிறார். ஆனால் இன்னும் நெடுங்காலம் இருப்பாரா? தமது அருமைக் குமாரரின் அகால மரணச் செய்தியை அறிந்த பிறகும் உயிரோடு இருப்பாரா? ஐயோ! மகனைப் பார்க்க வேண்டுமென்று தந்தை எவ்வளவு ஆவல் கொண்டிருந்தார்? தந்தை வந்து தங்கியிருப்பதற்காகக் கரிகாலர் காஞ்சியில் பொன் மாளிகை கட்டினாரே? அந்தப் பொன் மாளிகையில் தந்தையை வரவேற்று உபசரிப்பதற்குக் கொடுத்து வைக்காமல் குமாரர் போய் விட்டாரே? இதிலிருந்து இன்னும் என்னென்ன விளையப் போகிறதோ, தெரியவில்லை. சோழ சாம்

ராஜ்யம் முழுவதும் ஒரே துயர வெள்ளத்தில் முழுகப் போகிறது. அது மட்டுந்தானா? எத்தனை விதமான உட்கலகங்கள் விளையப் போகின்றனவோ, யாருக்குத் தெரியும்? சிற்றரசர்களுக்குள் பெருஞ் சண்டை மூளப் போகிறது நிச்சயம். சற்று முன்னால் வெளியிலே கேட்ட சத்தம் மலையமானுடைய படை வீரர்கள் போட்ட சத்தமாகத்தான் இருக்க வேண்டும்! அவர்கள் எதற்காக அப்படிக் கோஷமிட்டார்கள்? இந்தக் கடம்பூர் மாளிகையைத் தாக்கப் போகிறார்களா, என்ன? எதற்காக? கரிகாலருடைய மரணம் பற்றிய செய்தி ஒரு வேளை அவர்களுக்கு எட்டியிருக்குமோ? ஆகா! சம்புவரையர் இதை எப்படிச் சமாளிக்கப் போகிறார்? நம் பேரில் கரிகாலரைக் கொன்ற குற்றத்தைச் சுமத்திச் சமாளிக்கப் பார்ப்பார். ஆனால் அதை மலையமான் நம்புவாரா? நம்பினாலுங்கூட, சம்புவரையரின் மாளிகையில் இது நடந்திருப்பதால் அவரைச் சும்மா விட்டு விடுவாரா? முன்னர் இங்கே நடந்த சதியாலோசனையைப் பற்றி மலையமானுக்குத் தெரிந்திருக்க வேண்டும். தெரிந்திரா விட்டாலும் ஆழ்வார்க்கடியான் போய் எச்சரித்து விட்டுப் போயிருக்கிறான். ஆகையினாலே தான் படை திரட்டிக் கொண்டு வருகிறார். மலையமான் தம் பேரப்பிள்ளை மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தார் என்பது வந்தியத் தேவனுக்கு நன்றாய்த் தெரியும். இந்தச் செய்தியை அறியும் போது அவர் என்ன செய்வார் என்பது யாருக்குத் தெரியும்? சம்புவரையர் குடும்பத்தையே நாசம் செய்து இந்த மாளிகையையும் அடியோடு அழித்துப் போட்டாலும் போட்டு விடுவார்.

பாவம்! கந்தமாறன்! நல்ல பிள்ளை! நம்மிடம் எவ்வளவு சினேகமாக இருந்தான்? அவ்வளவு சினேகமும் கொடியதுவேஷமாக அல்லவா மாறி விட்டது? எல்லாம் அந்தப் பழுவூர் மோகினியின் காரணமாகத்தான்... பார்க்கப் போனால், அவளுடைய கதையும் சோக மயமாக இருக்கிறது. அவள் பேரிலே தான் எப்படிக் குற்றம் சொல்லுவது? எல்லாம் விதி செய்யும் கொடுமைதான்.....!

விதி! விதி! மணிமேகலையின் விதியை என்ன வென்று சொல்லுவது? என்னிடம் எதற்காக அவள் இவ்வளவு அன்பு காட்ட வேண்டும்? என்னைத் தப்புவிப்பதற்காக முன் வந்து 'நான் கொன்றேன்' என்று ஒப்புக் கொண்டாளே? இத்தகைய அன்புக்கு இணை ஏது? — இதற்குக் கைம்மாறுதான் என்ன செய்யப் போகிறேன்....?

வந்தியத் தேவன் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். கைம்மாறு செய்வதைப் பற்றி எண்ணுவது என்ன பைத்தியக்காரத்தனம்! மற்றவர்களைப் பற்றி நான் பரிதாபப் படுவதிலேதான் என்ன அர்த்தம் இருக்கிறது? என்னுடைய நிலைமையைக் காட்டிலும் பயங்கரமான பரிதாபமான நிலைமையில் உள்ளவர்கள் வேறு யாரும் இல்லை! ஆதித்த கரிகாலரைக் கொன்றதாக என் பேரில் குற்றம் சுமத்தப் போகிறார்கள்! நான் அந்தப் பாதகத்தைச் செய்யவில்லை என்று நிரூபிப்பதற்கு எவ்விதச் சாட்சியமும் இல்லை. நந்தினியும் ரவிதாஸன் கூட்டத்தாரும் போயே போய் விட்டார்கள். அவர்களைத் தொடர்ந்து போய்ப் பிடிப்பதற்கு யாரும் முயலவில்லை. அவர்களை ஒரு வேளை பிடித்தாலுங் கூட நானும் அவர்களுடன் சேர்ந்து சதி செய்யவில்லை என்று எப்படி நிரூபிக்க முடியும்? முடியாது!

பட்டத்து இளவரசரைக் கொலை செய்த துரோகிக்கு என்ன விதமான தண்டனை கொடுப்பார்கள்? வெறுமனே கொலைக்குக் கொலை என்று தண்டனை கொடுத்துவிட மாட்டார்கள். இம்மாதிரி காரியத்தை இனி யாரும் கனவிலும் செய்ய நினையாத வண்ணம் பயங்கரமான சித்திரவதைத் தண்டனை ஏற்படுத்துவார்கள். என்ன விதமான தண்டனை கொடுத்தாலும் கொடுக்கட்டும். கரிகாலரை நான் கொன்று விட்டதாகப் பழையாறை இளையபிராட்டியும் பொன்னியின் செல்வரும் கருதுவார்கள் அல்லவா? அதைக் காட்டிலும் வேறு என்ன சித்திரவதை கொடுமையாக இருக்க முடியும்? தெய்வமே! சென்ற மூன்று நான்கு மாத காலத்தில் நான் எவ்வளவோ இக்கட்டுகளில் தப்பி வந்ததெல்லாம் இந்தப் பயங்கரமான அபகீர்த்திக்கு ஆளாவதற்குத்தானா.....?

இவ்வாறெல்லாம் வந்தியத் தேவனுடைய உள்ளத்தில் அலைமேல் அலை எறிவது போல் எத்தனையோ எண்ணங்கள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. எவ்வளவு நேரம் இப்படிக் கழிந்தது என்று அவனுக்குத் தெரியாது. இருளடர்ந்திருந்த அந்த அறையில் திடீரென்று மெல்லிய புகைப் படலம் பரவிய போது அவனுடைய எண்ணத் தொடர்பு கலைந்தது. அது என்ன புகை, எங்கிருந்து வருகிறது என்று யோசிக்கத் தொடங்கினான். சற்று நேரத்துக்கெல்லாம் மிகச்சொற்ப வெளிச்சமும் பரவியது. அந்த வெளிச்சத்தில் ஆதித்த கரிகாலரின் உடல் தெரிந்தது. கதவுகள் சாத்திய படியே இருந்தன. ஆகையால் விளக்கு வெளிச்சமாக இருக்கமுடியாது. பின், என்ன வெளிச்சம்? நாலா பக்கமும் கூர்ந்து கவனிக்

கலானான். புகையும் வெளிச்சமும் பக்கத்து வேட்டை மண்டபத்திலிருந்து வருகின்றன என்பதை அறிந்தான். வேட்டை மண்டபத்திலிருந்து புகை வருவதற்குக் காரணம் என்ன....? ஒருவேளை தீப்பிடித்திருக்குமோ? வேட்டை மண்டபத்தின் வழியாக, சுரங்கப் பாதையில் சென்றவர்கள், வேண்டுமென்றே தீ வைத்து விட்டுப் போயிருப்பார்களோ? அல்லது அவனும் மணிமேகலையும் வேட்டை மண்டபத்துக்குள் வந்தபோது கொண்டு வந்த விளக்கு இந்த விபத்துக்குக் காரணமாயிருக்குமோ....?

வர வரப் புகை அதிகமாயிற்று. உஷ்ணமும் அதிகரித்து வந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் வேட்டை மண்டபத்துக்கும் அந்த அறைக்கும் இடையிலிருந்த மரப்பலகைச் சுவர்களின் இடுக்குகளின் வழியாகத் தீயின் ஜுவாலைகள் தெரியத் தொடங்கின. இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் அக்கினி பகவான் தமது ஜோதிமயமான கரங்களை நீட்டித் துழாவிக் கொண்டு, அந்த அறைக்குள்ளேயே பிரவேசித்து விட்டார்!

அக்கினி பகவானுடைய பிரவேசத்தைக் கொஞ்ச நேரம் வந்தியத் தேவன் கண் கொட்டா ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். முதலில் அவனுக்கு ஒரு குதூகலமே ஏற்பட்டது. "நம்முடைய கவலைகளையெல்லாம் அக்கினி பகவான் தீர்த்து வைத்துவிடப் போகிறார். ஆதித்த கரிகாலருக்கும் நமக்கும் ஒரே இடத்தில் தகனக் கிரியை நடந்து விடப் போகிறது!" என்று எண்ணினான். ஆனால் இது சிறிது நேரந்தான் நிலைத்திருந்தது. கரிகாலரைக் கொன்றவன் என்ற குற்றச் சாட்டுதலுடன் இந்த உலகைவிட்டுப் போவதற்கு அவன் இஷ்டப்படவில்லை. சம்புவரையரும் அவருடைய மகனும் அப்படித்தான் வெளியிலே சொல்லுவார்கள். சிலர் அதை நம்பவும் செய்வார்கள். யார் நம்பினாலும் நம்பாவிட்டாலும் பொன்னியின் செல்வரும் குந்தவை தேவியும் அவ்வாறு நம்பக் கூடாது. நான் அந்தப் பயங்கரக் குற்றத்தைச் செய்யவில்லை என்று அவர்களுக்காகவேனும் நிருபித்தாக வேண்டும். அது மட்டும் அல்ல; வீராதிவீரரான கரிகாலருடைய திருமேனிக்கு இறுதிச் சடங்கு இப்படி நடக்கும்படி விடலாமா? அவருடைய பெற்றோர்களும் உற்றார் உறவினர்களும் அவருடைய உயிரற்ற உடம்பையாவது பார்க்க வேண்டாமா....? ஆம், ஆம்! அவருடைய உயிரைக் காப்பாற்ற முடியாவிட்டாலும் அவருடைய உடம்பையாவது காப்பாற்ற வேண்டும். சக்கரவர்த்தித் திருமகனுக்குரிய மரியாதைகளுடனே இறுதிச் சடங்குகளைச் செய்வதற்கு வழி தேட வேண்டும்!......

அதுவரையில் வந்தியத்தேவன் தன்னை விடுவித்துக் கொள்ளப் பிரயத்தனம் செய்யவில்லை. அவனை எப்படிக் கட்டியிருக்கிறார்கள் என்றுகூடக் கவனிக்கவில்லை. இப்போது கவனித்தான். முதலில்



அவனுடைய முன் கைகள் இரண்டையும் சேர்த்துக்கட்டி அந்தக் கயிற்றைக்கொண்டே அவன் உடம்பு முழுவதையும் கட்டிலின் காலோடு சேர்த்துக் கட்டியிருந்தார்கள். குனியவோ நிமிரவோ முடியவில்லை. அவனுடைய பலம் முழுவதும் செலுத்திக் கைக் கட்டுக்களை இழுத்தும் பல்லினால் கடித்தும் அவிழ்த்துக் கொள்ளப் பார்த்தான்; முடியவில்லை. அவ்வாறே உடம்பின் கட்டுக்களைத்திமிறி அவிழ்க்கப்பார்த்தான்; அதுவும் முடியவில்லை. ஆனால் அப்படி உடம்பைத் திமிறிய போது கட்டில் அசைந்தது. உடனே ஒரு யோசனை தோன்றியது. கட்டிலை இழுத்துக் கொண்டு வேட்டை மண்டபத்தின் இரகசிய வாசலை நோக்கிச் சென்றான். அது அவ்வளவு எளிதாக இல்லை. அங்குலம் அங்குலமாக நகர வேண்டியிருந்தது. கட்டிலை இழுத்த போதெல்லாம் அவன் உடம்பின் கட்டுக்கள் இறுகி வேதனை உண்டாக்கின. ஆயினும் சகித்துக் கொண்டு சென்றான். வாசலை நெருங்கிய போது, சாத்தியிருந்த கதவு இடுக்குகளின் வழியாகத் தீயின் ஜுவாலைகள் வந்து கொண்டிருந்தன. அந்த ஜுவாலைகளில் கையைக் கட்டியிருந்த கயிற்றுக் கத்தையைப் பிடித்தான். கயிற்றில் தீப் பிடித்தது. அதே சமயத்தில் அவனுடைய கைகள் மீதும் நெருப்பு ஜுவாலைகள் வீசிச் சகிக்க முடியாத வேதனையை உண்டாக்கின. ஆயினும்பொறுத்துக்கொண்டிருந்து,நெருப்புப் பிடித்துக் கைக்கட்டு அறுபட்டவுடனே உடம்பின் கட்டுக்களை அவசர அவசரமாக அவிழ்த்துக் கொண்டான். அவிழ்த்து முடிவதற்குள்ளே கட்டிலின் திரைச் சீலைகளிலே தீப் பிடித்துக் கொண்டது. அறையில் புகை சூழ்ந்தது. வந்தியத் தேவனுடைய உடம்பெல்லாம் பற்றி எரிவது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. அவனுடைய கண்களில் முதலில் எரிச்சல் கண்டது. பின்னர் கண்ணீர் ததும்பிற்று. கண் பார்வையே மங்கத் தொடங்கியது.

ஏது? ஏது? நானும் இளவரசரோடு இங்கேயே மாண்டு எரிந்து போக வேண்டியது தான்! ஒரு விதத்தில் இதுவும் நல்லதுதானே! இளவரசரைக் காப்பாற்றத்தான் முடியவில்லை; அவரோடு சாகும் பேறாவது எனக்குக் கிடைக்கட்டும்!.... சீச்சீ! இது என்ன யோசனை? நான் இறப்பது பற்றிக் கவலையில்லை. இளவரசருடைய உடல் இங்கு எரிந்து சாம்பரானால், எனக்கு அழியாத பழி அல்லவா ஏற்படும்? என்னை அறிந்தவர்கள் என்னுடைய நினைவு வரும்போதெல்லாம் என்னைச் சபிப்பார்களே? அத்தகைய பழிக்கு இடங் கொடுத்து நான் ஏன் சாக வேண்டும்? இளவரசரின் உடலை எப்படியேனும் வெளியே எடுத்துச் செல்வேன். அவருடைய பாட்டன் மலையமானிடம் ஒப்புவிப்பேன். இளவரசரை நான் கொல்லவில்லையென்றும், கொன்றவர்களைக் கண்டு பிடித்துக் கொடுப்பேனென்றும் உறுதிகூறுவேன். அவ்வாறு ஒப்புக்கொண்ட காரியத்தைச் செய்து முடித்த பிறகு நான் இறந்தால் பாதகம் இல்லை. அதுவரையில் எப்படியாவது இந்த உயிரை வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.....

வந்தியத் தேவன் இப்போது கட்டுக்கள் அனைத்தையும் அவிழ்த்துக் கொண்டு விடுதலை பெற்றான். ஆனால் இது என்ன? கட்டில் தீப்பிடித்து எரிகிறதே! வெப்பம் தாங்க முடியவில்லையே? கண்களைத் திறக்கவே முடியவில்லையே? திறந்தாலும் புகை மண்டிக் கிடப்பதால் ஒன்றுமே தெரியவில்லையே?..... ஆயினும் இளவரசரின் உடலைக் கண்டு பிடித்துத்தான் ஆகவேண்டும். வந்தியத் தேவன் தரையில் உட்கார்ந்த வண்ணம் பரபரப்புடன் கையை நீட்டித் துழாவிக் கொண்டு அங்குமிங்கும் அவசரமாக நகர்ந்து தேடினான். தேடிய நேரம் சில நிமிஷந்தான் இருக்கும்; ஆனால் பல யுகங்களைப் போல் அவனுக்குத் தோன்றியது. கடைசியாக இளவரசரின் உடம்பு அவனுடைய கைகளுக்குத் தட்டுப்பட்டது. அந்த உடம்பைத் தூக்கி எடுத்துத் தோளின் மேல் போட்டுக் கொண்டான். அப்போது தான் வெளியே போவது எப்படி என்ற யோசனை உண்டாயிற்று. வேட்டை மண்டபத்துக்குள் போவது இயலாத காரியம்! ஆகா! அங்கே எத்தனையோ காலமாகச் சம்புவரையர்கள் சேகரித்து வைத்திருந்த மிருகங்களெல்லாம் இதற்குள் எரிந்து சாம்பராகப் போயிருக்கும்!..... அந்த அறையிலிருந்து சாதாரணமாக எல்லாரும் வெளியே போவதற்குரிய பிரதான வாசலை அடைந்தான். ஒரு கையினால் கதவை இடித்துப் பார்த்தான்; காலினால் உதைத்துப் பார்த்தான்; உடம்பினால் கதவின் பேரில் மோதிக் கொண்டும் பார்த்தான். "தீ! தீ! கதவைத் திறவுங்கள்!" என்று சத்தம் போட்டுப் பார்த்தான். ஒன்றும் பயன்படவில்லை. சீச்சீ! என்ன அறிவீனம்! யாழ்க்களஞ்சியத்தின் வழியாகத்தான் ஏறிப் போக வேண்டும்! ஐயோ! அதற்குள் அதிலேயும் தீப் பிடிக்காமல் இருக்க வேண்டுமே? இத்தனை நேரம் வீண் பொழுது போக்கி விட்டோமே?

இப்போது அந்த அறை நல்லபிரகாசமாக இருந்தது. ஆனால் அந்தப் பிரகாசம் பயன்படாதபடி புகை மண்டிக் கிடந்தது. கண்ணைத் திறந்து பார்க்கவே முடியவில்லை. கஷ்டத்துடன் பார்த்தாலும் திக்குத் திசை தெரியவில்லை. யாழ்க்களஞ்சியம்

இருக்குமிடத்தைஉத்தேசமாகக்குறிவைத்துக் கொண்டு வந்தியத் தேவன் ஓடினான். வழியில் காலில் ஏதோ தட்டுப்பட்டது. அது 'டணார்' என்ற ஒலியை உண்டாக்கியது. ஆகா! அது தனக்கு நினைவு வந்தபோது பக்கத்தில் கிடந்து கைக்கு அகப்பட்ட இருகுமடல் உள்ள கத்தியாகவே இருக்க வேண்டும். அந்தக் கத்தியில் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது. அதை எடுத்துக் கொள்ளலாம். வழியில் யாராவது குறுக்கிட்டுத் தடுத்தால் ஒரு வேளை அந்தக் கத்தி உபயோகப் பட்டாலும் படும்.....

இவ்விதம் எண்ணி அந்தக் கத்தியைக் குனிந்து எடுத்தான் அப்போது எரிந்த கட்டிலிலிருந்து தெறித்து வந்த ஜுவாலைத் தணல் ஒன்று அவன் தோள்மீது விழுந்தது. அதைத் தட்டி அப்பால் எறிந்துவிட்டு, ஓடிப் போய் யாழ்க் களஞ்சியத்தை அடைந்தான். இவ்வளவு நேரமும் அவன் தோள்மீது சாத்தியிருந்த கரிகாலருடைய தேகத்தை அவனுடைய ஒரு கை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவ்விதம் தோள் மீது சாத்திக் கொண்டே களஞ்சியத்தின் படிகளில் ஏறுவது அசாத்தியம். மேலே கதவு வேறே சாத்தியிருந்தது. எனவே கரிகாலருடைய தேகத்தைக் கீழே நிறுத்தி வைத்து விட்டு எறி மேலேயுள்ள கதவைத் திறந்தான். பாதிக் களஞ்சியத்தில் நின்று கொண்டு குனிந்து எடுத்தான். தெய்வமே! அதற்குள் தீ அக் களஞ்சியத்துக்கும் வந்து விட்டதே! இன்னும் சில நிமிஷம் தாமதித்திருந்தால், இந்த வழியும் இல்லாமல் போயிருக்கும்!....

வந்தியத்தேவன் மேல் மச்சில் கரிகாலருடைய உடலைத் தூக்கிப் போட்டுவிட்டுத் தானும் ஏறி வந்து சேர்ந்தபோது பாதிப் பிராணன் போனவனாக இருந்தான். இத்தனை நேரம் நெருப்பிலும் புகையிலும் வெந்து கொண்டிருந்தவன் மீது இப்போது குளிர்ந்த காற்று வீசிற்று. சிறிது நேரம் அங்கேயே கிடந்து இளைப்பாறலாமா என்று யோசித்தான். கூடாது, கூடாது! ஒரு நிமிஷங் கூடத் தாமதிக்கக் கூடாது! தீப் பிடித்த அக் கட்டடம் எப்போது இடிந்து விழும் என்று யார் கண்டது? மறுபடியும் கரிகாலருடைய உடலை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு மேல் மச்சு வழியாகவே விரைந்து சென்றான். முன்னொரு தடவை போனது போலவே மாட கூடங்களைக் கடந்து சென்றான். ஆனால் முன்னே அவன் தனியாகப் போனபடியால் மாளிகை மச்சிலிருந்து கீழே இறங்கி நிலா முற்றத்தைக் கடந்து மதில் சுவர்மீது ஏறிக் குதித்துப்போவது சாத்தியமாயிருந்தது. இப்போது அது முடியுமா? அவன் மிகவும் களைத்துப் போயிருந்தது மின்றி ஆதித்த கரிகாலருடைய தேகத்தையும் அல்லவா தூக்கிப்போக வேண்டியிருக்கிறது?

அப்போது அம் மாளிகைக்கு வெளியே நாலா பக்கங்களில் இருந்தும் எழுந்த பெரும் ஆரவாரக் கூச்சல் மீது அவன் கவனம் சென்றது. ஆகா! இது என்ன? மலையமானுடைய வீரர்கள் கோட்டையைத் தாக்கத் தொடங்கி விட்டார்கள் போலிருக்கிறதே! முன்வாசல் கதவைத் தாக்கித் தகர்க்கிறார்கள் போலிருக்கிறதே! மதில் சுவர் மீது வீரர் பலர் ஏறிக் குதிக்கிறார்களே! இளவரசர் கொலையுண்டார் என்ற செய்தியை அறிந்துதான் மலையமான் கடம்பூர் மாளிகையைத் தாக்கக் கட்டளையிட்டு விட்டாரா? அப்படியானால், கரிகாலருடைய உடலைத் தூக்கிக் கொண்டு வரும் என்னைப் பார்த்தால் அவ் வீரர்கள் என்ன செய்வார்கள்? ஏன்? நான்தான் அவரைக் கொன்றதாக எண்ணிக் கொள்வார்கள்! என்னைச் சின்னா பின்னம் செய்து போடுவார்கள்! ஆகையால் நான் மிக ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். யார் கண்ணிலும் தென்படாமல் போக வேண்டும். மலையமான் இருக்குமிடத்தைக் கண்டு பிடித்து அவரிடம் அவருடைய பேரப் பிள்ளையின் திரு மேனியை ஒப்படைத்து விட வேண்டும். அதற்குப் பிறகு நடப்பது நடந்து விட்டுப் போகட்டும்.....!

பின்னர், வந்தியத் தேவன் மிக ஜாக்கிரதையாக மாட கூடங்களின் மறைவிலும் அவற்றின் நிழல்படர்ந்திருந்த இருளான இடங்களிலுமே பதுங்கிப் பதுங்கி நடந்து சென்றான்.

கடைசியாக, முதல் தடவை அங்கே வந்திருந்தபோது எவ்விடத்தில் நின்று கீழே நடந்தசிற்றரசர்களின்சதியாலோசனையைக் கவனித்தானோ, அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தான்.

கீழே எப்படி இறங்குவது என்பதாக யோசித்துக் கொண்டு அவன் அங்கு மிங்கும் பார்த்தபோது, சுவர் ஓரத்தில் ஏணி ஒன்று வைக்கப்பட்டிருந்தது புலப்பட்டது. அது மட்டும் அல்ல; ஏணியின் பக்கத்தில் மனித உருவம் ஒன்றும் தெரிந்தது.. அது யாராயிருக்கும்? ஏணியை வைத்துக் கொண்டு யாருக்காகக் காத்திருக்கிறான்? தான் அந்த ஏணி வழியாகக் கீழே இறங்கினால் என்ன நேரும்? என்ன நேர்ந்தாலும் சரிதான்! அந்த ஏணியை உபயோகப்படுத்திக் கொண்டே தீர வேண்டும்! நல்ல வேளையாகக் கைவிலே

திருமாலின் விளையாட்டு!



விடுமுறை பயணச் சலுகை பெற்று என் கணவர், என்னையும் குழந்தைகளையும் திருப்பதிக்கு அழைத்துச் சென்றார். எங்கள் கார் ஆந்திர எல்லைக்குள் நுழைந்து சிறிது தூரம் சென்றதுமே ஆந்திர போலீஸாரால் நிறுத்தப்பட்டது. எங்கள் காருக்கான காலாண்டு வரியை நாங்கள் கட்டியிருந்தும், அப்போது ஆர்.டி.ஓ. ஆபீஸில் அதற்கான டோக்கன் ஸ்டாக் இல்லாததால், நாங்கள் வரி கட்டியதற்கு அடையாளமாக — தாற்காலிகமாக ஒரு சீட்டில் எழுதிக் கொடுத்திருந்தார்கள். அந்தச் சீட்டினால் ஆந்திர போலீஸார் திருப்தியடையாமல், தொண்ணூறு ரூபாய் அபராதம் விதிக்க, நாங்களும் வேறு வழியின்றி அபராதத்தைக் கட்டி விட்டுச் சென்று, பெருமாளைத் தரிசனம் செய்து திரும்பினோம். பெருமாளைத் தரிசிக்கச் சென்ற போது ஏற்பட்ட இந்தச் சம்பவம் எங்கள் மனத்தை உறுத்திக் கொண்டேதான் இருந்தது.

சுமார் ஒரு மாதம் கழித்து என் கணவரைப் பற்றி ஏராளப் புகார்களை எழுதி யாரோ தலைமையகத்திற்கு அனுப்பி விட்டார்கள். அதில் முக்கியமாகக் கூறப்பட்டிருந்த குற்றச்சாட்டு, நாங்கள் திருப்பதி செல்லாமலேயே விடுமுறை பயணச் சலுகை பெற்றோம் என்பது. அச் சமயம் கை கொடுத்தது ஆந்திர போலீஸாரிடம் அபராதம் செலுத்திய ரசீதுதான்! அதைக் காண்பித்து எங்கள் தரப்பை நிரூபித்தோம். பிறகு, ஆர்.டி.ஓ. ஆபீஸிலிருந்து டோக்கன் வந்ததும் அதை ஆந்திர போலீஸாருக்கு அனுப்பி வைத்து, கட்டிய அபராதத்தையும் திரும்பப் பெற்றோம்! திருமாலின் சோதனை என்று நாங்கள் எண்ணிய ஒன்றே எங்களுக்கு அனுகூலமாக முடிந்ததை எண்ணி வியந்தோம்!

— திருமதி மீனாட்சி சுப்பிரமணியம்,
நெல்லை.

கத்தி ஒன்று இருக்கிறது! எது நேர்ந்தாலும் பார்த்துக் கொள்ளலாம்.

இந்தச் சமயத்தில் முன் வாசலுக்கு அருகில் ஆரவாரம் அதிகமாயிற்று. அது என்னவென்று தெரிந்து கொள்வதற்காகவோ, என்னவோ, ஏணிக்கு அருகில் நின்ற மனிதன் சற்று அப்பால் போனான்.

ரொம்ப நல்லதாய்ப் போயிற்று என்று எண்ணி வந்தியத் தேவன் ஏணி வழியாக விரைந்து கீழே இறங்கினான். அவன் கீழே இறங்கித் தரையில் காலை வைத்ததற்கும் போன மனிதன் திரும்பி வருவதற்கும் சரியாயிருந்தது.

''சாமி! இவ்வளவு நேரம் பண்ணி விட்டீர்களே!'' என்று அம்மனிதன் கேட்டதும், அவன் இடும்பன்காரி என்பதை வந்தியத்தேவன் தெரிந்து கொண்டான். அதே கணத்தில் இடும்பன்காரி யாரை எதிர்பார்த்து அங்கே காத்துக் கொண்டிருந்தான் என்பதையும் ஒருவாறு ஊகித்துக் கொண்டான்.

இடும்பன்காரி அவன் அருகில் வந்ததும் வியப்புடன், ''அடே! நீயா? யாரைத் தோளில் போட்டுக் கொண்டு வருகிறாய்?'' என்று கேட்டான்.

''ஆம், அப்பா! நான்தான்! காளாமுகச் சாமியாரின் சீடன்! ரணபத்திரகாளியின் பலியுடனே என்னை முன்னால் அனுப்பினார். அவர் பின்னால் வருகிறார். உன்னை இங்கேயே ஏணியுடன் இருக்கச் சொன்னார்! இதோ பார்! இந்தக் கத்தியை உனக்கு அடையாளங்காட்டச் சொன்னார்!'' என்று வந்தியத் தேவன் கூறி, இருகு கத்தியைக் காட்டினான்.

இடும்பன்காரிசிறிதுசந்தேகத்துடனேயே, ''இத்தனை நாளாக நீ எனக்குச் சொல்லவில்லையே? போனால் போகட்டும். சாமியார் இவ்வளவு நேரம் பண்ணுகிறாரே! எப்படி இங்கிருந்து வெளியே போகப் போகிறோம்? திருக்கோவலூர் வீரர்கள் மாளிகையைச் சூழ்ந்து கொண்டு உள்ளே வரவும் தொடங்கி விட்டார்களே!'' என்றான்.

''அதனாலென்ன? கூட்டம்அதிகமானால் நாம் தப்பிச் செல்வது சுலபம். அதெல்லாம் பெரிய சாமியாருக்குச் சொல்லித்தர வேண்டுமா? அவர் எப்படியோ வழி கண்டு பிடிப்பார். நீ இங்கேயே அவர் வரும் வரையில் காத்திரு! நான் போய் நந்தவனத்தில் இருப்பதாகச் சொல்லு!'' என்றான் வந்தியத் தேவன்.

இடும்பன்காரியின் மறு மொழிக்குக் காத்திராமல் விடு விடுவென்று மேலே நடந்தான். இடும்பன்காரியின் கண்ணோட்டத்திலிருந்து மறைந்ததும், அந்த மாளிகையின் முன் வாசல் கோபுரத்தை நோக்கி நடந்தான்.

(தொடரும்)

வியாபார எழுத்து

விஸ்வநாதனுக்கு நேற்று கம்பெனியில் நடந்தது ஞாபகம் வந்தது. அலையாய் அலைந்து, மூர்த்தி வாங்கிக் கொடுத்த வேலை. பத்து மணியிலிருந்து ஐந்து மணி வரை மெஷினுடன் ஸ்நேகித்திருக்க முடியவில்லை. நேற்று ஆடிட்டிங் வேறு. ஐந்து மணி தாண்டி வேலை இருந்தது. ஜி. எம். தனியாய்க் கூப்பிட்டு, "எல்லாம் உன் பொறுப்பு விஸ்வநாதன்," என்றார். வேலை முடிய எப்படியும் எட்டு, எட்டரை ஆகி விடும். ஆறரை மணிக்கு ராஜேஸ்வரி மண்டபத்தில் இலக்கியக் கூட்டம். இன்றைக்குப் போக முடியாது. காரணம்? இந்த வேலை. தெறல் வித் இட். இலக்கியம் ரசிக்க விடாத வேலை தேவையா?

"ஸார்... ஒரு ஆறு மணிக்கு விட்டீங்கன்னா..."

ஜி. எம். அடர்த்தியான புருவம் நெற்றிக்குள் சுருங்கக் கோபமும் எரிச்சலும் கலந்து பார்த்தார்.

"என்ன விஷயம்?"



''ஆறு மணிக்கு ஒரு இலக்கியக் கூட்டம் ஸார்...''

சட்டென்று ஜி.எம். ரௌத்திரமானார். ஐந்தரை அடி உருவம் கோபத்தில் ஆடிற்று.

''என்னப்பா இலக்கியக் கூட்டம். அவனவன் கம்பெனி ஆடிட்டிங்னு உயிரைக் கொடுத்திட்டிருக்கான். மத்த நாள் அஞ்சு மணிக்கு டாண்ணு போறீங்களே... இன்னைக்கு இருந்தா என்ன? ஒரு நாள்... ஆப்டர் ஆல் ஒருநாள்.''

விஸ்வநாதனுக்குள் கட்டுத்தறி அவிழ்த்துக் கொண்டு ஈகோ வெளியேறிற்று. 'இவன் என்ன சொல்வது... நான் கேட்பது' என்று கேள்வி கேட்டு விருட்சமானது. அவனை அது பலமாக ஆக்ரமிக்க, விஸ்வநாதன் அதற்கு அடங்கினான். சுற்றி என்ன நடக்கிறது என்பது புரியாமல் பதிலுக்குக் கத்தினான்.

''அதான் நாயா உழைக்கிறோமே... ஒரு நாள் பர்மிஷன்ல விட்டா என்ன? ஆடிட்டிங்... அத்தனை குளறுபடியையும் எடுத்துச் சொன்னா முகமூடி கிழிஞ்சிடும். ஜாக்கிரதை.''

கூட வேலை பார்க்கிறவர்கள் சட்டென்று அவனைப் பிடித்தார்கள்.

''காம் டவுன் விஸ்வநாதன். வேலைனா நாம கட்டுப்பட்டுத்தான் போகணும்.''

ஜி.எம்., ''மெமோ குடுய்யா இவனுக்கு...'' என்று கோபமாய்க் கத்திப் போக நளினி ஸீட்டிலிருந்து அவனைக் கவலையோடு பார்த்தாள்.

''என்னாச்சு விஸ்வம்... ஒருநாள்தானே? அடுத்த கூட்டம் போய்க்கலாம். முந்தியே சொல்லிருந்தீங்கனா , மூர்த்தி மூலமா ஜி.எம்.கிட்டச் சொல்லி பர்மிஷன் வாங்கியிருக்க முடியும்.''

''மூர்த்தி... ச்சை...''

இவளுக்கு மூர்த்தி பெரிசு. அவனால் எதுவும் முடியும் என்கிற காதல் பெருமை. எதற்காவது இவர்கள் கட்டுப்பட்டே வாழ்ந்து செத்துப் போகிறார்கள். என்னால் முடியாது. இந்தக் கட்டுத்தறிகள் உடைத்து ஓட வேண்டும். இலக்கியம் சுகம், கட்டுத்தறியில்லாத சந்தோஷம். அது உயிர். ஒரு சிறுகதை எழுதி முடித்ததும் கிடைக்கிற ஜென்ம சுகம்.

இந்தச் சுகத்தை விட்டுக் கொடுத்து விட்டுப் பார்க்கிற இந்த வேலை தேவையா? சகல சந்தோஷங்களையும் துறக்கச் செய்கிற கட்டுப்பாடு அவசியமா விஸ்வநாதன்? தேவையில்லை. விட்டு விடு விஸ்வநாதன். இந்தக் கட்டுப்பாடு தவிர்த்து, உன் சுதந்திரச் சிறகு விரித்து, வானில் பற. கதை எழுது. காசு வரும். நாலு இலக்கிய கூட்டம் போ. கற்றுக் கொள். இலக்கியத்தைத் தவிர்க்காதே — அதுவும் வேலையின் நிமித்தம்.

விஸ்வநாதன் மேஜை இழுப்பறையைத் திறந்து, அடியிலிருந்து ஒரு பேப்பரை எடுத்து, அவசரமாய் ராஜினாமாக் கடிதத்தை எழுதினான். நடராஜனிடம் 'ஃபார்வேட்' பண்ணச் சொல்லி நீட்டின போது, சகலரும் மலைத்து நின்றார்கள். எந்த விசை இவனை ஆட்டுவிக்கிறது என்று புரியாமல் பார்த்தார்கள்.

''என்னது விஸ்வநாதன் இது...?''

''வேணாம் நடராஜன். விட்டுடுறேன். ஃபார்வேட் பண்ணுங்க.''

''நல்ல தொழிலாளின்னு வந்த மாசமே பேர் எடுத்திட்டீங்க. இது லேசில்லை விஸ்வநாதன். எனக்கு சுமாரான ஆள்னு பேர் எடுக்கவே எட்டு மாசமாச்சு. நல்லா வேலை கத்துக்க ஒரு வருஷமாச்சு. உங்களுக்கு ஒரு மாசத்துல வேலை பிடிபட்டுப் போச்சு. ஏன் உதறுறீங்க? கஷ்டமில்லையா? யாரு வேற வேலை தருவாங்க?''

''வேலைன்னு தேவையில்லை நடராஜன். கதை எழுதியே வாழ்ந்திடுவேன். எந்தக் கட்டுப்பாடும் வேணாம்.''

''எதுனாலும் இப்ப உங்களால போக முடியாது. இதை மேனேஜ்மெண்ட் ஏத்துக்கணும். இல்லைனா... நீங்க முன்னாலேயே



தமயந்தி

மூணு மாச நோட்டீஸ் விட்டிருக்கணும். ராஜினாமாங்கிறது விளையாட்டில்லை விஸ்வநாதன்.''

எட்டு மணி வரை யாருடனும் பேசாமல் வெளியேறியவனை நளினி கவலையுடன் பார்த்துக் கொண்டேயிருந்தாள், அவன் சின்னப் பொட்டாகி மறையும் வரை. திங்கட் கிழமை வருவானா? — என்கிற கேள்வி விஸ்வரூபமாய் மனத்தில் எழுந்து கிளை விட்டது.

"விஸ்வம்...''

கதவு தட்டப்பட்டது. விஸ்வநாதன் அவசரமாய் ஷர்ட்டை மாட்டிக் கொண்டு திறந்தான். சுருக்கங்கள் நிறைந்த முகத்தோடு மூர்த்தியும் நளினியும் நின்றிருந்தார்கள்.

''வாங்க.''

வேறு என்ன பேச என்று நிதர்சனமாய்த் தெரியவில்லை. மூர்த்தி முகம் அவன் கோபத்தைச் சொல்லிற்று. கோபம் இருக்கும்தான். நாயாய் அலைந்து வாங்கிக் கொடுத்த வேலை. அப்போதெல்லாம் விஸ்வநாதனுக்கும் ஒரு வேலை ரொம்பவும் அவசியமாய் இருந்த சமயம். மாசத்திற்கு ஒரு கதை மட்டுமே பிரசுரமாகும். அடுத்த மாசம் சன்மானம் வரும். நூறு ரூபாய். ஐந்து நாளுக்கு, பத்து நாளுக்கு மட்டுமே உபயோகப்படுகிற நூறு ரூபாய். மீதி நாட்களை ஓட்ட ஒரு வேலை தேவைப்பட்டது. மூர்த்தி அவனுக்காகத் தினமும் அலைந்தான். இப்போது வேலை பார்க்கிற கம்பெனியின் ஜி. எம். மை தினமும் சந்தித்தான். வேலை கிடைத்ததும் 'இனி உன் பொறுப்பு விஸ்வம். நல்லாயிரு.' என்று மானசீகமாய்க் கைகுலுக்கினான்.

'தாங்க்யூ மூர்த்தி..

'இனிமே பசி கிடையாது விஸ்வம். நல்லாயிரு. ஆல் த பெஸ்ட்.'

வேலையில் சேர்ந்த ராசி ஒரு மாசத்திற்கு மூன்று நான்கு கதைகள் பிரசுரமாயின. மூர்த்தி நிறையச் சந்தோஷப்பட்டான். 'சீக்கிரம் பெரிசா வந்துடுவே விஸ்வம்.' என்றான். எல்லா சந்தோஷமும் நளினி. நான் வேலையை உதறின விஷயத்தைச் சொன்னதும் ஒன்றுமில்லாது போயிருக்கும். புஸ்வாணமாகியிருக்கும். இத்தனை அலைந்தேனே — இதற்காகவா என்று தோன்றியிருக்கும். ஆனால்... புரிந்து கொள்வானா? எனக்கு வேலையை விட இலக்கியம் முக்கியம் என்றால், அவனால் ஒத்துக் கொள்ள முடியுமா?

நளினி மௌனத்தின் கனம் தாங்காமல் இரண்டு பேரையும் கண் விரித்துப் பார்த்தாள். விஸ்வநாதனைப் பார்த்து ஸ்நேகமாய்ச் சிரித்தாள்.

''சாப்பிட்டீங்களா விஸ்வம்?''

''ம்...''

''மூர்த்தி உங்களைப் பார்க்கணும்னார்.. அதான்...''

''சொன்னீங்களா?''

நிமிஷத்தில் தலையைக் குனிந்து கொண்டாள். எங்கிருந்தோ ஒரு குருவி பறந்து வந்து ஜன்னல் கம்பியில் உட்கார்ந்து தலை சிலுப்பிற்று. மூர்த்தி திடீரென்று எழுந்து பக்கத்தில் வந்தான்.

''ஏன் விட்டே விஸ்வம்? எத்தனை கஷ்டப்பட்டேன். உனக்குத் தெரியும். தெரிஞ்சிட்டே பண்றே பாரு விஸ்வம். அதைத்தான் தாங்க முடியலை.''

''புரிஞ்சுக்க மூர்த்தி... என்னால முடியலைடா.''

''ஏன்?''

''நான் நானா இருக்க முடியலைடா. எனக்கு வேலையை விட இலக்கியம் முக்கியம். கட்டுப்படாம வாழணும். பறவை மாதிரி என் திசைல பறக்கணும். மத்தவன் கை காட்டுற திசைல பறக்க என்னால முடியாது. நிச்சயமா முடியாது.''

''எது விஸ்வம் கட்டுப்பாடு?''

பக்கத்து வீட்டுப் பெண் ''கா... கா'' என்று சோற்றுப் பருக்கைகளைக் கையில் வைத்துக் கொண்டு கூப்பிட்டாள். எங்கிருந்து வருகின்றன என்பதைத் தீர்மானிக்க முடியாத அளவுக்கு எல்லாத் திசைகளிலிருந்தும் க்ஷணத்தில் காக்கைக் கூட்டம் வந்தது. விஸ்வநாதன் அவை சோற்றுப் பருக்கைகளைக் கொத்தித் தின்பதைப் பார்த்தான்.

''எது விஸ்வம் கட்டுப்பாடு?'' மூர்த்தி திரும்பவும் கேட்டான்.

''ஒம்போதிலிருந்து ஆறு வரைன்னு அடைச்சி வச்சிருக்கிற ஆபீஸ். ஆடிட்டிங். இலக்கியக் கூட்டம் போகக் கூடாதுன்னு கத்துற ஜி. எம். எல்லாந்தான் மூர்த்தி. என்னால முடியலைடா.''

''அப்ப... பழைய மாதிரி எழுதப் போறியா?''


''ம்...''

''உனக்குத் தெரியாது விஸ்வம் ஒரு விஷயம். இந்த மாசத்தை ஓட்டணும். பணம் வேணும்னு நீ கதை எழுதினியே. அதுல ஆத்ம தர்மம், சத்தியம் இல்லை விஸ்வம்.

டைரக்டர்: புதிதா அப்பாயின்ட்மெண்ட் ஆன ஆசாமி வேலையில் எப்படி?

மானேஜர்: தானுண்டு தன் தூக்கமுண்டுன்னு இருக்கார்!

— கமுதி. எஸ். சேதுராமன்.





அருள்வாக்கு

தர்மம் அதர்மத்தை அழித்து விடும் படியான ஒரு நிலை வரும்போது ஸ்வாமி, "தர்ம ஸம்ஸ்தாபனம் நடக்கட்டும்" என்று ஸங்கல்பம் பண்ணுவதாக வைத்துக்கொள்வோம். இந்த தர்ம ஸம்ஸ்தாபனம் சாச்வதமாக நிலைத்து இருக்கட்டுமென்று அவர் ஸங்கல்பிக்க முடியுமா? முடியாது. ஏனென்றால் இப்படி லோகம் பூரா ஒரே தர்ம மயமாகி அப்படியே இருந்து கொண்டிருந்தால் எந்த ரஸபேதங்களுக்காக அவர் இப்படி விசித்ர விசித்ரமாக ஜீவ ஸ்ருஷ்டியை உண்டாக்கியிருக்கிறாரோ அதுவே இல்லாமல் போய்விடும்! லீலை, விளையாட்டு என்றால் எதிரெதிர்க் கட்சிகள் Tug of War இழுத்துக் கொண்டு, எதிரெதிராக இரண்டு கட்சிகள் பந்தை இந்தப் பக்கம் அந்தப் பக்கம் உதைத்துக் கொண்டு, விழுந்து வாரிக் கொண்டு, வெற்றி — தோல்வி, ஏமாற்றம் — எதிர்பார்க்காத அதிருஷ்டம், கோபம் — ஸந்தோஷம், அழுகை — குஷி என்று பல வித உணர்ச்சிகளில் மாட்டிக் கொண்டால்தானே விறுவிறுப்பாயிருக்கும்? 'லீலா நாடகம்' என்றால் நாடகத்தில் நவரஸமும் இருக்கணுமோ இல்லியோ? ஸர்வ ஜனங்களும் தர்மாநுஷ்டானம் பண்ணிக் கொண்டு சாந்தர்களாகி அப்படியே சாச்வதமாயிருந்து விட்டால் அதில் லீலா விசித்ரம் ஏது? நாடகரஸம் ஏது? அதனால்தான் இதற்குப் பேரே 'மிச்ர லோகம்' என்பது. அதாவது, நல்லது பொல்லாதது கலந்தாங்கட்டியாக இருக்கும்படியாகவே அவர் உத்தேசித்திருக்கிற லோகம் இது!

இங்கு தர்மம் குறையும்போது அதை அபிவிருத்தி செய்வதற்காகத் தம் தூதர்கள் மாதிரியான மஹான்களைக் கருவியாக அனுப்புவார். அதுவும் பலிக்காது என்கிற கட்டத்தில் தாமே தம் கருவியாகி அவதாரம் எடுப்பார்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

அது வியாபாரம். அதான் அதெல்லாம் மாசம் ஒண்ணு மட்டும் வெளியாச்சு. இப்ப உனக்கு அழுத்துற பாரம் எதுவுமில்லை. நீ உனக்காக எழுதுறே. உன் எழுத்துச் சுகத்துக்காக எழுதுறே. இதுலே நிஜம் இருக்கு. சத்தியம் இருக்கு. எப்படியாச்சும் இன்னைக்கு மூணு கதை எழுதணும்னு காசுக்காக எழுத ஆரம்பிக்கிற நிலைமை கூடாது விஸ்வம். உன் திறமை அழிஞ்சிடும். ஒரு நாள் கூட்டம் போக முடியலை. சரி. இழப்புத்தான். இந்த இழப்பை நீ இதைப் பத்திக் கதை எழுதி ஈடுகட்டு. வாழ்க்கையில சிலதைப் பெற சிலதை இழக்க வேண்டியிருக்கு விஸ்வம்."


"என்னால முடியாது மூர்த்தி."

"தினமுமா ஆபீட்டிங் நடக்குது? வருஷத்துல ஒரு நாள். இந்த இலக்கியக் கூட்டத்துக்குப் போக முடியலை. அடுத்ததுக்குப் போ. புரியுதா?"

"என்னால... கஷ்டம் மூர்த்தி.. நான் பறவை மாதிரி வாழணும்... எது பத்தியும் கவலைப்படாம... கட்டுப்பாடு இல்லாம."

"பறவைக்குக் கட்டுப்பாடு, கவலை இல்லைன்னு நினைக்கிறியா? தினம் பறக்குதே. எங்கே? இரை தேடிப் போகுது. யாராவது கா.. கா..ன்னு சோறு வச்சிக் கூப்பிட்டாங்கன்னா அவங்ககிட்டப் போகுது. எல்லாம் போக மீதி நேரம்தான் பாடுது விஸ்வம். பழைய மாதிரி உன்னைப் பசி விரட்டியடிச்சிடும். உன்னைக் கட்டுப்படுத்திடும். கவலைப்பட வைக்கும். இலக்கியம் தப்பிடும். விஸ்வம்... எழுத்து தெய்வீகம். அதை வியாபாரமாக்கக் கூடாது."

விஸ்வம் அதிர்ந்து போய் ஜன்னல் வழியாகப் பார்த்தான். மிஞ்சின சோற்றுப் பருக்கைகளுக்காக ஒரு யுத்தம் நடந்து கொண்டிருந்தது. சட்டென்று மனத்தில் ஒரு வெளிச்சம் தோன்றிற்று. அடிப்படையான சில விஷயங்கள் கட்டுப்பாடு இல்லையோ? அவைதான் அஸ்திவாரமோ? எல்லாக் காக்கைகளும் போன பிறகு, மாமரத்திலிருந்து ஒரு குயில் வந்து சிதறிக் கிடந்த சோற்றுப் பருக்கைகளைக் கொத்திச் சென்று மாமரக் கிளையில் உட்கார்ந்தது. கொஞ்ச நேரம் கழித்து ஏதோ பாடிற்று. விஸ்வநாதன் மூர்த்தியைப் பார்த்து மனம் லேசாகச் சிரித்தான்.



* விண்வெளிக் கப்பல்களையும் கிரேன்களையும் கம்ப்யூட்டர் மூலம் உண்டாக்கி அதன் செயல்திறனை அலசிப் பார்க்கிறார்கள்.



* 'அபிஸ்' படத்தில் தண்ணீர் வடிவக் கை மூஞ்சி, கம்ப்யூட்டர் மூலம் உருவாகிறது.

சினிமாவில் கம்ப்யூட்டர்

17

அடுத்த நூற்றாண்டு:

'**ரேம்டி** ராம்' என்பதில் ஓர் இரண்டு மணி நேரத்துக்குரிய சமாச்சாரம் சேகரித்துக் கொள்ள முடியும். சாதாரண விடியோ காஸட்டுக்கும் ஸிடி ராமுக்கும் வித்தியாசம் என்ன? ராம் தகட்டுக்குள் எல்லாமே டிஜிட்டலாக இருப்பதால், படம், பேச்சு, எழுத்து என்று எல்லாவற்றையும் கலந்து கட்டிச் சேகரித்து எழுதிக் கொள்ள முடியும். மேலும் இஷ்டப்பட்ட பக்கத்தைச் சடுதியில் தேர்ந்தெடுக்கலாம். இஷ்டப்பட்ட படத்தை இஷ்டப்பட்ட அளவுக்குப் பெரிது பண்ணிப் பார்க்கலாம்.

அமெரிக்காவில் 'இண்டெல்' என்னும் நிறுவனம் இருக்கிறது. அவர்கள்தான் இந்த அதிசயச் சில்லுகளை மனித குலத்துக்கு அறிமுகப்படுத்தியவர்கள். 1972 — இல் அவர்கள் 4004 என்கிற ஒரு சிறிய சில்லு கொண்டு வந்தார்கள். உலகின் முதல் மைக்ரோ ப்ராஸஸர். அதுதான் சிலிக்கன் புரட்சியைத் துவக்கியது. அதன் மூலம்தான் பிஸி என்னும் கம்ப்யூட்டர்கள் வந்தன. விந்தைகள் அனைத்தும் கொண்டு வர அஸ்திவாரக்காரர்கள் இண்டெல். அவர்கள் இப்போது செய்யும் சில்லு, ஆரம்ப காலச் சில்லைவிட ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்தது. எங்கேயோ போய் விட்டார்கள். அவர்களை இனி எட்டுவது ரொம்பக் கஷ்டம்.

இண்டெல் கம்பெனி, தற்போது வி.ஜி.ஐ. என்கிற வகைச் சில்லுகளைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். இவை மூலம் பிஸி என்னும் வீட்டுக் கம்ப்யூட்டர், ஸிடி ராம் சில்லுகளுடன் தொடர்பு கொண்டு, அவைகளில் உள்ள செய்திகளைக் கட்டுப்படுத்த முடியும். ஒரு கார் வாங்கினால் கார் ரிப்பேர் போன்ற விஷயங்களைச் சாதாரணப் புத்தகங்கள் போல் இல்லாமல், படம், பேச்சு இரண்டையும் பயன்படுத்திப் படிப்படியாகச் சொல்லித் தரும் ப்ரொக்ராம்கள் விரைவில் வரப்போகின்றன. மிக எளிய முறையில் நாம் பற்பல வித்தைகள் கற்றுக் கொள்ள முடியும்.

க்ராஃபிக்ஸ் என்கிற இயல் படுவேகத்தில் முன்னேறி வருகிறது பற்றிச் சொன்னோம். ஒரு 'ஸ்கானர்' அல்லது காமிரா மூலம் படத்தைக் கம்ப்யூட்டருக்குள் செலுத்தி, அதை டிஜிட்டல் வடிவில் மாற்றி விட்டால், அந்தப் படங்களுக்கு உயிர் கொடுக்கலாம். அனிமேஷன் என்று கார்ட்டூன் படங்களில் போல அவைகளுக்கு உயிர் கொடுக்கலாம். இவ்வகை ஸாப்ட்வேர் ஆணைத் தொடர்களை, அமெரிக்காவில் இப்போது சினிமாப் படங்களின் தயாரிப்பில் உபயோகிக்கிறார்கள்.

'ஸ்டோரி போர்டு' என்று ஒரு முறை உண்டு. ஒரு படம் எடுப்பதற்கு முன், அதைத் தொடர்ந்து ஸ்ட்ரிப் கார்ட்டூன் படங்கள் போலப் படத்தின் திரைக்கதையை, கன்னித் தீவு படக்கதை போல வரைந்து கொள்வார்கள். இவ்வாறு வரைந்து விட்டால் எல்லோருக்கும் கதைப் போக்கைப் புரிந்து கொள்ளச் சுலபமாக இருக்கும். தமிழ் சினிமாவில் யாரும் ஸ்டோரி போர்டு பண்ணுவதாகத் தெரியவில்லை. விக்ரம் படத்துக்குக் கமலுடன் ஒத்துழைத்த போது, ஸ்டோரி போர்டு கொஞ்சம் பரிசோதித்துப் பார்த்தோம். அவ்வாறு எடுத்ததெல்லாம் சரியாகவே வந்தது. சாணக்யன் படம் இவ்வகையில் முழுசாகத் தயாரித்தது என்று கமல் சொன்னார்.

இந்த முறையை, முன்பு சித்திரக்காரர்களைக் கொண்டுதான் பொறுமையாக நூற்றுக்கணக்கான படங்கள் வரைந்து கொண்டிருந்தார்கள். இப்போது அவைகளைக் கம்ப்யூட்டர் மூலம் செய்வது மட்டுமின்றிக் கம்ப்யூட்டரைப் பயன்படுத்துவதால், வரைந்த படங்களை வெவ்வேறு கோணத்தில் பார்த்து, காமிராவை எங்கே வைக்கலாம், அப்படி வைத்தால் ஸெட் எப்படித் தோற்றமளிக்கும்? எல்லாமே செய்யக்கூடிய ப்ரொக்ராம்கள் கொண்டு வந்து விட்டார்கள். அவ்வாறு செய்வதால் செட்டு போடுவதில் நிறையச் சிக்கனம் பண்ண முடிகிறது. படப்பிடிப்பில் நேர விரயம் குறைகிறது. க்ராஃபிக் வொர்க் ஸ்டேஷன் என்று மிக அதிகத் திறமை வாய்ந்த படங்களைத் தயாரிக்கும் கம்ப்யூட்டர்களும் ஆணைத் தொடர்களும் கொண்டு வந்திருக்கிறார்கள்.

• அனிமேஷன்



சுஜாதா

நமக்கெல்லாம் பழக்கப்பட்ட 'பிஸி'கள் ஓர் அளவுக்கு மேல், திறமை எல்லைகளை எட்டி ஜகா வாங்கி விடும். மிகக் கடினமான காரியங்களைச் செய்ய பிஸியை விடச் சக்திவாய்ந்த, 'வொர்க் ஸ்டேஷன்' என்கிற கம்ப்யூட்டர்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தியாவில் மூன்று நிறுவனங்களில் இந்த 'வொர்க் ஸ்டேஷன்' செயல் கேந்திரங்களைத் தயாரித்து விற்கிறார்கள், அமெரிக்க ஒத்துழைப்புடன் தான்! விப்ரோ நிறுவனம் 'ஸன்' என்னும் ஓர்க் ஸ்டேஷனையும், எச். ஸி. எல். 'அப்போலோ' என்னும் கேந்திரத்தையும், ஐதராபாத்தில் ஓ. எம். ஸி. என்கிற ஸ்தாபனம் 'ஐரிஸ்' என்னும் ஓர்க் ஸ்டேஷனையும் தயாரித்து விற்கின்றன. விலை எட்டு லட்சத்திலிருந்து பத்தொன்பது லட்சம் வரை.

அப்படி என்ன அதற்கு இத்தனை விலை?

ஐரிஸ் என்பதில் இருக்கும் அனிமேஷனின் வேகங்கள் அசாத்தியமானவை. அது வரையும் படங்களின் நுட்பம்... இவைகள் எல்லாமே ஒரு 'பிஸி'யை விடப் பன்மடங்கு அதிகமானவை. அண்மையில் 'அபிஸ்' (ABYSS) என்கிற ஒரு படம் அமெரிக்காவில் வெளிவந்து சக்கை போடு போட்டது. அதில் ஒரு காட்சியில் தண்ணீராலேயே ஆன கையொன்று கப்பலுக்குள் நுழைந்து, அதைச் சந்திப்பவர் முக அமைப்பில் தன்னை மாற்றிக் கொண்டு பேசுகிறது. இக்காட்சியைக் கம்ப்யூட்டர் அனிமேஷன் முறைகளைக் கொண்டு, மிகுந்த பணச் செலவில் தயாரித்தார்கள். அதற்குச் சாதகமாக இருந்தவை ஓர்க் ஸ்டேஷன்களே.

வீடியோ, டி.வி., திரைப்படம் இவைகளுக்கு உதவும் சாதனங்கள் பத்து வருடங்களில் நம் நாட்டிலும் பரவலாக வந்து விடும். இப்போதே பம்பாயில் சின்தஸைஸர் பயன்படுத்திக் கம்ப்யூட்டர் சங்கீதங்கள் உண்டாக்குகிறார்கள். 'மிடி' என்கிற முறைப்படி ஒரு ஸின்தஸைஸரைப் பல் வேறு விதங்களில் கட்டுப்படுத்தலாம். அதே போல், டைட்டில் தயாரிக்க ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் போன்றவற்றிற்குக் கம்ப்யூட்டர்கள் வந்து விட்டன. ஆப்பிள் கம்பெனி தயாரித்து வரும் மக்கின்டாஷ் என்னும் கம்ப்யூட்டர், இந்தச் சமாச்சாரங்களுக்குக் குறிப்பாக — ஏற்றது. நாம் முன்பு சொன்ன ஸ்டோரி போர்டு ஆணைத்தொடர், மக்கின்டாஷ் கம்ப்யூட்டரில் நிறைய உண்டு. சினிமாத் தயாரிப்பில் சிருஷ்டி பூர்வமான விஷயங்களை எல்லாமே கம்ப்யூட்டர் எடுத்துக் கொண்டு விட்டது என்று சொல்ல முடியாது. அவைகளுக்கு உதவியாக இருந்து, சில சமயங்களில் சிருஷ்டியிலுமே கை வைக்கிறது.



● 'செய்து கொண்டிருக்கும் வேலையின் மீது சலிப்புத் தோன்றுமானால் அதிலிருந்து நீ தப்பித்துக் கொள்ள ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது என்னவென்றால், அந்த வேலையைச் சிறப்பாக எவ்வாறு செய்யலாம் என்பதைத் தீவிரமாகச் சிந்திப்பதே யாகும்!'

— விட்டிங்

தகவல்: புத்தனாம்பட்டி சி. மணி.

இதுவரை சொல்லி வந்ததெல்லாம் தற்போது அமெரிக்கா போன்ற முன்னேற்ற நாடுகளில் நிகழ்ந்து, நம் நாட்டில் வந்து கொண்டு அல்லது விரைவில் வர இருப்பவை. இதற்கு அப்பால் என்ன, அவர்கள் நாட்டில் அடுத்த நூற்றாண்டில் என்ன என்ன என்பதைப் பற்றிக் கொஞ்சம் பார்க்கலாம்.

இனி சொல்லப் போவது எல்லாம் ஒரு விதமான ஊகங்களே. கம்ப்யூட்டர் இயலில் ஒரு சிக்கல், எதிர்காலத்தைக் கணிப்பது ரொம்பக் கஷ்டம். 1969இல் மைக்ரோ கம்ப்யூட்டர்கள் வந்து விடும் என்று யாரும் சொல்லவில்லை. 72இல் வந்து விட்டன. அதே போல் பிஸி புரட்சியையும் யாரும் அவ்வளவு வெற்றி பெறும் என்று சொல்லவில்லை. எனவே எதிர்காலத்தைப் பற்றிச் சொல்வதில் எல்லாருக்குமே தயக்கம், இகில். இருந்தாலும் சும்மா இருக்க விருப்பமில்லாமல் மாலிக்யுலர் கம்ப்யூட்டர்களைப் பற்றி அடுத்த வாரம் சொல்கிறேன்.

வழக்கம் போல க்விஸ். (சென்ற வாரத்திற்கான விடை: ஒரு கிலோ பைட் என்பது ஆயிரம் பைட் அல்ல, 1024. இதைச் சரியாக எழுதிய முதல் வாசகர் யார்? அவருக்கு என்ன பரிசு என்பதை அடுத்த வாரம் சொல்கிறேன்):

''அயோஃப்யூஸ்ன இர்ரான் மோட்கம்லாடிக் செவிடளாடாப்ஜி பில்.''

இந்த வாக்கியத்தில் உள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி, மொத்தம் பத்து கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட வார்த்தைகள் (அனைத்தும் இந்தத் தொடரில் பயன்படுத்தியது) படைக்கலாம்.

முதலில் வந்து சேரும் விடைக்குப் பரிசு.

(தொடரும்)

மூட்டு வலியா?
போக்கிடுங்கள் மூவ் மூலம்.



முழங்கால் மூட்டு வலியா?
பின்புற மூட்டு வலியா?

உங்கள் உடலின் மூட்டுகள், குறிப்பாக முழங்கால்களிலும் பின்புறமும் வயதானாலோ அல்லது கடின செயல்களினாலோ, இவை வலி ஏற்படும் இடங்களாக விளங்குகின்றன. மூட்டுகளில் லூப்ரிகேட்டிங் திரவம் சுரப்பது குறைவதனால், அதில் உராய்வு ஏற்பட்டு, வலிக்கவும் அசௌரியத்திற்கும் காரணமாகிறது.

ஆழ ஊடுருவிச் செல்வது

மூவில் மிக அடர்த்தியான விரைவில் ஆவியாகிற இயற்கை எண்ணெய் அடங்கியுள்ளது. அது சருமத்தின் ஊடே மூட்டுவலி ஏற்படுத்தும் பாகம்வரை ஆழமாக ஊடுருவிச் செல்கிறது.

விரைந்து செயலாற்றுவது

மூவிலுள்ள இயற்கையான எண்ணெய், அதிக வீரியம் வாய்ந்த நிவாரண சாறுகளைக் கொண்டது — உடனடியாக இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்து, லூப்ரிகேட்டிங் திரவத்தை மீட்டுப் பெற்றுத் தந்து, விரைவாக நிவாரணம் அளிக்கிறது.

நீடித்து செயலாற்றுவது

மூவைத் தடவியதும், இதன் ஒப்பற்ற விதம் ஃபார்முலேட் செய்த 'பேஸ்' இயற்கையான எண்ணெயைத் தொடர்ந்து செலுத்தி, வலிக்கும் இடத்தை நீண்ட நேரம் இளஞ் சூடாகவும், பிறுபிறுப்பாகவும் விளங்கச் செய்கிறது. இது சருமத்தில் எரிச்சலை உண்டுபண்ணுவதில்லை. வலியற்ற இயக்கத்தை மீண்டும் பெறுகிறீர்கள். நீங்கள் மீண்டும் பழையபடியே ஓடியாடி வேலை செய்யலாம்.

உண்மையாகவே உடனடி நிவாரணம்

மூவ்

மூட்டு வலி நிவாரணி

PARAS PHARMACEUTICALS PVT. LTD.
Jitendra Chambers, Ashram Road, AHMADABAD 380 014

Interact: PPPL:169 : Tam.

மனிதர்கள்

பழி வாங்குவது போல கேட்-கீப்பர் கதவை அடைத்து, ஒரு சிவப்பு விளக்கை மாட்ட, பஸ் நின்றது. எல்லோருடைய கவன மும் பேசுவதில் இல்லாமல் ரயில் வருகிறதா என்பதில்தான் இருந்தது. பெரியவன் மணி கண்டன் ரயில் வருவதை எதிர்பார்த்திருந் தான். சின்னவள் கவிதா, மடியில் படுத்த படி தூங்கி விட்டாள்.

தடதடவென்று ரயில் அவர்களைக் கடந்து போன பொழுது, கவிதா சடா ரென்று விழித்துக் கொண்டாள்.

''ரயிலு...'' கூவினாள்.

கவிதாவுக்கு ஏற்படுத்திய பரபரப்பை ஈஸ்வரிக்கோ, மணிகண்டனுக்கோ அந்த ரயில் ஏற்படுத்தவில்லை.

''ரயில்ல எல்லா லைட்டும் எரியு தும்மா.''

''ஆமாம்.''

''கம்பி கம்பியாத் தெரியுதும்மா.''

''ஆமாம்.''

''அப்பாவும் ரயில்லதானே வேலை பார்க் கிறாரு?''

''ஆமாம்.''

''இந்த ரயில்லயா?''

''இல்லை.''

''பின்னே எந்த ரயிலு?''

''இது மாதிரி இன்னொரு ரயில்ல.''

''அம்மா! நாம்பளும் ரயில்ல போலாம்மா.''

''சரி.''

''பி செக்ஷன் உமாவோட அப்பா ரயில்ல தான் வேலை பார்க்கிறாராம். எல்லா ஊருக்கும் ஓசியிலதான் அவங்க வீட்ல ரயில்ல போறாங்களாம். அம்மா! அப்பா கிட்டக் கேட்டு நம்மளுக்கும் ஒரு பாஸ் வாங்கித் தரச் சொல்லும்மா.''

''முடியாது கவிதாக்குட்டி.''

''ஏம்மா?''

சட்டத்திற்குப் புறம்பான மனைவிக்குப் பிறந்த குழந்தை என்பன போன்ற பதங் களைப் புரிந்து கொள்ளக் கவிதாவுக்கு இன்னும் வயதிருக்கிறது.

''அப்பா ரயில்ல வேலை பார்க்காம ரயில் ஆபீஸ்லதானே வேலை பார்க்கிறார்? அத னால?''

கவிதாவுக்கு விவரம் புரிய ஆரம்பிக்க வில்லை. இது மரம் என்று சொல்லிக் கொடுக்க, மரம்தான் என்று நம்பும் குழந்தைப் பருவம். ஆனால் மணிகண்டனை நம்ப வைக்க முடியுமா என்று தெரியவில்லை. அரையும், குறையுமாகப் புரிகிறது, மாசம் நாலு நாட்கள் அம்மா, கவிதா, தான் மூவரும் சேலம் ஜங்ஷன் பக்கத்திலிருக்கும் அப்பா வீட்டிற்குப் போய் விட்டு வருவது புரிகிறது. அப்பா என்னும் நபர் பொதுவாக ஒரு வீட்டில் கூடவே இருப்பவர். ஏன் மாசா மாசம் அவரைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற சந்தேகக் கேள்வியை அவனிடமிருந்து ஈஸ்வரி பயந்து கொண்டே எதிர்பார்த் தாள்.

ரயில்வே க்ராஸைத் தாண்டியதும் கவிதா மீண்டும் தூங்கிப் போனாள். இனி மேல் அந்த ரூட்டில் பஸ்ஸே விடப் போவ தில்லை என்பது போல டிரைவர் கைகாட்டி யவர்களுக்கெல்லாம் பஸ்ஸை நிறுத்தினார். சேலம் போய்ச் சேரும் பொழுது இருட்டி விட்டது. இருட்டுவதில் சில சௌகரியங்கள் உண்டு. அவர்களைப் பகல் வெளிச்சத்தில் தெரு முனையில் பார்த்து, எல்லோரும் பார்க்கும்படியாக அவனையும், குழந்தை களையும் கூட்டிக் கொண்டு, வீடு வரை போக நேரிடும் சங்கடம் அவருக்கு இருக்காது. சின்னதாக ஒரு நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு கவிதாவின் கன் னத்தைச் செல்லமாகத் தட்டி, 'என்ன கவிதாக்குட்டி சமர்த்தா ஸ்கூலுக்குப் போறியா?' போன்ற கேள்விகள் கேட்க முடி யும்.

இந்த மாதம் அவரிடம் கேட்கப் போகும் யாசகங்களையும், தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டிய சந்தேகங்களையும் வரிசைப் படுத்திக் கொண்டாள்.

அப்பொழுதெல்லாம் அவருக்கு இவள்பால் ஒருவிதப் பரிவும், அவளுக்குத் தான் தேவையில்லாமல் செய்துவிட்ட அவலத்துக்காகக் குற்ற உணர்வும் மிகுந்தெழ, அதிகமான அக்கறை இருந் தது. தொடர்ச்சியாக வந்த ஏழு வருடங் களில் இருவருக்கும் அவர்கள் நிலை இவ்வளவுதான்; இதிலிருந்து அதிகப்படி யான மாறுதல் எதுவும் வரப் போவ தில்லை என்பது புரிந்து போக, அவரே ஈஸ் வரியிடம் சொன்னார்.

''என்னால் இரண்டு குடித்தனத்தை யும் ஒரே வீட்டில் வெச்சுக்க முடியாது ஈசு.''

அதற்கான காரணத்தை அவர் சொன்ன பொழுது, அது சரியாக இருப்பது போலவே தெரிந்தது. இரண்டு குடித்தனங்களுக்கு நடு

சத்தியப்ரியன்

விழும் தேவையில்லாமல் மனஸ்தாபங்களும், தடித்த வார்த்தைப் பிரயோகங்களும் ஏற்பட்டாள். பொதுவாக ஒரு வீட்டில் இருக்கும் நிம்மதி போய்விடும். அதனால் ஈஸ்வரி வாழப்பாடியிலேயே தொடர்ந்து இருந்து வரட்டும் என்றும், வாரம் இரண்டு நாட்கள் தான் வந்து பார்த்துக் கொள்வதாகவும் அவர் சொல்லி ஏற்பாடானது. அப்பொழுதெல்லாம் அவளுக்குத் தைரியமும், தென்புமிருந்தது. அவர் வருவது மெல்ல மெல்லக் குறைய ஆரம்பிக்க, நடுவில் ஈஸ்வரி செலவுக்குப் பணமில்லை என்று சேலத்தில் அவர் இருக்கும் வீட்டிற்குப் போய் நிற்க, இதுவே வழக்கமாயிற்று.

ஒவ்வொரு மாதமும் ஈஸ்வரி குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு அவரைப் பார்க்கப் போவதன் காரணம் பரிவு, நேசம், மேலெழும் காதல், எல்லாவற்றிற்கும் மேலாக அவர் கொடுக்கும் நானூறு ரூபாய்!

தெரு முழுவதும் இருட்டி விட்டிருந்தது. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதக் கடைசியிலும் தெருமுனைப் பெட்டிக் கடையில் சிகரெட் பிடிப்பது போன்ற பாவனையுடன் நிற்பதுபோல் அன்று அவள் வரவை எதிர்பார்த்து நிற்கவில்லை. அதிக நேரமானதால் அவர் திரும்பிப் போயிருக்க வேண்டும். தானே சென்று அவர் வீட்டுக் கதவைத் தட்டியழைக்க வேண்டிய அவமானத்திற்கு வருத்தப்பட்டாள். அவர் எதிர்கொண்டு அழைத்துச் செல்வதில் சில சௌகரியங்கள் உண்டு. கதவு திறப்பதில், ஒரு தென்புடன் மாடிரும் செல்வதில், கீழ் வீட்டு மனிதர்களை எதிர்கொள்வதில் எதிலும் ஓர் அச்சமோ, குறுகுறுப்போ இருக்காது.

ஈஸ்வரியும், குழந்தைகளும் உள்ளே நுழைந்தபொழுது, வராந்தா லைட் எரியவில்லை. உள்ளே ஹாலில் எப்பொழுதும் எரியும் ட்யூப் லைட்டுக்குப் பதிலாகச் சின்ன விடிவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஹாலில் பாடம் படித்துக் கொண்டிருக்கும் ப்ரியாவையும், குமாரையும் காணவில்லை. உள்ளே ஏதோ ஓர் அறையில் விளக்கு எரிவது தெரிந்தது.

''அப்பாவைக் கூப்பிடு மணி!'' ஈஸ்வரி பிள்ளையை ஏவினாள்.

மணிகண்டன் ''அப்பா'' என்று கூவினான்.

கவிதா காலைக் கட்டிக் கொண்டு, ''தூக்கிக்க,'' என்று சிணுங்கிக் கொண்டிருந்தாள்.



இரண்டு நிமிஷம் மணிகண்டன் உள்ளே கூர்ந்து பார்ப்பதும், அம்மாவின் முகத்தைப் பார்ப்பதுமாய் இருந்து விட்டுத் திரும்பவும் ''அப்பா'' என்றான்.

குமார்தான் வெளியில்வந்தான். இதுவரை மணிகண்டன் குமாரை நேருக்கு நேர் சந்திக்கும் நிகழ்வுகள் அதிகமிருக்கவில்லை. கீழ் வீட்டுப் பையன் என்ற பரிச்சயம் மட்டுமே உண்டு.

''அப்பா இருக்காராடா?''

குமார் தன்னைத் தன் வீட்டினரும், குறிப்பாக அம்மா குரோதமாகப் பார்க்கும் ஒரு பெண்ணின் பையன் 'டா' போட்டுக் கூப்பிட்டுவிட்டான் என்ற கடுப்பைக் கண்களில் கொட்டினான். மளாரென்று கதவு திறந்தான். மணிகண்டனின் காலரைப் பிடித்து யாரும் எதிர்பார்ப்பதற்கு முன்னால், ''நீ யாருடா, என்னை டா போட்டுக் கூப்பிட?'' என்றான். மணிகண்டன் பதிலுக்கு எகிறாமல், 'ஓ'வென்று அழத் தொடங்கி விட்டான்.

ஈஸ்வரி அவனை வாரிக் கொண்டு, குமாரைப் பார்த்து, ''அப்படியெல்லாம் பேசக் கூடாது குமாரு!-மணி உன் தம்பி,'' என்றதும், குமார் திருத்தமாக, ''போடி'' என்று சொல்லிக் கதவை அறைந்து சாத்தி விட்டு உள்ளே போய் விட்டான்.

குமார் உள்ளே போனதும் அபிராமி வெளியில் வந்தாள். அவள் முகத்தில் சோர்வும், அசதியும் வருத்திக் கொண்டது போலத் தெரிந்தது. புடைவை கட்டிக் கொண்டிருந்ததில் ஓர் அசிரத்தை தெரிந்தது. விருப்பு, வெறுப்பு எதுவுமில்லாத முக பாவத்தை வலுக்கட்டாயமாக முகத்தில் திணித்துக் கொண்டிருந்தாள்.

''அவர் இல்லியா?'' என்றாள் ஈஸ்வரி.

அபிராமி ஒன்றுமே சொல்லாமல் கதவைத் திறந்து விட்டாள். தான் மிகவும் அவமானப் படுத்தப்படுவதாக ஈஸ்வரிக்குப் பட்டது. மணிகண்டனையும் கவிதாவையும் கூட்டிக் கொண்டு மாடி ரூமுக்குப் போனாள்.

கட்டிலில் போய் மூன்று பேரும் உட்கார்ந்துகொண்டார்கள். நாற்காலியில் அவருடைய கைலி சுருண்டு கிடந்தது. ஈஸ்வரி அதைப் பிரித்து, உதறி, மடித்து நைலான் கொடியில் போட்டாள். மணிகண்டன் முகத்தில் இன்னும் கவலையும், பயமும் மீதி இருந்தது. இவனுக்கு என்ன சமாதானம் சொல்ல? குமாரைப் பழிப்புக் காட்டுவதோ, அல்லது அவனை மட்டம் தட்டுவது மாதிரி 'குரங்கு, எருமைமாடு' என்று சொல்லுவதோ அவனைப் பற்றிய நல் அபிப்பிராயத்தை மணிகண்டனுக்கு ஏற்படுத்த முடியாது. குழந்தைகள் மிகவும் மெல்லியவர்கள். கைவாகுக்கு ஏற்றவாறு பிசையப்படும் பச்சைக் களிமண். குமாருக்குத் தன்னைப் பற்றியும், தன் குழந்தைகளைப் பற்றியும், அபிராமி மோசமான அபிப்பிராயத்தை ஏற்றப் போய்த்தான் அவன் இவர்களைக் குரோதமாகப் பார்க்கிறான். மணிகண்டனையும் அப்படி மாற்றக் கூடாது.

ஜன்னல் வழியாக அவர் மாடிப்படி ஏறி வருவது தெரிந்தது. அவள் குழந்தைகளையும் சேர்த்துக் கொண்டு, எழுந்து நின்றாள். அவரைப் பார்த்து ஒரு சிரிப்பை முகத்தில் ஒட்ட வைத்தபடி, ''வாங்க'' என்றாள். அவர் கவிதாவிடம் ஒரு பிஸ்கட் பொட்டலத்தை நீட்டினார்.

''ஏன் லேட்டு இன்னிக்கு?'' அவர் பதிலுக்குக் காத்திராமல் கேள்வி கேட்க வேண்டும் என்ற கடமையில் கேட்டதால் அவளும் ஒரு பொருட்டாக எடுத்துக் கொண்டு பதில் சொல்லாமல் இருந்தாள்.

சட்டென்று அவளுக்கு அவரிடம் கேட்க வேண்டிய சலுகைகள் ஞாபகம் வந்தன. மணிகண்டனுக்குச் சட்டைகள் சின்னதாகத் தொடங்கி விட்டன. உயர்ந்து வருகிறான். குமாருடைய பழைய சட்டைகள் இரண்டு, மூன்று வேண்டும் என்று கேட்க வேண்டிய சலுகைகளில் ஒன்றை ஏற்றிக் கொண்டாள்.

''சாப்பிட்டாச்சா?'' பொதுப்படையாகக் கேட்டார்.

''இல்லை'' என்றாள்.

உடனே அவர் கீழே குமாரையோ, ப்ரியாவையோ கூப்பிட்டுத் தயாராக வைத்திருக்கும் தூக்குக் கேரியரைக் கொண்டு வரச் சொல்லுவார் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அவர் சட்டையை மாட்டிக் கொண்டு, ''ஹோட்டலில் போய்ச் சாப்பிடலாம்,'' என்றார்.

போகும் பொழுதும், சாப்பிடும் பொழுதும் அவர் ஒன்றுமே பேசவில்லை. வரும் பொழுது ஈஸ்வரி பொறுக்க முடியாமல் கேட்டாள்.

''ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?''

''மனசு சரியில்லை.''

''ஏன்?''

''எனக்கும் அபிராமிக்கும் ஒத்துப் போக மாட்டேங்குது.''

''ஒத்துப் போகாம என்ன ஆச்சு?''




நிருபர்: உங்க வாழ்க்கையில் வியப்பூட்டிய நிகழ்ச்சி எது?

நடிகை: என்னுடைய பதினெட்டாவது கணவர், ஏற்கெனவே என்னால் விவாகரத்துச் செய்யப்பட்ட இரண்டாவது கணவர் என்று தெரிய வந்தபோது.

— எஸ். ப்ரியதர்சினி.

ஆம்ப்ரோ மில்க் பேஸ்

ஸ்கூல் குழந்தைகளின் பிஸ்கெட்



Sista's-EIL-245/89 TAM-A

பாலில் உள்ள எல்லா ஊட்டச்சத்துக்களும் அடங்கியது.



அரசியல்வாதி 1: ரொம்ப அநியாயமுங்க!

அரசியல்வாதி 2: எதைச் சொல்றீங்க?

அரசியல்வாதி 1: தலைவருக்கு எடைக்கு எடை சைக்கிள் செயின், பிச்சுவா, சோடா பாட்டில் கொடுக்கிறதுதான்!

— முகம்மது யூசுப்.

''திட்றா. உன்னைத் திட்றா. உன் பசங்களைத் திட்றா. என்னோட பொழுதுக்கும் ராவடிதான். நான் அவளுக்கு ஒரு உறு துணையா இல்லாமப் போயிடுவேன்னு பயப்படறா. உறவுக்காரங்க சொல்லிக் கொடுக்கிறாங்க. அவ அண்ணங்காரன் பழனிச்சாமி மாதத்தில் நாலு தரம் தங்கச்சியைப் பார்க்கன்னு வந்துடறான். சொத்து முழுவதும் அவ பெயரிலும், அவ பசங்க பெயரிலும் எழுதி வைன்னு பிடிவாதம் பிடிக்கிறா.''

ஈஸ்வரியிடம் இதை ஒரு செய்தியாகச் சொல்லாமல், இதற்கு அவளுடைய பதில் என்னவாக இருக்கும் என்பதை எதிர்பார்த்ததால் அவளுக்கு அந்த வாக்கியம் ஒரு கேள்வியாகவே பட்டது. இருந்தாலும் இதற்குப் பதில் சொல்வதில் உள்ள சிரமம் காரணமாகப் பேசாதிருந்தாள்.

''உயிலு எழுதறதைப் பத்தி அவளுக்கு ஒரு எழவும் தெரியலை. ஒரு தபா எழுதினா ஆயுசு முழுக்க அதுதான் சாசுவதம்னு நம்புறா. நா என்ன இளுபறின்னு சாகவா கெடக்கேன்?''

ஈஸ்வரிக்கு உயிலைப் பற்றி, அதை ஒரு முறைக்கு மேல் மாற்றி எழுதலாம் என்பதைப் பற்றி எல்லாம் தெரியாது.

''ஈஸ்வரி! நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். எனக்கு நிம்மதி வேணும். தினம், தினம் இந்தச் சனியோட மாரடிக்க முடியாது. வாழப்பாடியில் கொஞ்சம் பெரிய வீடாப் பாரு. ரெண்டு வேளையும் சேலத்துக்கு ட்ரெயினில் வந்து போயிக்கறேன். ஆமா! உன்னோட வந்து இருக்கிறதாத் தீர்மானம் பண்ணிட்டேன்.''

ஈஸ்வரிக்கு முதுகுத் தண்டு சில்லிட உதறியது. இது அதிகம். அவள் கேட்க நினைத்த சலுகைகளையெல்லாம் விடப் பெரிய சலுகை இது.

மறுநாள் முழுவதும் ஹோட்டலில் சாப்பிடுவதும், உமா தியேட்டரில் எம். ஜி. ஆர். படம் பார்ப்பதுமாய்ப் பொழுது கழிந்தது. சாயங்காலம் இறுக்கமான முகபாவங்களை ஏற்றிக் கொண்டு, இரண்டு பேரும் பேசாமல் இருந்தார்கள்.

அவர் ஓர் அனிச்சைச் செயலாகப் பர்ஸிலிருந்து பணத்தை எடுத்து எண்ணத் தொடங்கினார்.

''விலைவாசியெல்லாம்ஏகமாயிடுச்சுங்க. அரிசி பனைமர உசரத்துக்கு ஏறிடுச்சு. பயமா இருக்கு.''

''அதான் சொல்லிட்டேன்ல. ரெண்டு நாள்ல நானும் வாழப்பாடி வந்துடறேன்.''

ஈஸ்வரி பதில் சொல்லவில்லை. அவரைக் கூர்ந்து பார்த்தாள்.

''இல்லை ஈஸ்வரி! நான் வெறும் வெத்து வேகத்தில இதைப் பேசறேன்னு நினைக்காதே. அவசரப்பட்டுத் தீர்மானம் பண்ணலை. ஒரு மாசமா, ரெண்டு மாசமா? ஏழு வருஷமா, மாசா மாசம் நீதானே என்னைப் பார்க்க வர்றே? ஒரு சொல் இரைஞ்சு பேசியிருக்கியா? நானூறு, முந்நூறுன்னு என்னால் முடியறதைக் கொடுக்கிறப்போ, கூடக் கொடுன்னோ, நல்லதா ரெண்டு சேலை எடுத்துக் கொடுன்னோ கேட்டிருக்கியா? என் இளமைத் திமிர்ல உனக்கு மோசம் பண்ணிட்டேன். அது ஒரு மாறாத நோயா உன் உடலில்ஒட்டிக்கிட்டிருக்கு. அபிராமிக்கு நான் என்ன குறை வெச்சேன்? நெலத்திலேயிருந்து சோளம் வரலியா? வாடகை வீட்டிலிருந்து பணம் வரலியா? மாசம் ஒரு சேலை. வருஷம் ஒரு நகை. ஆனாக் கொஞ்சங்கூட நன்றி கிடையாது. தூ. சொல்லு! இன்னிக்கே கிளம்பிடவா?''

''வேண்டாங்க.''

''ஏன் வேண்டாம்?''

''எனக்குச் சரியாச் சொல்ல வரலீங்க. தெரிஞ்சவரை சொல்றேன். ரெண்டு பேர் இருக்கறதுனாலதான் உங்களால யார் நல்லவங்க, யார் கெட்டவங்கன்னு ஒப்பிட்டுப் பார்க்க முடியுது. நல்லவங்க, கெட்டவங்கங்கறது கூட உங்க சௌகரியம் பொறுத்து, உங்க வசதி பொறுத்து நீங்க தேடிக்கிற வார்த்தைகள். நல்லது கெட்டதுங்கிறதே மனிதர்களில் இல்லை. சந்தர்ப்பத்துக்கு ஏற்ற மாதிரி மாறிக்கிறாங்க. இதுதாங்க உண்மை. அப்படி ஒரு நிலைமை எங்களுக்கு வேணாங்க. நான் ஈஸ்வரியாவும், அவ அபிராமியாவும் இருந்துட்டுப் போறோம்.''

''என்ன சொல்றே ஈஸ்வரி?''

''என் கூட நீங்க வந்திட்டா என்ன ஆகும்னு யோசிச்சுப் பார்த்தேன். என்னை மாதிரி அபிராமியும் வாழப்பாடிக்கு 74 பஸ் பிடிச்சு குமாரையும், ப்ரியாவையும் கூட்டிக்கிட்டு வரணும். மாசா மாசம் நானூறும், ஐந்நூறும் அவ வந்து வாங்கணும். அந்தக் கொடுமை என்னோட போகட்டும்.''

அவர் சம்பளத்தில் டி. ஏ. கூடிவிட்டது என்பதால் ஈஸ்வரிக்கு மாதம் தோறும் கொடுக்கும் நானூறு ரூபாயுடன் கூடுதலாக நூறு ரூபாய் கொடுத்தார். அடுத்த முறை அவர் சந்தோஷமாக இருந்தால் மணிகண்டனுக்குக் குமாருடைய சட்டைகள் இரண்டைக் கேட்க வேண்டும்என்று நினைத்துக் கொண்டு ஈஸ்வரி குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு கிளம்பினாள்.

வல்லமை தாராயோ?

6

அந்தக் கடிதத்தின் முதல் வரி சுருக்கென்று தாக்க, நடப்பதை நிறுத்தி, அவசரமாகப் படிக்கத் துவங்கினாள் வந்தனா.

''என் அருமைக் காதலியே, வந்தனாவே...

''உன் இனிய குரலை ரேடியோவில் கேட்டுக் கேட்டு, உன் மீதான அன்பு என்னை ஆட்டிப் படைத்தது. உன்னைச் சந்திக்க வேண்டும் என்கிற உந்துதலை ஏற்படுத்தியது. சந்தித்தேன். ஆம். உனக்குத் தெரியாமலேயே. சந்தித்துக் கொண்டுமிருக்கிறேன். நீ ரேடியோ ஸ்டேஷன் வருகிற தினங்களில். நீ என்றைக்கு வருவாய் என்பது தெரிவதில்லை. அதனால் எல்லாத் தினங்களிலுமே வந்து, இரண்டு மணி நேரம் சாலையோரத்தில் காத்திருப்பேன். (ஒரு நாள் ஐந்து மணி நேரம் காத்திருந்தேன்) உன்னைப் பார்த்ததும் காத்திருந்த அலுப்பு கரைந்து போய்விடும். தப்பு! உன்னைப் பார்ப்பதற்காகக் காத்திருப்பதை அலுப்பு என்று குறிப்பிட்டது தப்பு. அது ஒரு தனிச் சுகம்.

''வந்தனா, என் உறக்கத்தைக் கெடுப்பவளே. இப்படி உனக்காக ஒரு ஜீவன் உருகிக் கொண்டிருப்பதை நீ அறிவாயா? நீ எவ்வளவு எளிமையாக உன்னை அலங்கரித்துக் கொண்டாலும், உன் அழகு பார்ப்பவர் மனங்களை அடித்துப் போடுவதை நீ உணர்ந்திருக்கிறாயா?

''வந்தனா, நான் உன்னைக் காதலிக்கிறேன்.... ஆகாயம் அளவுக்கு, கடல் அளவுக்கு, முடிவே இல்லாத இந்த பிரபஞ்சத்தின் அளவுக்கு. கடந்த ஆறு மாதமாக நான் உன் கடைக்கண் பார்வை என்மேல் விழாதா என்று ஏங்கித் தவித்து, தைரியம் பெற்று இக்கடிதம் எழுதுகிறேன்.

''வந்தனா, நீ என் காதலை ஏற்றுக் கொள்வாயா? ப்ளீஸ்... என்னை நிராகரித்து விடாதே. என்னால் அதைத் தாங்க முடியாது. எவ்வளவு கற்பனைகளை மூட்டை மூட்டையாகச் சுமந்திருக்கிறேன் தெரியுமா? நீயும் நானும் மட்டும் கை கோத்துக் கடற்கரை மணலில் கால்கள் புதையப் புதைய ஓட வேண்டும். கொட்டுகிற மழையில் ஒருவருக்கு மற்றவர் குடையாகிச் சுதந்திரமாகப் பு... வேண்டும். உன் சிறிய அதரங்களில் ...

பட்டுக்கோட்டை பிரபாகர்

துடிக்கும் அதரங்களால் கவிதை வடிக்க வேண்டும். நினைக்கவே சிலிர்க்கிறது.

''வந்தனா, பதினைந்தாம் தேதி மாலை ஐந்து மணிக்குக் காந்தி சிலையருகே உனக்காகக் காத்திருப்பேன். உன்னைக் கட்டாயம் எதிர்பார்க்கிறேன். சிவப்பு நிறத்தில் கறுப்புப் பட்டைகள் போட்ட சூரிதார் உன்னிடம் உள்ளதே, அதை நீ அணிந்து வந்தால் என் காதலை நீ ஏற்றுக் கொண்டதாக அர்த்தம். நானே வந்து அறிமுகப்படுத்திக் கொண்டு பேசுவேன். ப்ளீஸ், என்னை ஏமாற்றி விடாதே டார்லிங். உனக்காக மூன்று மணியிலிருந்தே காத்திருப்பேன்.

உன் காதலன்,
ஆனந்த்.''

படித்து முடித்ததும் வந்தனாவின் முகம் சிவந்து, உஷ்ணமாயிற்று. லேசான படபடப்பு வந்தது. காதலாம்! வரிக்கு வரி காமம் கொப்புளிக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மயக்கமான வார்த்தைகள்!

இது காதல் கடிதம் அல்ல! தூண்டில் முள்ளில் மாட்டின மண்புழு! மீன் வந்து மாட்டினால் லாபம், மாட்டவில்லையென்றால் எந்த நஷ்டமுமில்லை.



குரலைக் கேட்டானாம். காதல் பிறீட்ட தாம். நேரில் பார்த்தானாம். தினம் காத் திருந்தானாம். உருகுகிறானாம். கண்டதும் காதல் 'கொள்ள நான் காவிய' சீதை! இவன் காவிய ராமன்! இடியாட்டிக! வரிக்கு வரி தாலி கட்டின பெண்டாட்டியை அழைப்பது போல, நீ, உன்னை, என்று உரிமை காட்டி யுள்ள திமிர் பிடித்த இவனை.....

இந்தக் கடிதம் ஒரு ரகசிய அவமானம்! 'வர்றியாடி?' என்று கையைப் பிடித்து இழுப் பதற்கும் இதற்கும் என்ன அதிக வித்தியாசம்? கொஞ்சம் அலங்காரமான வார்த்தைகளில் அதே 'வர்றியாடி?' தான்.

யாராவது ஓர் ஆண் கடிதம் எழுதி அழைக்க மாட்டானா என்று ஏக்கமாக எல்லாப் பெண்களும் அலைந்து கொண் டிருப்பதாக இவனுக்கு நினைப்பா? அதென் னது. கவிதையா? ராஸ்கல்!

வந்தனா அந்தக் கடிதத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள். அவன் விலாசம் இல்லை. இன்றைக்குத்தான் அவன் குறிப் பிட்டிருக்கும் தேதி பதினைந்து என்பது நினைவுக்கு வந்தது. வருவான். கண்டிப்பாக வருவான். இவனைச் சந்தித்தேயாக வேண் டும். சந்தித்து.... என்ன செய்யலாம் இவனை?

சுத்தபத்தமாகக் குளிப்பதற்கு அடுத்த மழை அல்லது அடுத்த அக்டோபர் இரண் டாம் தேதியை எதிர்பார்த்துக் கொண்டு மகாத்மா நின்றிருந்தார். அருகே சலவை உடையும், மாலை நேரத்திற்கு அவ சியமில்லாத குளிர் கண்ணாடியும், பற்ற வைத்த சிகரெட்டுமாக அவன் அமர்ந்து காத்திருந்தான். தூரத்தில் அலைகள் ரிலே ரேஸ் நடத்திக் கொண்டிருந்தன.

சிலையை நோக்கிச் சிவப்புச் சுரிதாரில் நடந்து வரும் வந்தனாவைப் பார்த்ததும் அவன் உற்சாகமானான். எழுந்து கொண் டான். கைக்குட்டையால் முகத்தை ஒற்றிக் கொண்டான். வந்தனா ஒரு சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்ததும், இவன் அணுகினான். செருமினான். அவள் அருகில் அமர்ந்தான்.

''வந்தனா, எனக்கு ரொம்ப சந்தோ ஷம்.'' சிகரெட்டை விரலில் சுட்டுக் கொண்டு உதறினான். மெஜாரிட்டி பற் களை வெளிப்படுத்தினான்.

''நீங்கதான் ஆனந்தா?'' என்றாள் வந்தனா அமைதியாக.

''ஆமாம். இங்கே வேணாம். வர்றியா. உள்ளே கடல் பக்கத்திலே போய் உட் கார்ந்து பேசலாம்.''

''பேசலாம். வெய்ட். ஆனந்த். உங்க லெட்டரைப் படிச்சதும் எனக்கு உள்ளங் கால்லேர்ந்து உச்சந்தலை வரைக்கும் ஒரே... அதென்ன சொல்வாங்க...? ம், புளகாங் கிதம்!''

''எனக்குத் தெரியும், நீ கண்டிப்பா என் காதலை ஏத்துக்குவேன்னு.''

''சரி, நீங்க என்னைக் காதலிக்கிறீங்க. அப்படித்தானே?''

''ஆமாம்.''

''நீங்க யார்? என்ன மொழி, என்ன வேலை, என்ன சம்பளம், எங்கே வீடு, என்ன குணம் — இது எதுவுமே தெரிஞ்சுக் காமலே நானும் உங்களைக் காதலிச்சாச்சு.



இப்ப அடுத்தது என்ன? கல்யாணம் தானே?''

''ஆமாம் டார்லிங்.''

''நான் மேஜர். யாரையும் கேட்க வேண்டியதில்லை. காந்திதான் தெய்வம். கமான், இந்தாங்க...'' என்று தன் கைப்பையில் இருந்து மஞ்சள் கயிற்றை எடுத்து அவனிடம் நீட்டினாள். ''கட்டுங்க. என் கழுத்திலே கட்டுங்க.''

அவன் வெலவெலத்துப் போய் எழுந்தே விட்டான். முகம் உடனே வியர்த்து, 'இது வேறு மாதிரி டைப் போலிருக்கிறதே' என்று உணர்ந்து தடுமாற...

''என்னடா முழிக்கிறே? கட்ட வேண்டியதுதானேடா?'' என்று திடீரென்று அவன் சட்டையைக் கொத்தாகப் பிடித்த வந்தனா, ''பொம்பளைன்னா அவ்வளவு எளக்காரமாப் போச்சா? பிஸ்கெட்டைப் போட்டுக் கூப்பிடற நாய்ன்னு நினைச்சியா? சொக்கிச் சொக்கிக் கொக்கிப் போட்டு எழுதிட்டா, இளிச்சுக்கிட்டு வந்துடுவா, இலவசமா அனுபவிக்கலாம்னு பார்த்தியா? யூ ஸ்கவுண்ட்ரல்!''

அங்கங்கே தூரத்தில் இருந்தவர்கள் திரும்பிப் பார்க்க, சிலர் நெருங்கி வர, அவன் அவசரமாக, ''சிஸ்டர், ஸாரி. கையை எடுங்க. நான் போயிடறேன். எல்லோரும் பார்க்கிறாங்க,'' என்றான்.

''ஒரே செகண்ட்ல காதலி சிஸ்டராயிட்டாளா?''

இப்போது அங்கே ஒரு சிறிய கூட்டம் வட்டமாகக் கூடத் துவங்கியிருந்தது.

''**அ**ப்புறம்?'' என்றான் கோபி. மொட்டை மாடியில், சிவப்புச் சதுரக் கற்கள் பரப்பிய தளத்தில், மூங்கில் நாற்காலியில் அமர்ந்திருந்த கோபி, தன் மடியில் குழந்தை திவ்யாவை வைத்திருக்க, அது அவனது செயின் டாலரை எடுத்துச் சப்பிக் கொண்டிருந்தது.

அருகே சுவரில் சாய்ந்து முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்த வந்தனா, ''போலீஸ் பூத்ல புகார் எழுதிக் கொடுத்தேன். அவன் எழுதிய லெட்டரையும் கொடுத்தேன். நியூசென்ஸ் கேஸ்ல புக் பண்றதா இன்ஸ்பெக்டர் சொன்னார். என்னை அப்படி முறைச்சான் அவன். பட் ஐ டிண்ட் கேர்.

அவ்வளவு தூரத்துக்கு நீ போயிருக்கணுமா வந்தனா?''

''நான் செஞ்சதிலே என்ன தப்பு கோபி?''

''தப்புன்னு சொல்லலை. அவசியமான்னு கேட்டேன். அந்த லெட்டரை நீ கிழிச்சுப் போட்டுட்டு உன் வேலையைப் பார்த்திருந்தால் பிரச்னை முடிஞ்சுது.''

''அதெப்படி முடியும்? மறுபடி எழுதுவான். நேர்ல வழி மறிப்பான். அவன் அப்படி எழுதினது மோசமான காரியமா உனக்குப் படலையா?''

''அவனுக்குப் பக்குவம் இல்லை. இனக்

இதர எல்லா ஹேர் டைகளையும் சேர்த்தாலும் அவற்றைவிட ஏராளமான மக்கள் உபயோகிப்பது கோத்ரெஜின் தானே - பரவும் ஹேர் டை

அவற்றிற்கான 3 சிறந்த காரணங்கள்




இரண்டு கேசகரல் சாயல்களில் கிடைக்கிறது: ப்ளாக் மற்றும் டார்க் ப்ரவுன்

1 கோத்ரெஜின் தானே-பரவும் ஹேர்டை கேசத்திற்கு இயல்பான வண்ணத்தையும், தோற்றத்தையும் தருகிறது. இதிலே ஒரு உள்ளிணைந்த கண்டிஷனர் உள்ளது: இது கேசத்தை மென்மையோடும் படிமானத்தோடும் வைத்துக்கொள்ள உதவுகிறது. உண்மையிலேயே, நீங்களே சொன்னால் ஒழிய ஒருவரும் அறிந்துகொள்ள முடியாது.

2 இதர ஹேர் டைகளைப் போல் அல்லாமல், கோத்ரெஜின் தானே-பரவும் ஹேர்டை உபயோகிக்க எளிதானது, வசதியானது. ஆம், இது உங்கள் கேசத்தை ஷாம்பூ செய்வதுபோல் சுலபமானது.

3 கோத்ரெஜின் தானே-பரவும் ஹேர்டையின் தரத்தைப் பற்றி நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். காரணம், இது உங்கள் கேசத்தை பாதுகாக்கும் வண்ணம் விசேடமாகத் தயாரிக்கப்பட்டது. முழுமையான பாதுகாப்பு— இதுவே, கோத்ரெஜின் உறுதியளிப்பு.

கோத்ரெஜ்® வழங்கும் தானே-பரவும் பெர்மனெண்ட் ஹேர் டை.



CLARION/BGS/50/173 TML

கவர்ச்சிக்கும், காதலுக்கும் வித்தியாசம் புரியலை. அவசரப்பட்டுக் கிறுக்கிட்டான்.

"பேத்தாதே. இது இனக் கவர்ச்சியுமில்லை. காதலுமில்லை. உடம்புத் திமிர். ஆம்பளைக்கே உள்ள ஒரு தனித் திமிர். பாரேன் — நீயே அவனுக்குப் பரிதாபம் காட்டறியே... ஏன்? உன் இனம்."

"சேச்சே! உளறாதே. உன் நடவடிக்கை அதிகமோங்கிறதுதான் என் யோசனை. அவன் செஞ்சது நியாயம்னு நான் சொல்லலை."

"கோபி, யாராச்சும் காதல்னு பேசினாலே எனக்குப் பொசபொசன்னு வருது. பிகாஸ் அதைப் புரிஞ்சி பேசறதில்லை. வித்யா நினைப்புத்தான் வருது. சேலையை உத்தரத்திலே கட்டித் தொங்கினதைக் கண்ணால பார்த்துத் தொலைச்சுட்டேனா, அவளை நினைத்தால் அந்தக் காட்சிதான் மனசுல வருது. ஸ்கூல்லேர்ந்து ஒண்ணாப் படிச்சவ. எவ்வளவு விஷயத்தைப் பரிமாறிக்கிட்டோம்! லவ் பண்றேன்னு அவ சொன்னதுமே எச்சரிச்சேன். 'என் காதலர் உத்தம சிகாமணியாக்கும். அம்பிகாபதிக்கு அப்புறம் இவர்தான் பெஸ்ட்டாக்கும்'னு உருகினா. வயத்தில குழந்தையைக் கொடுத்துட்டு, கவர்லகேப்ஸ்யூல்ஸ்வாங்கிக்கொடுத்துட்டு, துபாய்ல வேலைன்னு மறைஞ்சுட்டான். இந்த மக்கு நீட்டா தூக்கிலே தொங்கிட்டா. மூணு தங்கச்சிங்க கல்யாணமாகாமே நிக்கிறாங்க. வர்றவனெல்லாம் அக்கா வரலாறு கேட்டுட்டு யோசிக்கிறான். காரணம் என்ன? அவனோட முதல் வலை வீச்சிலேயே இவ இறங்கிப் போய் விழுந்துதான். எனக்கு லெட்டர் எழுதினானே அயோக்கியன் அவனுக்கு வித்யா மாதிரி ஒரு அசடுதான் வேணும். காதலிக்கிறானாம். ராஸ்கல்!"

வந்தனாவையே பார்த்தான் கோபி. ஏதோ சொல்ல வாயெடுத்தான். பிறகு அதைச் சொல்லாமல் மௌனமானான். வந்தனா தன் படபடப்புக் குறையாமல் மேலும் பொறிந்து கொண்டேயிருந்தாள்.

குப்தாவின் கடையில் இருந்த வந்தனா போன் செய்தாள்.

"மிஸ்டர் அரவிந்துடன் நான் பேச முடியுமா?" என்றாள் ஆங்கிலத்தில்.

சில வினாடிகளில் அரவிந்த் ஹலோ சொன்னதும், "சார், நான் வந்தனா பேசறேன். உங்க பேட்டி இருபத்தி இரண்டாம் தேதி மத்தியானம் இரண்டே முக்காலுக்கு ஒலிபரப்பாகுது."

"அதாவது எல்லாரும் சாப்பிட்டுட்டுத் தூங்கிக்கிட்டு இருக்கிறப்போ. ஓக்கே. சும்மா தமாஷுக்குச் சொன்னேன். தேங்க்யூ மிஸ். வந்தனா. அப்புறம் ஒரு முக்கியமான விஷயம் இருக்கு. உங்களை நான் சந்திக்கணுமே..." என்றான் அரவிந்த்.

(தொடரும்)



மேகலா ஏன் மறுத்தாள்?

வெளியில் சென்று வீடு திரும்பினால், வாசலிலேயே, ''விசா..ல..ம்'' என்று ராகம் நீட்டுவார், சந்திரசேகரன்.

ஆனால், இன்று —

உதடு பிரியாமல், உற்சாகமில்லாமல், ஊறிப்போன அப்பளம் போல் உள்ளே நுழைந்தார்.

கணவரின் வருகைக்காக வாசலில் காத்திருந்த விசாலத்தின் முகத்தில் முடிச்சு விழுந்தது. உள் அறைக்குள் சென்றவர் 'பேசட்டும்' எனக் காத்திருந்தாள். ஆனால் —

அங்கேயும் மௌனம்தான். ஊமையாகவே உடைகளை மாற்றிக் கொண்டார்.

முகப்பறையில் படுத்திருந்த மகன் மகேஷ், பூஜை அறையில் பூவாய்ச் சுருண்டு கிடந்த மகள் ஜனனி — இருவரையும் மாறி மாறிப் பார்த்து விட்டு, நிதானமாய் மனைவியை நோக்கினார், அவர்.

''விசாலம்..'' என்று தயங்கினார். ''உன்னிடம் ஒன்று கேட்கட்டுமா'' என்று புதிர் போட்டார்.

அவளுக்கு வியப்பான வியப்பு. அத்தனையும் விழுங்கிக் கொண்டு, ''தாராளமாய்க் கேளுங்கள்'' என்றாள்.

''நீ... நீ... என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய்?''

''சும்மாத்தான்... சொல்லு. பதினேழு வருஷங்களாய்ப் பழகுகிறாயே. நான் நல்லவனா... கெட்டவனா சொல்லு. என் முகத்தைப் பார்த்தால் தப்புத் தண்டா பண்றவன் மாதிரி இருக்கா? உன் கணவன் என்பதற்காக எதையும் கூட்டவோ, குறைக்கவோ கூடாது. உன் மனசிலே பட்டதைப் பளிச்சென்று சொல்லணும். ம்... சொல்லு,'' படபடத்தார், அவர்.

''நிச்சயமா நீங்கள் நல்லவர்தான். அப்பழுக்கற்றவர். குறை சொல்ல முடியாத குணம். யாருக்குமே தீங்கு நினைக்காத நேர்மை. ''குழலூதும் கிருஷ்ண பரமாத்மா மாதிரி பால் வடியும் முகம். பழிகாரன் கூட உங்களைப் பார்த்தால் இரக்கப்படுவான். அதிருக்கட்டும். எதுக்காக இப்படிச் சுற்றி வளைக்கிறீங்க? என்ன நடந்தது? தயவு செய்து விஷயத்தைச் சொல்லுங்களேன்!''

''ஒன்பதரை மணி டவுன் பஸ்ஸைப் பிடித்து ஏறினேன், விசாலம். அதில் மேகலாவும் இருந்தா. எங்க ஆபீஸ்ல புதுசா ஜாயின் பண்ணியிருக்கிற ஜூனியர் அதிகாரி. சின்ன வயசு, இன்னும் கல்யாணம் ஆகலே. தனியா குவார்ட்டர்ஸ்ல இருக்கா. லீவுல அப்பா அம்மாவைப் பார்த்துட்டுத் திருநெல்வேலியிலிருந்து திரும்பிக்கிட்டிருந்தா... நாங்க காலனி ஸ்டாப்ல இறங்கறப்ப மணி பதினொண்ணு ஆயிடுச்சு... இருட்டு...

''இப்படி ஒரு சூழ்நிலையில் மணமாகாத ஒரு பெண் தனியே போவது, அல்லது போக அனுமதிப்பது எப்படிச் சரியாகும்...?''

''சரி இல்லைதான். அதற்காக நீங்கள் என்ன பண்ண முடியும்?''

நடந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த விசாலம், நயமாக இடைமறித்துக் கேட்டாள்.

சந்திரசேகரன், தொண்டையைக் கனைத்து விட்டுக் கொண்டார்.

''அதுக்குத்தான், மேகலாவை வீடு வரை கொண்டு வந்து விடட்டுமா?'' என்று கேட்

தமிழினியன்

டேன்.

''நல்ல யோசனைதான். அதற்கு என்ன சொன்னாள், அவள்?''

''இங்கேதான் என் முகத்தில் அவள் கரி பூசி விட்டாள், விசாலம்.''

''என்ன...?''

''நானே போய்க் கொள்வேன், சார். தாங்க்ஸ்' என்று பட்டென்று சொல்லி விட்டு விறுவிறுவென்று போய் விட்டாள்.''

''இதில் கரிபூச என்ன இருக்கிறது? அவளுக்குத் துணை வேண்டாம் என்று தோன்றி இருக்கும். நிராகரித்திருப்பாள்.''

''கிடையாது'' என்று அழுத்தமாக மறுத்தார், சந்திரசேகரன். ''போன மாதம் ஒரு நாள் ஆபீஸ் விட்டு வரும் போது கொஞ்சம் லேட்டாயிடுத்து. ஆறரை மணி இருக்கும். அவ்வளவாக இருட்டவில்லை. இருந்தாலும் ஓர் உபசாரத்துக்காக வீட்டில் கொண்டு வந்து விடட்டுமா?'' என்று கேட்டேன். உடனே, 'வந்தால் ரொம்ப உதவியாய் இருக்கும், சார்' என்று சிரித்துக் கொண்டே நான் கூட வர ஒப்புக் கொண்டாளே இந்த மேகலா.''

''அப்படியா!''

''ஆமாம். ஆறு மணிக்கு ஜன நடமாட்டம் இருக்கும். அப்போது வேண்டுமானால் ஓர் ஆடவன் துணை வரலாம். ஆனால், பதினொன்றரை மணிக்குத் தெரு முழுக்க அடிச்சுப் போட்ட மாதிரி இருக்கும். அந்தச் சமயத்திலே அதே ஆடவன் துணை வரக் கூடாது என்றால், அதற்கு என்ன அர்த்தம்?'' ஆத்திரமும் வேதனையும் போட்டி போட்டன அவரது முகத்தில்.

''இருட்டையும் யாருமில்லாத சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தி நான் இசகுபிசகா நடந்திடுவேன் என்ற சந்தேகம்தானே அதற்குக் காரணம்? என்னைப் பார்த்தால் அப்படியா இருக்கிறது. அறிந்த முகம் என்று வலிய உதவிக்குப் போனால் அவன் காமுகன் ஆயிடுவானா...? போக்கிரி ஆயிடுவானா...? சொல்லு விசாலம்... சொல்லு...'' இலேசாக மூச்சு வாங்கியது, சந்திரசேகரனுக்கு.

ஆனால், விசாலம் மென்மையாகச் சிரித்தாள்.

''இதொன்றும் சிரிக்கிற சமாசாரம் இல்லை, விசாலம். சீரியஸாய்க் கேட்கிறேன். சொல்லு.''

''மேகலா, உங்களை வேண்டாம்என்றதும் உடனே உங்களைப் பற்றித்தான் நீங்கள் அலசிப் பார்க்கிறீர்களே தவிர, அந்தப் பெண்ணின் நிலைமையைக் கொஞ்சமாவது சிந்தித்துப் பார்த்தீர்களா?''

''அவளுக்கு என்ன புடலங்காய் நிலைமை?''

''மனிதர்கள் புழக்கமான நேரத்தில் ஒரு பெண்ணும், ஆணும் சேர்ந்து போவதை யாரும் வித்தியாசமாய்ப் பார்க்க மாட்டார்கள். ஆனால், அகால வேளையில் அப்படிப் பார்க்கிறவர்களுக்கு உடனே விரசமாகத்தான் எண்ணத் தோன்றும். நீங்கள் என்னதான் வழித்துணையாகப் போனாலும், அவள் வழி மாறிப் போகிறாள் என்பதாகத்தான் கதைகட்டி விடுவார்கள். அந்தச் சிறு பொறி, அவளது எதிர்கால வாழ்க்கைக்கே உலை வைத்து விடும்...''

''விசாலம்...!''

''அந்த எச்சரிக்கையோடுதான் மேகலா, உங்கள் யோசனையைத் தட்டிக் கழித்திருக்கிறாள். மற்றபடி அவளுக்கு உங்கள் மீது உயர்ந்த அபிப்பிராயம் எப்போதுமே இருக்கும்.''

கலவரத்தால் களைத்துப் போன சந்திரசேகரனின் முகம் இப்போது தெளிவடைந்தது.

சோகம் நிறைந்த தீபாவளி.....



தீபாவளிக்கு முதல் நாள். பட்டாசைக் கொளுத்தி மேலே தூக்கிப் போட்டு வெடித்துக் கொண்டிருந்தான் கோபால். மதன் அதை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு சமயம் கோபால் வெடித்த வெடி மதனின் அருகில் சென்று வெடித்தது. இதைக் கண்டு பயந்த மதனின் தந்தை மதனை வீட்டிற்குள் அழைத்துச் சென்று விட்டார். மதன் அடம்பிடிக்கவே அவனைப் படுக்கை அறையிலுள்ள ஜன்னலின் வழியே வேடிக்கை பார்க்குமாறு கூறினார். மதனும் மகிழ்ச்சியுடன் அவ்வாறே செய்தான். திடீரென்று மதனின் அலறல் கேட்டது. கோபால் தூக்கிப் போட்டு வெடித்த வெடி ஒன்று அவனுடைய கண்ணருகில் வெடித்து கண்ணில் உள்ள 'பாப்பா' இரண்டாகப் பிளந்தது. நண்பர் உடனடியாக மதனை எழும்பூர் கண் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார். டாக்டர்கள் கண்ணில் தையல் போட்டனர். இப்பொழுது மதன் குணமடைந்து வருகிறான்.

இவ்வாறு விபத்தினை ஏற்படுத்தும் வெடி சிறுவர்களுக்குத் தேவைதானா? தேவை என்று அவர்கள் அடம்பிடித்தால் பெரியவர்கள் அருகிலிருந்து எச்சரித்து ஜாக்கிரதையாக வெடிக்கச் செய்ய வேண்டும்.

— எல். குருமூர்த்தி.



ஏழாவது இரவு
கதை:
அபர்ணா நாயுடு
சித்திரம்:
6
தொலைவில் ஓடிக் கொண்டிருந்த அவனையே பார்த்தாள் ரஞ்சனா.
கேள்விகள் முளைவிட்டன.
அவன் யார்? எதற்காக அவளைச் சுட முயல வேண்டும்? அவளது அலறலைக் கேட்டதும் ஏன் அதைக் கைவிட்டு ஓடவேண்டும்? வெறும் பயமுறுத்தல் முயற்சியா? அல்லது... எல்லாவற்றுக்கும் மேலாக, அவளையும் அவள் வந்திருக்கும் காரணத்தையும் அவள் அப்போது மாலினியின் வீட்டில் இருந்ததையும் அவன் எப்படித் தெரிந்து கொண்டான்?
தோளில் மென்மையான ஸ்பரிசத்தை உணர்ந்தாள். திரும்பினாள். ஒரு தட்டில் காப்பிக் கோப்பையுடன் மாலினி நின்றிருந்தாள்.
ஜன்னல் வழியா எதை வெறிச்சுப் பார்த்துட்டிருக்கே?
யாரோ ஒருவன் இங்கே வந்திருந்தான். அவன் கையில ஒரு துப்பாக்கி...
ஏனோ ஏனோ... அப்படியெல்லாம் நடக்கறதுக்கில்லை. ஏதாவது பகல் கனவா?
இல்லை. அவன் வந்தது நிஜம். நான் பயந்து அலறியது நிஜம். அதைக் கேட்டதும் அவன் ஓடியது நிஜம்.
அப்போ.. வசுமதி இறந்து போகிறதுக்கு முந்தி நடந்த சில விஷயங்கள் மர்மமா இருந்தது. இப்போ நீ வந்தவுடனேயே அதே மாதிரி நடக்கறதுன்னா.. யோசிக்கணும்.
நான் புறப்பட்டு வந்தப்போ ஒரு பிடிவாதமான முடிவோட தான் வந்தேன். அது எவ்வளவு கடுமையான முயற்சிங்கறதை அப்போ நான் உணரலை...









''இதோ எடுத்துட்டு வர்றேன்'' என்று மாலினி திரும்பினாள்.

அப்போது தொலைபேசி ஒலித்தது.

விரைந்து சென்று எடுத்தாள். மறுமுனை பேசியதும் அவள் முகத்தில் குழப்பம் சூழ்ந்தது. திரும்பி, யோசனை நிறைந்த முகத்துடன் ரஞ்சனாவைப் பார்த்தாள்.

''உனக்குத்தான்'' என்றாள்.

அருகில் சென்று அதை வாங்கினாள் ரஞ்சனா.

''ஹலோ'' என்றாள்.

''மிஸ்! நீங்க நினைச்சுக்கிட்டிருக்கிறது சரியில்லை. நீங்க போகிற பாதை சரியில்லை; எடுக்க நினைக்கிற முயற்சிகள் சரியில்லை; இதையெல்லாம் கைவிட்டுட்டு ஊருக்குத் திரும்பிப் போறதுதான் நல்லது.'' என்று கூறியது ஒரு கரகரத்த குரல்!

— தொடரும்

இதோ! பிரிமியர் ஹவுஸிங் கம்பெனியின் பங்குதாரரர் என்ற முறையில் நீங்கள் பெறலாம் சில சிறப்புரிமைகள்!



இப்பொழுதே, முதன்முதலாக பங்குகளை வாங்கினால், முன்னுரிமை முறையில் வீடு ஒதுக்கீடு; வீட்டின் விலையில் 2.5% தள்ளுபடி.

உங்கள் பங்குகள்	தள்ளுபடி
200	1.0%
250-300	1.5%
350-500	2.0%
500-க்கு மேல்	2.5%

ஆம்: செழிப்பான டிவிடெண்டோடு இப்படி சில சிறப்புரிமைகளையும் உங்களுக்குத் தருகிறது, பிரிமியர் ஹவுஸிங் பங்கு முதலீடு. இன்று அதிகபட்ச இலாபம் ஈட்டும் தொழில் வீடுகட்டும் தொழில்தான். இந்தியாவில் வீடு கட்டுவது தொடர்பான எல்லாப் பணிகளையும் அளிக்கும் பப்ளிக் லிமிடெட் கம்பெனி, பிரிமியர் ஹவுசிங் மட்டுமே! எனவே, உங்கள் பிரிமியர் ஹவுஸிங் பங்குகள் மிகமிக இலாபகரமான ஓர் முதலீடு.

இன்றே உங்கள் பங்குகளை வாங்குங்கள், கனரா வங்கி, பாரத ஸ்டேட் வங்கி அல்லது முக்கியமான புரோக்கர்களிடமிருந்து விவரங்களைப் பெறுங்கள்.

இஷ்யு துவக்கம்:
டிசம்பர் 15, 1989.
ஒவ்வொன்றும்
ரூ 10/- மதிப்புள்ள
18,00,000 ஈக்விடி பங்குகள்.

பிரிமியர் ஹவுஸிங் அளிக்கும்

PREMIER
Grihalakshmi
Equity Shares

பிரிமியர் ஹவுஸிங் அண்ட் இண்டஸ்ட்ரியல் எண்டர்பிரைசஸ் லிமிடெட்
5-C சாந்தி டவர்ஸ்
38 லஸ் சர்ச் சாலை
சென்னை 600 004

உங்கள் இல்லம் செழிக்க ஓர் இனிய முதலீடு!

R K SWAMY/PH/7585

வட்டமேஜை

* அட்டையில், வி. பி. சிங் — ராஜீவ் இருவரும் உண்மையிலேயே மோதுவது போன்ற பிரமையை ஏற்படுத்தி விட்டீர்களே!

இலால்பேட்டை, எஃப். ரியாஜ் அஹமது.

* அமேதி, ஃபதேபூர் ஆகிய தொகுதிகளை நேரடியாகச் சென்று பார்த்தது போல் இருந்தது உங்கள் தேர்தல் ஸ்பெஷல் ரிப்போர்ட். எதிர்க் கட்சிகளின் எளிமையான பிரசாரம் இனி வரும் தேர்தல்களுக்கு ஒரு முன் உதாரணமாக இருக்கட்டும்.

பி. பி. குளம், ம. செந்தில் நாதன்.

* தேர்தல் ஸ்பெஷலில் டெல்லி, அமேதி, ஃபதேபூர் ஆகிய இடங்களுக்குச் சென்று கல்கி நிருபர் திரட்டிய செய்திகள், அனைத்து அம்சங்களையும் அலசி ஆராய்ந்து, முழுமை பெற்றதாக அமைந்திருந்தன. பாராட்டுக்கள்.

நீடூர், காஜா கலையன்பன்.

* காங்கிரஸின் விளம்பரங்களை வைத்தே அவர்களை வாரி விட்டிருக்கிறீர்களே...! சபாஷ்!!

ஸ்ரீரங்கம், ஏ. எஸ். முரளி.

* பாரத நாட்டின் திருஉருவப் படத்தைப் போட்டு, தேர்தல் பிரசாரத்திற்காக ஏதோ காங்கிரஸ்காரர்கள் மட்டுமே உத்தம புத்திரர்கள் போலவும் மற்றவரெல்லாம் தேசத் துரோகிகள் எனப் பொருள்படும்படியும் வந்த விளம்பரங்களைக் கண்டு என் மனம் ஆற்ற மாட்டாமல் கொதித்தது. முதல் பக்கத்தில் அதற்குப் பதிலடியாக நீங்கள் தந்துள்ள விளக்கங்களையும் கார்ட்டூன்களையும் கண்ட பிறகுதான் சிறிதளவு ஆறுதலடைந்தேன்.


சென்னை — 28, எம். தியாகராஜன்.

* தலைவலிக்குச் சுக்குக் கஷாயம் போட்டுத் தருகிறேன் என்று சொல்லும் அந்த ஏர் ஹோஸ்டஸ் பாட்டி. அடக்க முடியாத குபீர்ச் சிரிப்பு!

மங்கைநல்லூர்,
ஆர். செல்வராணி.

* காங்கிரஸில் நேர்மையானவர்களுக்கும், அனுபவம் உள்ளவர்களுக்கும் மதிப்புக் கிடையாது என்பதை எல். இளையபெருமாளின் பேட்டி விளக்கியது.

தக்கோலம், அ. முஸ்தபா.



கொதித்த மனத்துக்கு ஆறுதல்.......

* கருத்துப் படம் என்பதே சற்று மிகைப்படுத்தப்பட்டது என்பார்கள். ஆனால் மிகைப்படுத்தல் இல்லாத கருத்துப் படங்களால் சாதனை புரிந்து வருகிறது கல்கி. என் கூற்றுக்குச் சரியான உதாரணம் இந்த வாரம் வெளிவந்துள்ள மூன்று கருத்துப் படங்கள். அதிலும் ராஜீவ் காந்தியை ஜெயலலிதா அறிமுகப்படுத்தும் அந்த கருத்துப் படம் உண்மையின் படப்பிடிப்பு. ஐயோ... நேருவின் பேரனுக்கு இந்தக் கதியா நேர வேண்டும்...?

திருக்குவளை,
கவிஞர். வெற்றிப்பேரொளி.

* 'பண நாயகத்தை முறியடிப்போம்' என்ற தலையங்கக் கருத்துக்கள் காங்கிரஸாரின் அடாவடித்தனங்களனைத்தையும் அக்கு வேறு, ஆணி வேறாக எடுத்துக் காட்டியது. அதைப் படிக்கும் இ. காங்கிரஸ்காரர்களும் கூட ராஜீவைத் தேர்ந்தெடுப்பது பற்றிச் சிந்திக்கவே செய்வார்கள்.

வேலூர், கே. ஆர். தேவேந்திரன்.

* இ. காங்கிரஸின் ஒவ்வொரு எதேச்சாதிகாரச் செயலையும் கண்டித்து, கல்கி உடனுக்குடன் எழுதி வருவது வரவேற்கத்தக்கது.

இராணிப்பேட்டை,
பேப்பர் கார்த்திக்.

* 'பண நாயகத்தை முறியடிப்போம்' என்ற தலைப்பில், தாங்கள் இவ்வாரம் எழுதிய தலையங்கத்தைப் படித்தேன். காங்கிரஸ் கட்சி தேர்தலுக்காகப் போஸ்டர்கள், ஜீப்புகள், வீடியோ டேப்புகள் பயன்படுத்துவது பண நாயகம் என்றால், சாதாரண சட்டமன்ற மருங்காபுரி இடைத் தேர்தலுக்குக் கேட்ட இடங்களில் எல்லாம் ஆழ் குழாய்க் கிணறுகள், மின் விளக்குகள், சாலைகள் போட்டுத் தந்த தி. மு. க. அரசின் செயலைப் பற்றி என்னவென்று கூறுவது?

லால்குடி, எம். இராஜேந்திரன்.

* ''மந்திரி பதவியை வேண்டாம் என்றவர்!'' என்ற தலைப்பில் சமீபத்தில் அமரரான சி. ஆர். நரசிம்மன் பற்றிய குறிப்பைப் படித்ததும் ஒரு பழைய நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. 1957இல் கிருஷ்ணகிரி நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக நரசிம்மன் போட்டியிட்டார். அவரை எதிர்த்து, சுயேச்சையாகப் போட்டியிட்ட தொழில் மேதை ஜி. டி. நாயுடு, ''நான் காங்கிரஸைத்தான் எதிர்க்கிறேன். நரசிம்மனை அல்ல. எனவே, நரசிம்மனுக்கு வோட்டுப் போடுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. என்னை விட அவர் அரசியலில் அதிக விவரம் தெரிந்தவர்'' என்றார்.

ஆவடிஊர், இரா. கந்தையா.

* நராக பதிலில் (5.11.89 இதழ்) அமைச்சர் பொன்முடி பற்றிக் குறிப்பிடுகையில், ''டாக்டர் அல்லவா? மருத்துவ ரீதியில் பேசுகிறார்'' என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அமைச்சர் பி. எச். டி. டாக்டர் பட்டம் பெற்றவர். மருத்துவத் துறை டாக்டர் அல்லர்.

கோவை — 20,
கா. மணிகண்டன்.

* சிறுமுகை பற்றிய சிறு கட்டுரையில் சிறு குறைகள்... முதலில், அந்த சினிமா மோக சிலை வியாபாரியின் பெயர் காரப்பன்; மாரப்பனல்ல. அடுத்து 'சிறுமுகை கதிரேசன்' புகைப்படத்திற்குக் கீழே 'மாரப்பன்' என்று ஆள் மாறாட்டம் செய்திருப்பது. 'சிறுமுகை' என்னும் பெயர்க் காரணம் பற்றி... ஊர் எல்லைத் தெய்வமாக, நெடுங் காலந்தொட்டு இருந்து வரும் ஒரு 'சிறுமுருகன்' கோவில், ''சிறுமுருகை'' என்று வழங்கப்பட்டு, நாளடைவில் சிறுமுகையாக மாறியது என்றும் ஒரு சாரார் வாதிடுகின்றனர். அந்தச் சிதிலமடைந்த நிலையிலிருந்த நூலகத்தைச் சீர்படுத்திய பெருமையில் முக்கிய பங்கு வகிப்பவர் விஸ்கோஸ் ஆலை 'எம்.டி.'!

கோவை — 5,
கலைக் கண்ணன்.

சனிக்கிழமை எண்ணெய் குளிப்பு ஏன்?



ஞாயிறன்று உழைக்க வேண்டியது ஏன்?

சனிக்கிழமை

சனி கிரஹத்தின் ஆதிக்கம் உள்ள தினம் இது. சோம்பேறித்தனத்தையும் களைப்பையும் உண்டாக்கும் நாள். தீவிர உடலுழைப்பு, அல்லது சிந்தனையில் ஈடுபடலாகாது. இது ஓய்வு நாள். எனவே நமது முன்னோர்கள், இந்த நாளை எண்ணெய் குளிப்புக்கு உகந்த நாளாக நிர்ணயித்துள்ளனர். தேக உஷ்ணத்தை குறைக்கவும் நரம்பு பிடிகளை தளர்த்தவும் எண்ணெய் குளிப்பு உதவும். சனிக்கிழமை காலை எண்ணெய் தேய்த்து குளிப்பது அனைவருக்கும் ''சௌபாக்யத்தை'' அளிக்கும் என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது.

ஞாயிற்றுக்கிழமை

சூரியன் சக்தியின் உருவம். சுறுசுறுப்பான பணியை மேற் கொள்ளவும் மூளைக்கு வேலை கொடுக்கவும் உகந்த நாள். இத்தினத்தில் எண்ணெய் குளிப்பு கூடாது. ஏனெனில் நரம்புத் தளர்ச்சி ஏற்படக் கூடும். செயல்திறன் குறையும். மும்முரமாக உழைக்க வேண்டிய நாள் இது.

ஞாயிறன்று எண்ணெய் ஸ்நானம் செய்தால் இருதய நோய் ஏற்படும் என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது.

''ஆரோக்கியம்''

பெண்களுக்கு: வெள்ளியன்று எண்ணெய் ஸ்நானம் செயய வேண்டுமென்று நிர்ணியிக்கப்பட்டுள்ளது. சுக்கிரன் அனைத்து செல்வத்தையும் சந்துஷ்டியையும் பெண்களுக்கு வழங்குகிறது. மேலும் வெள்ளியன்று எண்ணெய் குளிப்பு பெண்மைத் தன்மைகளை வளர்க்கிறது.

ஆனால் எங்களது சுவையான இனிப்பு காரப் பண்டங்களை வாங்க எந்த நாளும் நன்னாளே.

திருமண வைபவங்களுக்கு, சீர்முறுக்கு, பருப்புத் தேங்காய், அதிரசம் ஆகியவற்றை தயாரித்துக் கொடுக்கிறோம்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24-2-வது மெயின் ரோடு,
காந்தி நகர் அடையாறு
சென்னை - 600 020
போன்: 412557.



எம்.ஜி.ஆர். நினைவாக...

எம்.ஜி.ஆர். நினைவாலயத்தில் முறைகேடுகள் என்ன?



* தேனிசைப் பாடல்கள்

* அ. ராஜா ரஹ்மான், திருப்பரங்குன்றம்.

? 'எம்.ஜி.ஆர். சமாதியைக் கருணாநிதி திறந்து வைத்தது, காந்திக்கு கோட்சே கோவில் கட்டியது போல' என்று ஜெயலலிதா பேசியிருக்கிறாரே?

! அநாகரிகத்தின் உச்சகட்டம். இப்படி தாறுமாறாக உணர்ச்சிகளைத் தூண்டி விடுவது போல் தலைவர்கள் தரம் கெட்டுப் பேசுவதுதான் தேர்தல் பிரசாரங்களின் போது தொண்டர்களிடம் வன்முறை தலைதூக்கக் காரணம்.

* எஸ். ராம்கோபால், சென்னை — 33.

? கலைஞருக்கு ''ஜால்ரா'' என்றால் கல்கிக்கு ஏன் கோபம் வருகிறது?

! கோபம் இல்லை, வருத்தம். கலைஞர் ஆட்சிக்கு வந்த பிறகு அவரை, அவரது கட்சியை அல்லது ஆட்சியை எத்தனை முறைகுறைகூறி கல்கி விமர்சித்திருக்கிறது!... பத்து மாதக் கல்கி ஏடுகளைப் புரட்டி பட்டியல் போட்டுப் பாருங்கள், புரியும். ஆனால் அதே நேரத்தில் நீங்கள் 'ஜால்ரா' என்று கூறி விடுவீர்களோ என்பதற்காகப் பயந்து நல்லது ஒன்று நடக்கும் போது, அதைப் பாராட்டாமல் இருக்கவும் முடியாது, கூடாது. உ.ம்: டெலிஃபோன் செலவை ஒவ்வொரு இலாகாவும் இருபது சதம் குறைக்க வேண்டும் என்று தமிழக அரசு சமீபத்தில் பிறப்பித்திருக்கும் உத்தரவு. இந்தச் சிக்கனப் போக்கு இத்துடன் நில்லாமல், வேறு பல துறைகளுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். தீவிரமாக அமுலாக்கப்படவும் வேண்டும்.

* சாமா, சீர்காழி.

? நாட்டில் எரிவாயு உற்பத்தி அதிக அளவில் இருந்தும் ஸிலிண்டர் தட்டுப்பாடு நீடிக்கிறதே?

! உற்பத்தியாகும் எரிவாயுவை வீணாகாமல் பல்வேறு விதங்களில் பயன்படுத்திக் கொள்ளத் திட்டங்களைத் தீட்டாமலே எரிவாயு உற்பத்தியை அதிகரித்ததால் ஏற்படும் பல கோளாறுகளில் ஒன்றுதான் நீங்கள் குறிப்பிடுவது. பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள எரிவாயுவை வீணாக எரித்துக் கொண்டிருக்கிறார்கள். இது தேசிய நஷ்டம் மட்டுமல்ல; உலகளாவிய நஷ்டம்! ஏனெனில் உலகம் முழுவதிலுமே இயற்கை எரிபொருள் செல்வம் குறைந்து கொண்டே வருகிறது. இவர்கள் ஸிலிண்டர் தட்டுப்பாட்டை நீக்குமுன், எரிவாயுப் பற்றாக்குறை ஆரம்பமாகி விட்டால் வியப்பதற்கில்லை.

* ம. செந்தில்நாதன், மதுரை.


? ஒரு பெண்ணைக் கற்பழிக்க முயன்ற அமைச்சருக்குக் காங்கிரஸ் ஸீட் கொடுத்துள்ளது பற்றி...?

! பூ! இது என்ன பிரமாதம்? உ.பி. சட்டசபைத் தொகுதிகளில் நிற்கும் இ. காங்கிரஸ் வேட்பாளர்களில் ஒரு டஜன் பேர் வழிகளுக்கு மேல் கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்று பீனல்கோடில் உள்ள பல்வேறு குற்றங்களைச் செய்தவர்கள் தான்! ஒரு பட்டியலே தந்திருக்கிறது, இந்தியா வீக்!

* Tact

* விதிகளை மீறி...





* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? மறைந்த பின்னணிப் பாடகர் திருச்சி லோகநாதனின் தேனிசைப் பாடல்களில் உங்கள் மனத்தில் நிற்பவை?

! கப்பலோட்டிய தமிழனில், 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?' — முதலிடம். மந்திரிகுமாரியில், 'வாராய்! நீ வாராய்!' — இரண்டாமிடம்.

* ஸி. செல்வராஜ், ஆரோவில்.

? தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின் வளர்ச்சித் திட்டங்களை, (இந்திரா மஹிளா யோஜனா) பிரதமர் அறிவித்தது பற்றி?

! நன்னடத்தை விதிகளை மீறுகின்ற முதல்தர மோசடி! 'இதைக் கட்சி அறிவிக்கிறது; ஆட்சியல்ல' என்ற விளக்கம், அதை விடப் பெரிய மோசடி! 'கட்சி 5000 கோடி



* காரிலிருந்தபடியே...

செலவழிக்குமா?' என்ற கேள்விக்குப் பதில் இல்லை! தேர்தல் கமிஷன் விளக்கம் கேட்டதற்கும் பதில் இல்லை! தேர்தல் கமிஷனின் கடிதமோ, தந்தியோ, டெலெக்ஸோ எதுவுமே தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று காங்கிரஸ் சார்பாக ஆனந்த் சர்மா கூறுவது இமாலய மோசடி!

* வானவில் மூர்த்தி, கடலூர்.

? சிதம்பரத்தில் செல்வி. ஜெயலலிதா காரிலிருந்தபடியே எம்.ஜி.ஆர். சிலையைக் கயிறு இழுத்துத் திறந்து வைத்தது பற்றி...?

! விடுங்கள் ஸார்! மூட்டு வலியில் அவதிப்படுகிற அவரை இதற்கெல்லாம் குறை கூற வேண்டாம். ஆனால் வீரப்பனைப் பிரசாரம் செய்ய வேண்டாம் என்று திருப்பி அனுப்புவதும், எஸ்.டி.எஸ்.ஸை மேடை ஏற விடாமல் தவிக்கச் செய்வதும், நெடுஞ்செழியனைக் கேட்பாரற்றுக் கிடக்கச் செய்வதும் மூட்டு வலியினால் அல்ல; தலை கனத்தினால்!

* ஏ. எம். பழனிச்சாமி, கோவை.

? எம்.ஜி.ஆர். நினைவாலயத்தில் தாங்கள் காணும் நிறை, குறைகள் என்ன?

! அதன் எளிய அழகு அதன் நிறை, என் போன்றவர்களுக்குக் கலை. ஆனால் எளிய மக்களுக்கு அதன் எளிமையே பெரிய குறை!

* ஏ. பி. வரதராஜப்பெருமாள், திருத்தங்கல்.

? யாருடைய தொப்பி அல்லது தலைப்பாகை உங்களை ரொம்பக் கவர்ந்தது?

! தொப்பிக்கு டிரேட் மார்க் எம்.ஜி.ஆர். தான். அது, நடிக்காத போது அவர் அணிந்தது. தலைப்பாகை? ராஜீவுக்குப் பெரிய மைசூர்த் தலைப்பாகை அணிவித்து, பெங்களூர் முழுவதும் போஸ்டர் ஒட்டியிருக்கிறார்கள் பாருங்கள்! கண்ணைக் கவராமல் இருக்கவே முடியாது! இது நடிப்புக்காக அணிவது!

* ஏ. டி. பூவராகவன், விருத்தாசலம்.

? 'ராம ஜென்ம பூமியில் அமைதியான முறையில் அடிக்கல் நாட்டு விழா நடந்ததற்குப் பாராட்டு எங்களையே சேர வேண்டும்' என்று ராஜீவ் கூறியிருக்கிறாரே? அமைதிக்குப் பங்கம் நேர்ந்திருந்தால்? அசம்பாவிதம் நிகழ்ந்திருந்தால்?

! எதிர்க் கட்சிகள் பக்கம் கையைக் காட்டியிருப்பார்!

* ரகுவீர், சென்னை.

? சென்னையில் ராமஜன்ம பூமி கோயிலுக்கான செங்கற்கள் ஊர்வலமாகச் சென்ற போது பதற்ற நிலை ஏற்பட்டிருக்கிறதே?

! ஊர்வலத்தை நடத்தும் பொறுப்பில் இருந்தவர்களால் தங்கள் தொண்டர்களையே கட்டுப்படுத்த முடியவில்லை — Fact. போலீஸ் கமிஷனர் துரை நிலைமையை சமத்காரமாகச் சமாளித்தார் — Tact. இந்து மதம் எனக்குக் கற்றுத் தந்திருப்பது 'கடவுள் சர்வ வியாபி' என்பதே. அவரை என்னால் மசூதியிலும் காண முடியும்; முஸ்லிம் சகோதரரின் உள்ளத்திலும் பார்க்க முடியும். 'ஈசுவர, அல்லா தேரே நாம்!' என்று காந்திஜியும் இதைத்தான் குறிப்பிட்டார். இதைப் புரிந்து கொண்ட ஹிந்து எவனும் வீண் வம்பை விலைக்கு வாங்க எண்ண மாட்டான்!

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

ஸி. செல்வராஜ்,
எச். ஆர். செண்டர்,
ஆரோவில் — 605 101.



தங்கமான ராசா

கிராமத்துக்கு ஏற்ற மெஸேஜ். முந்தைய தலைமுறையின் விரோதம் அடுத்த தலைமுறையைத் தொடர்வது அர்த்தமில்லாதது. இதுதான் விஷயம்.

அழகான ராமராஜனை எம். ஜி. ஆர். வாரிசு என்கிறார்களே, அர்த்தத்தோடு தான். கதாநாயகி வட்டமிட்டு வளைய வந்து பிறாண்டுவதும் நாயகன் பிகு பண்ணிக் கொண்டு முறுக்குக் காட்டுவதும் முந்தையவர் முத்திரை அல்லவோ? அப்படியே ஒற்றி எடுத்திருக்கிறார். கனகாவிடம் கொஞ்சல் குலாவல் குதூகலித்தலில் மாணாவாரிக் கிளுகிளுப்பை வாரி இறைத்திருந்தாலும், பெரியப்பா பெண்ணிடம் கொட்டும் பாசத்திலும் ஜன்மப் பகை காட்டும் அண்ணனிடம் தழைந்து போகும் கெஞ்சுதலிலும் இதம் காட்டுகிறார்.

கனகா அறியாய இழைசல். அந்தப் பெரிய கண்களில் ஒன்று மட்டும் — புரிகிற சேட்டை ஏராளமான ரசிகர்களைப் பெற்றுத் தரலாம்.

ரொம்ப நாளைக்கப்புறம் ராஜீவ். அகம்பாவம், முரட்டுத்தனம், குள்ளநரித் திட்டம் அத்தனைக்கும் மொத்த உரு. போகிற போக்கில், 'அத்தை, நான் சொல்கிற மாப்பிள்ளைக்கு உன் இரண்டாவது பொண்ணைக் கட்டி வைக்கலை, அப்புறம் உங்க முதல் பொண்ணு உங்க வீட்டுக்கு வாழாவெட்டியா வருவா,' என்று சொல்லி விட்டுப் போவது திக்கென்கிறது.

ஒரு சுற்றுச் சுற்றிவிட்டுக் கவுண்டமணி — செந்தில் ஜோடி கைகோத்திருக்கிறது. கவுண்டமணிக்கு ஊமையாய் வேடம் கட்ட நேர்ந்தாலும் நேர்ந்தது. செந்தில் அவரைக் காலை வாரிவிட்டுக் கன்னாபின்னாவென்று திட்டும் உதையும் வாங்குவது கலகலப்பு.

வித்தியாசமான காரெக்டரில் வினு. வயசான அந்த முற்றல் குரலில் சொட்ட விடும் உருக்கமாகட்டும், குடும்பப் பாசத்தைக் கொட்டும் நெகிழ்ச்சியாகட்டும் பிழிய வைக்கிறார்.

தங்கை ராசி. வயசை மறக்கடிக்கிற குழந்தைத்தனமான பார்வை, பழுதில்லாத முகம். இந்தண்டை கொடுமைக்கார அண்ணனின் கெடுபிடி, அந்தப் பக்கம் பாசத்தால் அர்ச்சிக்கும் அண்ணனின் நேசம் — இரண்டுக்கும் இடையில் கண்ணீர்ப் பூக்கள் சொரியும் பாந்தம் நெஞ்சில் நிற்கிறது.

காந்திமதி நிறைந்திருக்கிறார். இரண்டு குடும்பத்தினரும் அடித்துக் கொள்ளும் போது, 'நான் ஏன்தான் இந்தக் குடும்பத்தில் பொண்ணாப் பொறந்தேனோ,' என்று தலைத்தலையாய் அடித்துக் கொள்ளும் தவிப்பு யதார்த்தம்.

நீர்க் கூந்தலாய் வழியும் அந்த ஏரிக்கரை மதகடி, கண்ணுக்கெட்டிய தூரத்துப் பசுமை, மஞ்சள் பூக்கள் — அலுக்காத குளுமைகள்.

கிராமத்துத் தெம்மாங்குகளில் இளையராஜா கொட்டும் கின்னாரங்கள் கிக்கடிக்க வைக்கின்றன.

நாகரிக மோசடிகளுக்கு மாற்றாக, இந்தக் கிராமத்துப் பாசநேசம் எத்தனையோ மேல் தான்.

— பி. எஸ். எஸ்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.


ஜலதோஷம் பறந்து போச்சு!
யூக்கலிப்டஸ்
அடங்கிய
அமிர்தாஞ்சன்
கோல்ட் ரப்
குழந்தைகளின்
மென்மையான
சருமத்திற்கு மிகவும்
இதமானது...
அன்னையின்
அன்பான
அரவணைப்பைப்
போல...
புதிய
15 கிராம்
5 கிராம்
Amrutanjan's
Cold Rub
அமிர்தாஞ்சன்
கோல்ட் ரப்
ஜலதோஷத்திலிருந்து துரித நிவாரணம்
HTA 7351

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka